₹10
fmpb

Volume 55
Issue 8
August 2025

# அறைகூவல்

*“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.”* பிலி. 4:6







## ஜெபம்





### ஜெபத்தில் இன்னும் அதிகமாய் அவருடன்...

இவைகளிலும் அதிகமாய்
யோவான்.21:15

# ஆரம்ப வரிகள்...



## பரலோக கதவுகளை ஓங்கித் தட்டுவோம்

ஸ்காட்லாந்து பிரஸ்பைடிரியன் தேவாலயத்தின் நிறுவனர் ஜான் நாக்ஸ் தனது மரணத் தருவாயில் யோவான் 17ஆம் அதிகாரத்தை வாசிக்கும்படி தன் மனைவியைக் கேட்டுக்கொண்டார். இவ்வேத பகுதியில்தான் அவர் முதன்முதலில் தனது ஆவிக்குரிய ஜீவியத்திற்கு நங்கூரமிட்டிருந்தார். இயேசு கிறிஸ்துவின் ஜெபத்தின் மூலம் அவர் பெலப்பட்டு, தேவனை அறியாதோர்களுக்காக மற்றும் உபத்திரவத்திற்குள்ளாக கடந்து சென்றுக்கொண்டிருந்த ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக தேவனிடம் தனது படுக்கையிலிருந்தபடி மன்றாடிக்கொண்டிருந்தார். இவ்வாறு அவர் ஜெபித்துக்கொண்டிருக்கும்போதே அவரின் ஆவி எடுத்துக்கொள்ளப்பட்டது. இவரைக் குறித்து ஸ்காட்லாந்தின் ராணி மேரி கூறியதாவது **"எனது எதிரியின் படைகளைக் காட்டிலும், ஜான் நாக்ஸின் முழங்காலுக்கு பயப்படுகிறேன்"**. இவ்வாறு அவர் தனது இறுதி மூச்சுவரை ஜெப ஊழியத்தை செய்து வந்தார்.

ஜெபம் என்பது தேவனிடமிருந்து கிடைக்கப்பெறும் காணக்கூடாத வல்லமையாகும். அது நாம் தேவனிடம் அனுதினமும் எடுத்துச்செல்லும் ஏதோ ஒரு பட்டியல் அல்ல. மாறாக அவரோடு நாம் அனுபவிக்கும் ஒரு உறவாகும். நமது அன்றாட நடைமுறை வாழ்வில், பிரயாணங்களில், அலுவல்களில் மற்றும் ஓய்வு நேரங்களில் அவரோடு உறவாடுவது மற்றும் நாள்முழுவதும் அவரைப்பற்றி சிந்தித்துக்கொண்டே இருப்பதுமாகும்.

நமது இயக்கத்தின் ஆறாவது நெறிமுறை **ஜெபமாகும்** (பிலி.4:6). ஜெபம் நமது இயக்கத்தின் உயிர்நாடியாகவும், ஜெபக் குழுக்கள் இயக்கத்தின் முதுகெலும்பாகவும் இருக்கிறது. பரிசுத்த வேதாகமம் தேவனைப் போற்றுதல், பாவ அறிக்கை செய்தல், நன்றி செலுத்துதல், மன்றாட்டு ஜெபம், விண்ணப்பம் மற்றும் பலவிதமான ஜெபங்களை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. இவ்வகையான ஜெபங்களை தனித்தனியாக அல்லாமல் சூழ்நிலைக்கேற்றவாறு செய்வதின் மூலம் தேவனோடுள்ள நமது உறவை இன்னும் ஆழப்படுத்திக்கொள்ள உதவுகிறது.

மனித உடலில் ஒரு பிரச்சனை ஏற்படும்போது நரம்பு மண்டலம் வேகமாக உடல் முழுவதும் தகவலை அனுப்பி, அதற்கு ஏற்றவாறு ஹார்மோன்களை அல்லது நோய் எதிர்ப்பு அமைப்பினை தூண்டிவிட்டு செயல்படுகிறது. அதேபோன்று நமது இயக்கத்தின் அங்கமான விசுவாசியோ, ஊழியரோ, சுதேச ஊழியரோ, பங்காளரோ அல்லது நமது தேசமோ ஒரு பிரச்சனையை எதிர்கொள்ளும்போது அந்த வலியை உணர்ந்தவர்களாக கருத்தாய் ஜெபிப்பதோடு பிறரையும் ஜெபிக்க வைத்து, தேவனின் செயலினைக் கண்டு அவரைத் துதிக்க ஆவலுடன் காத்திருக்கிறோம். நமது அலுவலகம் தூத்துக்குடியில் இருந்த சமயம் நமது ஆவிக்குரிய மூத்த அண்ணன் மார்கள் தேசத்தின் மீட்பிற்காய் ஜன்னல் கம்பிகளை பிடித்துக்கொண்டு கதறி அழுது ஜெபித்தனர். இப்படிப்பட்ட அனுபவங்கள் நமது சரித்திரத்தின் ஒரு பங்காய் மட்டும் அமைந்துவிடாமல் இன்று ஊழியத்தை செய்தும், தோள் கொடுத்தும் வருகிற நமது வாழ்வின் அங்கமாய் மாறிவிடுவது அவசியம். மேலும் ஒரு சுதந்திர தினத்தைக் கொண்டாடக் காத்திருக்கும் இந்தியர்களாகிய நாம், அனுதினமும் வாசிக்கும், கேட்கும் மற்றும் அறிந்துகொள்ளும் எல்லா செய்திகளையும் ஜெபத்தின் மூலம் தேவனிடம் தெரியப்படுத்துவோம். நாம் நம் தனிப்பட்ட ஜெபத்தாலும், கூட்டு ஜெபங்களாலும், விண்வீட்டு கதவுகளை இணைந்து உலுக்குவோமாக!

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**"ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்"** *மாற்கு 11:24.*

**தேசங்கள் தமது கால்களில் நிற்கச் செய்ய, முதலில் நாம் முழங்கால் படியிட வேண்டும்.**
*– பில்லி கிரஹாம்*

**"நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல் களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்."** *1 தீமோ. 2:1*

**தேவன் மனிதர்களுக்கு அருளும் தாலந்துகளில் சிறந்ததும், உன்னதமானதுமான தாலந்து ஜெபிப்பது ஆகும்.**
*– அலெக்ஸாண்டர் வைட்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

## அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை – 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுச்செயலாளரிடமிருந்து...

பிரியமுள்ள ஜெபப் பங்காளர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

சவாலான காலக் கட்டங்களில் நாம் எப்பொழுதெல்லாம் பயணிக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் கர்த்தர் ஒரு ஆழமான, அடிப்படை உண்மையை பதியவைக்கிறார். அது என்னவெனில், தேவப்பிள்ளைகளின் இடைவிடாத ஜெபமானது வல்லமையையும், வார்த்தையில் அடங்கா புதிய அனுபவத்தையும் தருகிறது என்பதே!

## ஊழியப் பணியின் நாடித் துடிப்பு

லூக்கா 18:1-8லுள்ள ஓர் விதவையின் கருத்தான வேண்டுதல் பரலோகத்தையே அசைத்தது என்ற முன்னுரையுடன் துவங்கும் இப்பகுதியில் இயேசுவானவர் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க ஒரு உவமையை தன் சீஷர்களுக்குச் சொன்னார்.

நாம் சந்திக்கும் சோதனைகள் அனைத்தையுமே அறிந்தவர் அவர். பெலனிழந்து, மனம் தளர்ந்து தேவனை நோக்கி ஜெபிக்க இயலாமல் அமைதியடைந்த சூழலில் இருக்கிறோமா? ஓர் அநீதியான நீதிபதியின் அலட்சியமான. இறுமாப்பான செயலை, பெயரோ, தகுதியோ, செல்வாக்கோ இல்லாத விதவையின் விடா முயற்சியுள்ள செயல் எவ்விதம் மாற்றியதோ அதுபோல நம்மையும் அழுத்திக்கொண்டிருக்கும் அனைத்துப் பிரச்சனைகளிலிருந்து விடுவிக்க கர்த்தர் வல்லவராக இருக்கிறார். எனவே தொடர்ந்து பின்வாங்காமல் முன்னேறிச் செல்லவும், விடாமுயற்சியுடன் செயல்படவும், ஊழியத்தைவிட்டுப் பின்வாங்காமல் இருக்கவும் இப்பகுதி நமக்கு சவால் விடுகிறது.

இந்த உவமை நமக்குத் தரும் பெரும் நிச்சயம் என்ன? தேவனுக்கு பயப்படாத, மனுஷரை மதியாத நியாயாதிபதியே விதவைக்கு நியாயம் செய்யும்போது, அவரை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிற அவருடைய பிள்ளைகளுக்கு தேவன் நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? வேதம் முழுவதிலும் விசுவாசத்துடன் ஜெபத்தில் விடாப்பிடியாக இருப்பவர்களை கர்த்தர் எவ்விதம் கனம் பண்ணினார் என்பதை நாம் காண முடியும்.

**அன்னாள்:** 1 சாமுவேல் 1:10-20 வசனங்களில் தாங்க இயலாத மிகுந்த வேதனையில் மனங்கசந்து கர்த்தரிடம் அழுது ஜெபித்த ஜெபத்திற்கு உடனடியாக பதில் கிடைக்கவில்லை என்றாலும்

அவளுடைய விடாப்பிடியான ஜெபம் ஏற்ற வேளையில் சாமுவேல் என்ற மாபெரும் தலைவரும், இஸ்ரவேலின் தீர்க்கதரிசியுமானவர் பிறந்து தேசத்தின் விடுதலைக்கு வித்தாக மாறியது.

**எலியா:** 1 இரா. 18:41-46இல் கர்மேல் பர்வதத்தில் தன் ஜெபத்திற்கு தேவன் தந்த மாபெரும் வெற்றிக்குப் பின்பும் மழைக்காக ஜெபிக்க எலியா தன் முகம் முழங்காலில் படி தன்னைத் தாழ்த்தி ஜெபித்தார். முதல் அடையாளமான கையளவு மேகம் தெரிவதற்கு ஏழுமுறை வானத்தைப் பார்க்க தன் வேலைக்காரனை அனுப்பிக்கொண்டே இருந்தார். நீதிமானாகிய எலியாவின் ஜெபம் கூட பலனைத் தருவதற்கு தளர்ச்சியடையாத, விடாப்பிடியான ஜெபம் அவசியம் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

**ஆதிகால திருச்சபை:** அப். 1:14, 12:5இல் ஆரம்ப கால விசுவாசிகள் இடைவிடாமல் ஜெபத்தில் இணைந் திருந்தனர். பேதுரு சிறையில் அடைக்கப்பட்ட பொழுது ‘‘சபை அவருக்காக ஊக்கமாக ஜெபித்தது. அவர்களின் ஊக்கமான, தளர்ச்சி யடையாத ஜெபம் பேதுருவின் வாழ்வில் அற்புதமான விடுதலையைத் தந்தது”. ஜெபம் சிறை கதவுகளை திறந்தது மட்டுமல்ல ஆவிக்குரிய வாழ்விலும் நடந்த அதிசயத்தை உணர உதவியது.

நம் இயக்கத்தின் பணியில், ஊழியத்தின் துவக்கம் கிராமங்களிலோ, நகரங்களிலோ துவங்கவில்லை. மாறாக அது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து துவங்குகிறது. எனவே தொடர்ந்து ஆழமாய், அசையா உறுதியுடன் ஜெபத்தில் முன்னேறுவோம்.

**தொலைந்து போனவர்கள் (The Lost): நற்செய்தியை ஒருபோதும் கேள்விப்படாதவர்கள்.** இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும் (யோ.10:16). இந்த நற்செய்தியை கேள்விப்படாதவர்கள் கேள்விப்படவும், கிறிஸ்துவின் வாழ்வுதரும் வார்த்தைகளால் கழுவப்படும் வரையிலும் நாம் அழுது மன்றாடி ஜெபிப்போம்.

**சிறியவர்கள் (The Least): ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள்.** சங்.113:7இல் அவர் சிறியவனை புழுதியிலிருந்து தூக்கி விடுகிறார். எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார் என்ற வார்த்தையை எடுத்துச் செல்லும் நம் பரிசுத்தப் பணி, இதயங்களை மட்டுமல்ல, எல்லா வீடுகள் மற்றும் சமுதாயங்ளையும் மாற்றிட தொடர்ந்து அவரிடம் மன்றாடுவோம்.

**கைவிடப்பட்டவர்கள் (அ) பின்தங்கியவர்கள் (The Last): மறக்கப்பட்டவர்கள் அல்லது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருப்பவர்கள்.** 2 பேதுரு 3:9இல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்பதில் தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார். நித்தியத்தின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த பரலோக பாக்கியம் இல்லை என்ற நிலை வருவதற்கு முன்பாக நாம் திறப்பிலே நின்று மன்றாடுவோம்.

**விசுவாசம் நிறைந்த ஜெபம்:** மற்றவர்கள் பார்க்கும்படியான நீண்ட ஜெபம் அல்ல. லூக்.18:8லுள்ள உவமையில் இயேசுவானவர் "மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" என்று ஒரு கேள்வியுடன் முடிக்கிறார். நாம் எவ்வளவு நேரம் ஜெபித்தோம் என்பதை விட என் ஜெபம் தேவன் செயல்படுவதற்கு ஆதாரமான விசுவாசத்துடன் இருந்ததா? என்பதுதான் முக்கியமானது.

பிரியமானவர்களே! தளர்ச்சியடைய வேண்டாம். நாம் கூப்பிடும் நீதிபதி அநீதியுள்ளவர் அல்ல. அவர் நம் தகப்பன், நம் பாதுகாவலர், நம் மீட்பர். இந்த உலகம் நம்மை கையாலாகாதவர்களாகவோ, காலாவதியானவர்களாகவோ அல்லது சிறியவர்களாகவோ பார்க்கலாம். ஆனால் நம் ஜெபங்கள் பரலோகத்தை அசைத்து பாதாளத்தை அதிரச் செய்பவை. வரலாற்றையே மாற்றக் கூடியவை. எனவே விதவையின் கூப்பிடுதல் நம் கூப்பிடுதலாகட்டும்.

- தளர்வடையாததாக – Persistent
- பேரார்வமுடையதாக – Passionate
- விசுவாசமுடையதாக – Full of Faith மாறட்டும்

கடந்த மாதத்தில் நமது பணித் தளங்களிலுள்ள உடன் ஊழியர்களோடு பயணித்தது மிகவும் சந்தோஷமாக இருந்தது. பல கூடுகைகளில் கர்த்தர் எவ்விதம் கிருபையாய் அதனை நடத்தினார் என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சியாகவும், பெரும் பாக்கியமாகவும் இருக்கிறது. இது என்னை இன்னும் தாழ்த்தி, தெய்வீக அழைப்பின் கனத்தை உணர்த்தி ஊக்கத்துடன் முன்னேற உதவியது.

ஜூன் 18, 19 தேதிகளில் நடைபெற்ற டிவிஷனல் செயலர்களின் கூடுகை ஒருவரை ஒருவர் ஜெபத்தில் தாங்க உதவியாக இருந்தது. அவர்கள் பகிர்ந்துகொண்டபோது ஒவ்வொரு பகுதிகளிலும் தேவன் நிகழ்த்தும் காரியங்களை அறிந்து தேவனுக்கு நன்றி செலுத்தவும், புது பெலத்தோடு முன்னோக்கிச் செல்லவும் உதவியது.

## நிர்வாகக் குழு கூட்டம்

ஜூன் 21, 22 தேதிகளில் நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டம் ஜெபத்துடனும், தெய்வீக ஞானத்துடனும் நடைபெற்றது. ஊழியர்களின் தனிப்பட்ட, ஊழிய மற்றும் எதிர்காலத் திட்டங்களின் செயல்பாட்டைக் கருத்தில் கொண்டு அர்ப்பணிப்பில் தொய்வில்லாமலும், தெளிவுடனும், ஒற்றுமையுடனும் செயல்பட உதவிய நிர்வாகக் குழுவினர் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

## பணித்தள பயணம்

பெயிண்ட் மற்றும் கோதாவரி பிராந்தியங்களில் பயணிக்கும் பொழுது கர்த்தரின் உத்தமத்தையும், தளர்ச்சியடையாது, தொய்வில்லாமல் உழைத்து நமது ஊழியர்கள் பெற்ற கனிகளின் புதிய தொடர்புகளையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

அவர்களுடைய பிராந்திய திட்டமிடுதல், சுவிசேஷ பணியாளர்களுடைய பகிர்வுகள், சபை மூப்பர்களுடனான ஐக்கிய நேரங்கள் வெறும் நிர்வாக அடிப்படையில் இல்லாமல் தேவ

பிரசன்னத்தால் மெருகேற்றப்பட்டது. நம் ஊழியர்களின் மூலம் கர்த்தர் நடப்பிக்கும் செயல்களின் வளர்ச்சி யைக் கண்டு மகிழ்ந்தேன். தொடர்ச்சி யான எதிர்ப்பைக் கேட்டு மன வேதனைப்பட்டேன். இவைகளின் மத்தியிலும் தேவனை நோக்கி முன்னேறும் நம் ஊழியர்களுக்காக தேவனைத் துதித்தேன். விடுதியில் பயில்கின்ற பிள்ளைகளைச் சந்தித்தது ஓர் அற்புதமான மற்றும் ஆழமான தாக்கத்தை உருவாக்கியது. இந்த விலை மதிப்பற்ற சிறுவர், சிறுமிகள் கல்வி மட்டுமல்ல கிறிஸ்தவ ஒழுக்கத்தையும், தெய்வீக அன்பையும் கற்று வருகின்றனர். இதன் விளைவாக தாங்கள் சார்ந்த சமுதாயத்திற்கு தீப் பந்தங்களாக ஜொலிக்க சீடராக்கப்படுகிறார்கள் என்பது ஒரு நெகிழ்ச்சியான தருணமாக இருந்தது. உங்களின் ஜெபம், ஈகை மற்றும் உழைப்பு இதில் முதலீடாக்கப்படுவதை உணர முடிந்தது.

## வலுப்படுத்தப்பட்ட சபை மற்றும் ஊழிய கூட்டாண்மை

கடந்த ஜுன் 28ஆம் தேதி வட இந்திய குஜராத் திருச்சபைகளின் பேராயர் Rt. Rev. சில்வானஸ் கிறிஸ்டியன் மற்றும் முக்கிய அலுவலகப் பொறுப் பாளர்களையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். இந்த சந்திப்பு ஆழ்ந்த புரிந்துணர்வையும், ஆவிக்குரிய பொறுப்பையும், தேவ இராஜ்யக் கட்டு மானத்தில் இணைந்து உழைக்கும் அர்ப்பணத்தையும் வலுப்படுத்தியது. இந்த சந்திப்பு குஜராத் மண்ணில் தேவ ஊழியம் இன்னும் ஆழமாக வேரூன்றிடவும், அறியப்படாத மக்கள் கர்த்தரை அறிந்திடவும் ஆவியானவரால் பாரப்படுத்தப்பட்ட நிகழ்வாய் அமைந்தது.

## மண்டல செயலர்களின் குடும்ப சந்திப்பு

குஜராத்திலுள்ள போக்டி பயிற்சி நிலையத்தில் கடந்த ஜுன் 29, 30 தேதிகளில் வட இந்திய பணித்தள மண்டல ஊழியர்களின் குடும்பங் களுடன் செலவிட்ட நேரங்கள் மறக்கயியலாத ஒன்று. திரைமறைவாய் நின்று குடும்பப் பொறுப்புகளோடு ஊழிய தலைமைத்துவத்தை அத்தனை நேர்த்தியாய் நடத்தும் இந்த ஊழியர்களுக்காக தேவனைத் துதிக்கின்றேன். இரண்டு நாட்கள் தேவனைத் துதிக்கும் நேரங்கள், ஊழிய பகிர்வுகள், இணைந்து சிந்தித்த நேரங்கள் இந்த அழகிய குடும்ப அமைப்பின் விலைக்கிரயத்தையும், ஆழந்த விசுவாசத்தையும் உறுதிப் படுத்தியது.

## கர்நாடக மாநில விரிவுப்பணி செயலர்கள் சந்திப்பு

ஜுலை 5-7 வரை கர்நாடக மாநில விரிவுப்பணி செயலர்களுடன் செலவிட்டநேரங்கள், அவர்களின் ஆர்ப்பாட்டமில்லா ஊழிய ஆழம், ஆச்சரியமூட்டும் ஊழியத்தின் புதிய அணுகுமுறைகளைக் காண முடிந்தது. அவர்களின் ஊழிய அறிக்கைகளும், மறு ஆய்விற்கான திட்டமிடலும், இணைந்து ஜெபித்ததில் பெற்ற உத்வேகமும் எனக்கு நம்பிக்கையைத் தந்தது. பல சவால்களுக்கு மத்தியில் ஜோதியாய் புதிய எல்லைகளில் கர்த்தர் கதவுகளைத் திறந்து பாரமுள்ள புதிய ஜெபக் குழுக்களையும், ஊழியர்கள்

மற்றும் தலைவர்களையும் திரளாய் தருவதை விசுவாசக் கண்களால் காண முடிந்தது.

## கிறிஸ்தவ ஊழியர் ஐக்கிய கூட்டமைப்பு

ஜுலை 9ஆம் தேதி மற்ற இயக்கத் தலைவர்களுடன் ஊழிய விரிவாக்கத்தை குறித்த கலந்துரையாடல் ஒரு பரந்த தரிசனம் மிகுந்ததாய் அமைந்தது. நம் இடைவிடாத ஜெபங்கள், இராஜ்ய ஒருங்கிணைப்பிற்கான இணைந்த ஊழிய அணுகுமுறைகள் குறித்த ஆலோசனைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

## மத்திய மண்டல விரிவுப்பணி செயலர்கள் கூடுகை

ஜுலை 12ஆம் தேதி மதுரை, தேனி, விருதுநகர் மாவட்ட ஜெபக் குழுத் தலைவர்களுடன் செலவிட்ட நேரங்கள் மிகுந்த மகிழ்ச்சியான பயனுள்ளதாக அமைந்தது. அவர்களுடைய ஆவிக்குரிய அனுபவமும், ஆழ்ந்த விரிவுப்பணி அனுபவங்களும் இக்கூடுகையை மெருகேற்றியது. அவர்களின் பகிர்வுகள் வரவிருக்கின்ற ஊழிய செயலாக்கத்திற்கு தெளிவான திசையை நோக்கி பயணிக்க உதவியது. இராஜ்ய விரிவாக்கத்திற்கு கரம் கோர்த்து நிற்கும் இந்த தலைவர்களின் அசைக்கயியலா அர்ப்பணிப்பிற்காகவும், தேவ சித்தத்திற்கு மாத்திரம் தலைவணங்கும் ஒப்படைப்புக்காகவும் தேவனை உள்ளத்தின் ஆழத்திலிருந்து துதிக்கின்றேன்.

## தொழில் முனைவோர் குடும்பக் கூடுகை – மதுரை

ஆண்டுதோறும் கூடுகின்ற இக்கூடுகை இவ்வாண்டு மதுரை லேடிடோக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. குடும்பங்களாக சுமார் 400 பேர் கூடி வந்திருந்தனர். ஒவ்வொருவரின் தியாகத்தையும், திரைமறைவான ஊழியங்களையும், கண்ணீரின் ஜெபங்களையும், காணிக்கைகளையும் கர்த்தர் கனப்படுத்துவதை உணர்ந்தவனாக கூடியிருந்தவர்களைக் கண்டு தேவனைத் துதித்தேன்.

## தேசிய உபவாச ஜெபத்திற்கான அழைப்பு

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் இரண்டாம் வாரத்தை நாம் தேசிய உபவாச நாட்களாக அனுசரிக்கின்றோம். இவ்வாண்டு ஆகஸ்டு 8ஆம் தேதி முதல் 10ஆம் தேதி வரை திருப்பத்தூரில் நடைபெறும். இந்த உபவாச ஜெப நாட்களை முக்கியப்படுத்தி கலந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றேன். நீங்கள் மட்டுமின்றி உங்கள் சபை, ஜெபக்குழு அங்கத்தினர்கள், சொந்த குடும்பத்தினர் என அனைவரும் கலந்துகொள்ள முயற்சி எடுங்கள். நம் தேசத்திற்காகவும், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களுக்காகவும் தேவ சமுகத்தில் மன்றாடுவோம். இது ஒரு ஆவிக்குரிய யுத்தம். மாம்சத்தோடும், இரத்தத்தோடும் போராடவில்லை. ஜெபம் ஒன்றே நமது ஆயுதம்.

நாம் நேசிக்கும் தேசத்தின் 78வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில் இதற்காக போராடியவர்களின் தியாகங்களை நினைவு கூறவும், அனுபவிக்கும் சுதந்திரத்திற்காகவும், அனைத்து வளங்

களுக்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் நீடித்த அமைதி, நீதி, மெய்யான நல்வாழ்வு அமைந்திட ஜெபிப்போம்.

- நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் ஞானத்துடனும், தெய்வீக சாயலுடன் தலைமைத்துவம் அமைய...
- வன்முறை, ஒடுக்குமுறை மற்றும் பிரிவினைகள் முற்றிலும் அகன்றுபோக...
- தேவனுடைய நற்செய்தி ஒவ்வொரு தனி மனிதனின் இதயத்தையும், வீட்டையும் இரட்சிப்பினால் அலங்கரித்து, விசுவாசத்தில் பெலப்பட்டு மறுரூபமடைய..

சுதந்திரத்தைக் கொண்டாடுவது மட்டும் இந்த தேச குடிமகனின் கொண்டாட்டமாக இல்லாமல் கர்த்தர் தரும் மெய்யான விடுதலையை அனுபவித்து கொண்டாடும் கொண்டாட்டமாக அமைய ஜெபிப்போம்.

“சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்” (ஆபகூக் 2:14). நம் இந்திய திருச்சபையும் இந்நாட்களில் உப்பாக, ஒளியாக உயர்ந்து நிற்கட்டும்.


*தொடர்ந்து ஜெபிப்போம்!*

*விரைந்து முன்னேறுவோம்!!*

*விசுவாசத்துடன் வாழ்வோம்!!!*

இத்தேசத்திற்கு அன்பை வெளிப்படுத்தி, நம்பிக்கையூட்டி சேவை செய்வோம்!

தாழ்மையுடன் தேவ பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**


## கடவுளின் கண்ணாடி

கடவுளின் கண்ணாடி என்ற இந்தப் புத்தகம் இன்று கிறிஸ்துவுக்குள், ஆன்மீக வாழ்க்கையில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை மிகத் துல்லியமாக பிரதிபலித்துக்காட்டும் ஒரு சிறந்த புத்தகமாகும். இயேசு கிறிஸ்து யோவானுக்கு தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தின விசேஷம் அத்தியாயம் 2 மற்றும் 3இல் உள்ள ஏழு சபைகளுக்கும் வழங்கிய செய்திகள் நம்மை நாம் நிதானித்துப் பார்க்க உதவும் கண்ணாடிகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு சபைக்கும் வழங்கப்படும் செய்திகள் அந்தந்த காலக்கட்டங்களில் கிறிஸ்தவர்களின் உள்ளார்ந்த ஆன்மீக வாழ்க்கையை பிரதிபலித்துக்காட்டும் ஒரு கண்ணாடியாக தெரிகிறது. இங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ள செய்திகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதோடு, நீங்களும் உங்கள் மூலம் மற்றவர்களும் கடவுளின் இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கான படிக்கல்லாகவும் இருக்கும். தனிப்பட்ட மற்றும் குழு வேத ஆராய்ச்சிக்கு மிக சிறந்த புத்தகம்.




**நன்கொடை ரூபாய் 100/- மட்டுமே**

# ஜெபம்


**“சுவாசிக்காமல் உயிருடன் இருப்பதும், ஜெபிக்காமல் கிறிஸ்தவராக இருப்பதும் சாத்தியமில்லை’’** என மார்ட்டின் லுத்தர் கூறுகிறார். ஜெபம், தேவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பை வளர்க்கிறது. சோதனையை ஜெயிக்க உதவுகிறது. ஆறுதலையும், மன அமைதியையும் அளிக்கிறது. ஆவிக்குரிய யுத்தத்தில் ஒரு ஆயுதமாக ஜெபம் செயல்படுகிறது. நமது இயக்கத்தின் நெறிமுறைகளில் ஒன்று **ஜெபம்** ஆகும். கிறிஸ்து நமக்கு அநேக உபதேசங்களை கற்றுக்கொடுத்திருந்தாலும், அதில் ஜெபத்தைக் குறித்து இரண்டு இடங்களில் விவரித்து கற்றுக்கொடுக்கிறார் (மத். 6:9, 9:38). இப்பகுதியில் நாம் ஏழு விதமான ஜெபங்களைக் குறித்து கற்றுக்கொள்வோம்.

## 1 | தனக்காக ஜெபித்தல்
(ஆதி. 28:20-21):

யாக்கோபு தன்னுடைய உணவு, உடை, பாதுகாப்பு போன்ற சுயதேவைக்காக ஜெபிக்கிறார். இது புதிய விசுவாசிகள் ஜெபிக்கும் ஜெபம். நாம் ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்த பின்பு மேலான காரியங்களை கேட்க பழகிக் கொள்கிறோம். இதைக் குறித்து மத்.6:25-33 வரை இயேசு தமது சீஷர்களுக்கு தெளிவாகக் கூறுகிறார். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார் (மத்.6:32). சாலமோன் கர்த்தருக்கு உகந்த விண்ணப்பத்தை செய்ததினால் (1 இராஜ.3:10) அவர் கேளாத மற்ற ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார் (1இராஜ.3:13). இன்று நமது வாழ்வில் நம் சொந்த விருப்பங்கள் நிறைவேற ஜெபிக்கிறோமா? அல்லது தேவ சித்தம் நம்மில் நிறைவேற ஜெபிக்கிறோமா? நாம் தேவனுக்கு பிரியமாய் வாழ நம்மை ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

## 2 | ஆசீர்வாதத்திற்கான ஜெபம்
(1நாளா.4:10)

யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னை



துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கி காத்தருளும் என்று ஜெபிக்கிறார். தாவீதும் இதேபோல் சங்.67:2இல் எங்களுக்கு இரங்கி எங்களை ஆசீர்வதித்து எங்கள் மேல் உமது முகத்தை பிரகாசிக்கப்பண்ணும் என்று ஜெபிக்கிறார். நாம் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள கருத்தாய் ஜெபிப்போம்.

## 3 | மற்றவர்களுக்காக ஜெபம் (1சாமு.7:8)

இஸ்ரவேல் ஜனங்கள் பயந்ததினால் சாமுவேலினிடத்தில், எங்களுக்காக ஓயாமல் வேண்டிக்கொள்ளும் என்று கேட்டார்கள். சாமுவேலும், உங்களுக்காக நான் ஜெபிக்காவிடில் பாவம் செய்கிறவனாக இருப்பேன் என்கிறார் (1சாமு.12:23). கர்த்தர் யோபுவின் சிநேகிதர்களிடம் யோபு உங்களுக்காக வேண்டுதல் செய்வான் என்று சொல்லுகிறார் (யோபு 7:8). அப்படியே யோபுவும் ஜெபித்தார் (யோபு 42:10). யாக்கோபும் தன்னுடைய நிருபத்தில் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டும் என்று எழுதுகிறார் (யாக்.5:16). நாமும் பிறருடைய பாரங்களை நம் பாரமாய் ஏற்றுக்கொண்டு அவர்களுக்காக கரிசனையோடு ஜெபிப்போம்.

## 4 | நமது கடின நேரங்களில் ஜெபம் (1சாமு.30:4-8)

தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது கர்த்தர் அவனை விடுவித்து, எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி செய்தார் (1சாமு.30:19). அதேபோல் தன் வியாதியின் நேரத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். அதற்கும் தேவன் பதிலளித்தார் (சங்.38:11). யோசபாத் நெருக்கப்பட்ட நேரத்தில் கர்த்தரைக் கூப்பிட்டபோது கர்த்தர் பதில் தந்தார் (2நாளா.20:5-12). நாம் நமது பணித்தளங்களில் கடும் உபத்திரவங்களை சந்தித்து வரும் விசுவாசிகளுக்காக, ஊழியர்களுக்காக பாரத்தோடு, கண்ணீரோடு ஜெபிப்போம். ஆபத்துக்காலத்தில் விண்ணப்பிக்கவேண்டுமென்று தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். (சங்.91:15, 50:15, எரே.33:3).

## 5 | ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஜெபம் (எபே.1:15-19)

கர்த்தரை அறிவதற்கான ஞானம், தெளிவு, பரிசுத்தாவியின் வழிநடத்துதல் மற்றும் பிரகாசமான மனக்கண்கள் வேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். எபே.3:15-19இல் உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும், கிறிஸ்துவின் அன்பினில் வேரூன்றி, நிலைப்பெற்றவர்களாக இருக்கவும் ஜெபிக்கிறார். கொலே.1:9-11இல் கூறப்பட்டுள்ளபடி நாம் கர்த்தரின் சித்தத்தை அறியவும், கர்த்தருக்கு பிரியமாய் நடக்கவும் அவரது வல்லமையால் பலப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

## 6 | ஊழியர்களுக்கான ஜெபம் (அப்.4:30)

ஆதி திருச்சபை மக்கள் அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்தனர். பேதுரு சிறைச்சாலையில் இருக்கையில்

மரியாளுடைய வீட்டில் கூடி பேதுருவின் விடுதலைக்காக ஜெபித்தனர் (அப்.12:12). பரி. பவுல் எபேசு மக்களிடம் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறார் (எபே.6:19-20). இயேசு கிறிஸ்துவும் நமக்காக பிதாவினிடத்தில் ஜெபித்தார் (யோ.17:20). இக்கடைசி நாட்களில் அநேக இடங்களில் ஊழியங்களுக்கு எதிர்ப்பும், தடைகளும் அதிகரித்து வருவதோடு, ஊழியர்கள் தாக்கப் படுவதும், கைது செய்யப்படுவதும் வழக்கமாகிக் கொண்டிருக்கிறது. எனினும் ஊழியர்கள் சோர்ந்து போகாமல் தைரியமாய் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும், தேவன் அவர்களைப் பாதுகாக்கவும் அனுதினமும் நாம் ஜெபிப்போம்.

## 7 | பரிந்து பேசும் ஜெபம்

(ஆதி.18:23-33, யாத்.32:11-13)

இது ஒரு மேன்மையான ஜெபம். கிறிஸ்துவும் நமக்காக இன்றும் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் (1யோ.2:1). தேவனோடு மிகவும் ஐக்கியமாயிருப் பவர்களுக்கு இப்படிப்பட்ட ஜெபிக்கும் கிருபை கிடைக்கிறது. தேவன் ஆபிரகாமை தன் சிநேகிதன் என்று கூறுகிறார் (ஏசா.41:8). ஆபிரகாம் அப்படிப்பட்ட ஐக்கியமுள்ளவராய் இருந்தார் (ஆதி.17:22, 18:22,33). மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தரிடம் கெஞ்சி ஜெபிக்கிறார் (யாத்.32:13). மேலும் கர்த்தர் மோசேக்கு மேன்மையான ஒன்றை தருகிறார் (யாத்.32:10). ஆனாலும் மோசே தன்னு டைய மேன்மையைவிட ஜனங்கள் தேவ கோபாக்கினைக்கு தப்பவேண்டும் என்று விரும்புகிறார். தேவனோடு அவருக்கிருந்த ஐக்கியத்தினாலே இத்தகைய சிந்தை உண்டாயிற்று. இதேபோல் பவுலும் பிலேமோனிடத்தில் அடிமையான ஒநேசிமுக்காக பரிந்து பேசுகிறார்.

வியாதிப் படுக்கையிலிருந்த ஒரு சிறு பெண்ணிடம் அவளது போதகர் அவளுக்குத் தெரிந்தவர்களின் பெயரை எழுதி அவர்களது இரட்சிப்பிற்காக ஜெபிக்கும்படி கூறினார். அச்சிறுமி அவ்வாறு ஜெபித்து வந்தாள். அவள் மரணமடையும் முன் அவள் எழுதி வைத்திருந்த பெயர்களில் 56 பேரும் இரட்சிக்கப்பட்டிருந்தனர். நாமும் தேவனை அறியாத நமது நண்பர்கள், உறவினர்கள், உடன் பணி செய்பவர்கள், அயலகத்தாரின் இரட்சிப்பிற்காக அவர்களின் பெயர்களை எழுதிவைத்து கருத்தாய் ஜெபிப்போம்.

ஜெபம் தேவனின் செவியை மகிழ்விக்கிறது. அவரது இதயத்தை உருகச் செய்கிறது. - தாமஸ் வாட்சன். ஜெபத்தின் மூலம் தேவனோடுள்ள உறவை வளர்த்துக்கொள்வது மட்டு மல்லாமல் தேவனுடைய சித்தத்தையும் நாம் அறிந்து செயல்பட முடிகிறது. நம் தேசம் தேவனை அறிய நம் ஜெபங்கள், நம் முழங்கால்கள் தேவனுக்குத் தேவை. பாவ அடிமைத்தனத்திலும், ஆன்மீக இருளிலும் வாழும் நம் தேச ஜனங்கள் பரமனின் விடுதலை பெற்றிட அனுதினமும் பாரத்தோடு நாம் ஜெபிப்போம். தேசத்தை தேவனுக்காய் சுதந்தரிப்போம்.

**அருள்திரு. எஸ். தேவதாஸ்,**
ஹிந்தி ஊழியம் - சென்னை

# தேசமே! என் இந்திய தேசமே!!



***"நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும்,***
***உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும்,***
***நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்;***
***கர்த்தர் உன் மேல் பிரியமாயிருக்கிறார்;***
***உன் தேசம் வாழக்கைப்படும்".***
*– ஏசாயா 62:4*

நம் இந்திய தேசம், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும், பொருளாதாரத்தில் உலகளாவிய அளவில் வளர்ச்சிப் பெற்ற நாடாகவும் காணப்படுகிறது. இந்தியாவின் 78வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இம்மாதத்தில் நமது தேசத்தின் வளர்ச்சியை நினைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தி, வளர்ச்சிக்கு இன்னும் என்னென்ன தடைகள் இருக்கிறது என்பதை சற்றி சீர்தூக்கிப் பார்த்து, அதற்காக ஜெபிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். நம் நாடு பல்வேறு பசுமை வளர்ச்சிக்கு கவனம் செலுத்துவதோடு, உலகின் அனைத்து தொழில் நுட்பங்களும் கொண்ட இந்தியாவை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டும் செயல்படுகிறது. தேசத்தின் இத்தகைய வளர்ச்சி மாற்றம் நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் வசிக்கும் ஒவ்வொரு இந்தியனின் இதயத்திலும் தேசிய பெருமை உணர்வை உருவாக்குகிறது.

தேசமே! இந்திய தேசமே! அனைத்து வளங்களும் ஒருங்கே பெற்றவளே! நம் நாடு அனைத்து வளங்களும் கொண்ட நாடு: வேகமான பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்று என நாம் பெருமிதம் கொள்கிறோம். சுதந்திரம் அடைந்த பொழுது நம் நாட்டின் கல்வி யறிவு 12%. இன்றைக்கு கல்வியறிவு பெற்றவர்கள் 80.9% அறிவியலில் மிக சிறந்த முன்னேற்றம் அடைந் திருக்கிறோம். சந்திரனுக்கு விண்கலம் அனுப்பியிருக்கிறோம். சுதந்திரம் அடைந்தபோது நமது நாட்டில் உணவு உற்பத்தி தோராயமாக 50 – 55 மில்லியன் டன்கள். சமீபத்திய ஆண்டுகளில் 300 மில்லியன் டன்களாக அதிகரித்து தன்னிறைவு பெற்றிருக்கிறோம். இப்படி வளர்ச்சியைக் கண்டாலும், இன்னொரு பக்கம் வறுமை, பட்டினி, வேலையின்மை,

தூய்மைக்கேடு, இன துவேஷம், மொழி துவேஷம், பாதுகாப்பின்மை, அநீதி ஆகியவைகளும் மலிந்து காணப்படுகின்றன.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றை இயற்கையிடமிருந்து பெருவதற்கு பயன்படும் கல்வி போன்றவை எல்லா மக்களுக்கும் கிடைக்கிறதா என்றால் இல்லையென்றே சொல்லலாம். ஏழை மக்களின் வயிற்றுப் பசியைப்போக்க பொது விநியோகத் திட்டம், மதிய உணவு திட்டம், விவசாயத்திற்கு மானியம், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் என பல் வேறு திட்டங்களை அரசு செயல்படுத்திக் கொண்டிருந்தாலும், அனைத்து மக்களுக்கும் அவை சரியான விதத்தில் போய்சேருகிறதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஆங்காங்கே சுரண்டல்களும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. போஷாக்கான மற்றும் திருப்தியான மூன்று வேளை உணவு இல்லாமல் இருப்போர் இன்னும் நம் நாட்டில் உள்ளனர். மேற்கத்திய கலாச்சார உடைகள் நம் நாட்டில் அதிகரித்து வரும் இந்நாட்களில் ஒரே உடையை கந்தலாகும்வரை உடுத்தி நாட்களை கழிக்கும் மக்களும் வாழ்கிறார்கள். ஏழைகளுக்கு இலவச வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்முறைப்படுத்தி வருகிறது. என்றாலும் வீடில்லாத அனைத்து ஏழைகளுக்கும் வீடு கிடைக்கிறதா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கல்வி என்பது நம் இரண்டு கண்களைப் போன்றது. கல்லாதவர்களை அறியாமை என்னும் இருள் சூழ்ந்துகொண்டிருக்கிறது. அனைவருக்கும் கல்வி வழங்கவேண்டும் என்று அரசாங்கம் பல முயற்சிகளை செய்கிறது. ஆனாலும் பல பின்தங்கிய மாநிலங்களில், கிராமப் புறங்களில் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் கல்வியறிவு அற்றவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் கல்விகற்றால் சமுதாயத்தில் முன்னேறிவிடுவார்கள் என்று அவர்களையும், அவர்களின் நிலங்களையும் சுரண்டுவோருக்கு இருக்கும் ஒருவித அச்சம், கல்வி கொடுப்பதற்கு சவாலாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சில இடங்களில் கல்வியை கொடுத்து மாணவர்களுக்கு ஒளியேற்றும் ஆசிரியர்களே ஒழுங்காக வகுப்புக்கு வருவது சாத்தியமற்றதாய் உள்ளது. இதனால் சரியான கல்வியறிவு இல்லாமையால் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் ஏமாற்றப்படுவதோடு, குழந்தை திருமணம், குழந்தை தொழில், பலதார மணம் போன்ற மூடப்பழக்கங்களுக்குள்ளாகிறார்கள்.

வேலை வாய்ப்பு அலுலகம் அனைத்து மாவட்டங்களிலும் இருந்தாலும், படித்த அனைவருக்கும் படிப்புக் கேற்ற வேலை கிடைக்கிறதா என்பது கேள்விக்குறியே. இதனால் படித்த இளைஞர்கள் சரியான வேலை வாய்ப்பின்மையால் விரக்தியடைந்து, கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல், தற்கொலைகள் போன்ற தீய செயல்களுக்கு நேராக தள்ளப் படுகிறார்கள். அநேக சிறுவர்கள் பள்ளிப் பருவத்திலிருந்தே போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள்.

இதற்குப் பெண்களும் விதிவிலக்கல்ல. திருமணத்திற்கு வெளியே பாலியல் சுகம் தேடும் மக்களால் நம் தேசத்தின் கலாச்சாரம் பாதிப்பிற்குள்ளாகிறது. ஒரு பக்கம் வறுமையும், இன்னொரு பக்கம் வசதியான வாழ்க்கை வாழ ஆசையும் இந்த அசுத்தமான செயல்களில் ஈடுபடவைக்கிறது என்று கூறுகின்றனர். இந்த தூய்மைக்கேடு ஒழிய யார் பொறுப்பு?

சுதந்திரம் பெற்ற நம் நாட்டில் பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பெண்கள் வேலை செய்யும் இடங்களில், பயணம் செய்யும் இடங்களில் பாலியல் சீண்டல்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு அவர்கள் சொந்த குடும்பத்தில், பள்ளிக் கூடங்களில், விளையாடும் இடங்களில் பாதுகாப்பற்ற நிலை. இதனால் வாழ்நாளெல்லாம் குற்ற உணர்வுக்குள்ளாக்கப்படுகிறார்கள். பெண்கள் தமது குடும்பத்தினரால் புரிந்துணர்வு இல்லாமை, வரதட்சணை கொடுமை போன்ற துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவதால் மன அழுத்தத்திற் குள்ளாகி தற்கொலைக்கு நேராக தள்ளப்படுகிறார்கள். லஞ்சம், ஊழல் என்னும் சமூக தீமைகள் எங்கும் புரை யோடிக் கிடக்கின்றன. ஆனால் “மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் (கிறிஸ்துவின்) ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பணிணினார்” (அப்.17:26). ஜாதிய வேறுபாடு என்பது சிறுவயதி லிருந்தே முளைவிட்டு எழுகிறது. இதனால் பள்ளி மாணவர்களிடையே காழ்ப்புணர்வு ஏற்பட்டு பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது. இது களையப்பட விழிப்புணர்வுகள் வழங்கப்படவேண்டும். அஹிம்சைக்குப் பேர்போன நாடு நம் இந்தியா. ஆனாலும் என்னமோ ஆங்காங்கே இன கலவரங்களும், மத கலவரங்களும் நடைபெறுகின்றன. இனம், மொழி, மதம் போன்ற வேற்றுமை களின் அடிப்படையில் எவரிடமும், யாரும், எந்த பாரபட்சமும் காட்டாமல் இந்திய தேசத்தில் நமக்கிருக்கும் குடி உரிமைகளை, நமது இலட்சியங்களைப் பேணிக்காப்பதும், சகோதரத்துவம் வளர்ப்பதும் நம் தலையாய கடமை.

உலகின் மிகப்பெரிய மதசார்பற்ற குடியரசு நாடு இந்தியா. எவரும் தம் விருப்பம்போல் எந்த மதத்தைத் தழுவவும், வழிபாடு செய்யவும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் சில நேரங்களில் தனி மனித சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இதுபோன்று இன்னும் எத்தனையோ சொல்லிக்கொண்டே போகலாம். நம் நாடு இவைகளிலெல்லாம் மாற்றம் பெற்று சுபிட்சம் பெறவேண்டும். நம் சபைகள் உயிர்மீட்சிப் பெறுவதோடு, தேசத்தின் மீட்புக்காய் திறப்பில் நின்று ஜெபிப்போர் எழும்ப வேண்டும்.

## ஜெபியுங்கள்

- பஞ்சம் பட்டினி இல்லாத நாடாக நம் தேசம் மாறவும், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மக்களின் முன்னேற்றத் திற்காகவும் ஜெபிப்போம்.
- சிறு பிள்ளைகள், பெண்கள், வாலிபர்கள், முதியோர்கள் என அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

- பிற்போக்கு சிந்தனைகளோ, மக்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் திட்டங்களோ எதிர்கால சந்ததியினரை பாதிக்காத நிலை உருவாக வேண்டும்.
- 100% கல்வியறிவு பெற்ற தேசமாக இந்தியா மாற கல்வித் துறை கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட ஜெபிப்போம்.
- இனம், மதம், மொழி அடிப்படையில் பிரிவினைகளை உண்டாக்கும் மனிதர்கள் மனந் திரும்ப ஜெபிப்போம்.
- ஏழை மக்களுக்கு விளைவிக்கப்படும் அநீதி, நிலப் பறிப்பு, சமத்துவமின்மை மாற ஜெபிப்போம். அரசாங்க நலத் திட்டங்களில் எல்லோருக்கும் சேரவேண்டிய நியாயமான பங்கு கிடைக்கவும், அநியாயமாக கொடுமைக்குள்ளாகும் மக்களுக்கு நீதி கிடைக்கவும், ஏற்றத் தாழ்வு இல்லாத சமத்துவ நாடாக கட்டமைக்கப்படவும் ஜெபிப்போம்.
- லஞ்சம் கொடுப்பதும், வாங்குவதும் தவறு என்று நாட்டிலுள்ள அனைவரும் உணர்ந்துகொள்ள ஜெபிப்போம்.
- போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டு கிடக்கும் மக்கள் அதிலிருந்து விடுதலைபெற்று வாழ்வில் சுபிட்சம் பெறவும், போதைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை அரசாங்கம் தடைசெய்து மக்களின் நலனைப் பேணிக்காக்கவும் ஜெபிப்போம்.
- வன்முறைகளைக் களைந்து ஆயுத மில்லா அறவழியில் நடப்போம் என்னும் சிந்தை இந்தியர் அனைவர் மனதிலும் முளைவிட்டெழும்ப ஜெபிப்போம்.
- அனைவரும் நாட்டின் நல்ல குடிமகனாக / குடிமகளாக வாழவும், நீதி நேர்மைக்காக பாடுபடும் தலைவர்கள் எழும்பவும், கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட அனைவரும் சமம் என்ற உணர்வு அனைவரின் மனதில் ஏற்படவும் ஜெபிப்போம்.

**திருமதி. ஃப்ரீடா சாம்**
– தலைமை செயலகம்.

# விசுவாச மகளிர் மாநாடு

## புதுச்சேரி

நாள்: 15.08.2025 வெள்ளி
காலை 9 மணி முதல்
மாலை 4 மணி வரை

இடம்: இம்மானுவேல் மெத்தடிஸ்ட் ஆலயம், திண்டிவனம் சாலை, KFC அருகில்

சிறப்பு செய்தி:
**திருமதி. வசந்தி இம்மானுவேல்**
FMPB சென்னை

தொடர்புக்கு: 9894082998 / 9629302972 / 9367412195

# சிறு குறு தொழில் முனைவோர் தினம்





விஞ்ஞானம், கணினி மற்றும் எல்லா நிலைகளிலும் வளர்ந்து வரும் நம்நாட்டில் சிறு குறு தொழில் செய்பவர்கள் போற்றப்படத்தக்கவர்கள். இவர்கள் திறமை மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள். சிறு வயதிலிருந்து வியாபாரத்தைக் கற்றுத் தேர்ந்து பெரிய அளவில் (தொழில் வல்லுநர்களாக) மாறியவர்களும் உண்டு. ஆனால் பணமதிப்பிழப்பிற்குப் பின் தொழிலில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும் கொடிய கொரோனாவுக்குப் பின் தொழில் பெரிதும் முடக்கப்பட்டது. அதாவது வங்கிகளில் கடன் பெற்று இயந்திரங்கள் கொள்முதல் செய்து, அவைகள் சரியாக இயக்கப்படாததால் தொழிலில் பெரும் சரிவைக் கண்டவர்கள் அநேகர். முதலாளிகளாக வலம் வந்தோர் பலர் இன்று தொழிலாளர்களாக மாறும் அவலநிலை ஏற்பட்டது. காரணம் சொந்த நிலம், வீடு இவைகள் இல்லாததினால் மாத வாடகை செலுத்துமுடியாத நிலை. இப்படி பல நிலைகளில் முடக்கப்பட்டு விட்டனர். **ஆகஸ்டு 30ஆம் தேதி தேசிய சிறு குறு தொழில் முனைவோர் தினமாக** அனுசரிக்கப்படுகிறது.

நமது இயக்கத்தின் மூலம் நடைபெறும் ஊழியங்களின் மிகப் பெரிய தேவைகள் இப்படிப்பட்ட சிறு குறு தொழில் செய்பவர்கள் (ஸ்கேன் வியாபாரிகள்) மூலம் சந்திக்கப்பட்டு வருகிறது. அவர்களை குறித்ததான சில விவரங்கள்...

## ஆசீர்வாதங்கள்

- முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடும் வியாபாரிகள் தங்கள் வாழ்விலே தேவனின் ஆசீர்வாதத்தை அனுபவித்து வருகிறார்கள்.

- அநேகர் வெறுங்கையோடு வந்து, அடிமட்ட வேலையில் சேர்ந்து இன்று தொழில் அதிபர்களாக மாறியுள்ளனர். இவர்கள் பரிசுத்த ஓய்வு நாளில் குடும்பமாக ஆலயம் சென்று, தொழிலுக்காக ஜெபித்து வருவதாலும் தங்கள் கம்பெனியில் காலையில் வேதம் வாசித்து, ஜெபித்து வேலையை ஆரம்பிப்பதாலும் ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர்.
- தேவனுக்கு முதல் பங்கு எடுத்து வைத்து, அதற்குப்பின் மற்றவை களுக்கு செலவிடுபவர்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்களும், உண்மை, உத்தமம் மற்றும் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களும் ஏராளம்.
- தாம் செய்யும் தொழிலை அடுத்தத் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தினவர்கள் ஏராளம்.
- பிள்ளைகளை தேவ பக்தியில் வளர்த்ததினிமித்தம், பிள்ளைகள் தகப்பன்மார் செய்ததைவிட இன்றுள்ள விஞ்ஞானம், கணினி மற்றும் நாட்டு நடப்புக்கு ஏற்றவாறு தொழிலில் முன்னேறியுள்ளனர்.

**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்** என்ற வசனத்தின்படி கர்த்தர் சிறு குறு தொழில் செய்பவர்களை ஆசீர்வதித்து வருகிறார். வியாபாரத்தில் பல போட்டிகள் இருந்தாலும் வாடிக்கையாளர்கள் நமது கிறிஸ்தவ வியாபாரிகளைத்தான் தேடி வருகின்றனர். கள்ளத் தராசை பயன்படுத்தாமல் நேர்மையோடு வியாபாரம் செய்வதாலும். முதல் தரமான



பொருட்களை விற்பதாலும், அதிக லாபம் வைக்காதபடியினாலும், எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து, தேவனை சார்ந்து வாழ்வதாலும் தேவன் நமது வியாபாரிகளை ஆசீர்வதித்து வருகிறார்.

## சிறிய சாட்சி

**திரு. பீட்டர் சிவகுமார்** என்பவர் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்தவர். நான்காம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். தகப்பன் இல்லை. தாயாரால் வளர்க்கப்பட்ட இவர் ஒரு மார்வாடி கடையில் மாத வருமானத்திற்கு வேலைப் பார்த்து வந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட இவர் சேலம் மாவட்டத்தில் இளம்பிள்ளை என்ற கிராமத்தில் சிறு கடை ஒன்றினை ஆரம்பித்தார். அந்நாட்களில் தன் சொற்ப வருமானத்திலிருந்து நமது பணித்தள விசுவாசிகளின் குழந்தைகளை ஆதரித்து வந்தார். தேவன் அவரது தொழிலை ஆசீர்வதித்தார். இன்று

அதே கிராமத்தில் **ஏ-1 டெக்ஸ்டைல்ஸ்** என்ற நிறுவனத்தின் ஸ்தாபகராக ஆண்டவர் அவரை உயர்த்தியுள்ளார். அவரது கடையிலிருந்து சென்னை சில்க்ஸ் போன்ற பெரிய கடைகளுக்கு சேலைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது மூன்று மிஷனெரிகளை தாங்கி வருவதோடு, ஒவ்வொரு வருடமும் பணித்தளங்களில் ஆலயம் கட்டியும் வருகிறார். தேவனுக்கு முதலிடம் கொடுத்து, தொழில் செய்து வருபவர்களை தேவன் ஆசீர்வதிக்கிறார் என்பதற்கு இவரது வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டு.

## ஊழியத்தில் இவர்களின் பங்கு

- ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட சிறு குறு தொழில் செய்பவர்கள், சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள், தேசம், ஊழியம் மற்றும் மிஷனெரிகள் மீது பாரம் கொண்டு அனுதினமும் அவர்களுக்காக ஜெபித்து, உற்சாகத்துடன் கொடுத்து வருகின்றனர்.
- ஸ்கேன் உண்டியல் மூலம் காணிக்கைகளை சேகரித்து, ஊழியத்தின் சார்புத் தேவைகளை சந்தித்து வருகின்றனர்.
- மாதந்தோறும் அல்லது வாரந் தோறும், முழு இரவு ஜெபம், உபவாச ஜெபம் போன்றவற்றில் வியாபாரிகள் கூடி ஊழியத்திற்காக ஜெபித்து வருகின்றனர்.
- பணித்தளங்களில் ஆலயம் கட்டவும், விசுவாசிகளின் பிள்ளைகள் தங்கி படிப்பதற்கு விடுதிகள் கட்டவும் உதவி செய்து வருகின்றர்.
- மாதந்தோறும் தங்கள் காணிக்கை மற்றும் ஜெபத்தின் மூலம் மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகளின் குழந்தைகளை தாங்கி வருகின்றனர்.

## சவால்கள்

- ★ பருவகால தொழில் (கோடைக்கால குளிர் பானங்கள்)
- ★ வெரிகோஸ் (கால் நரம்பு முடிச்சு) இன்னும் பல சரீர பாதிப்புகள்
- ★ வியாபாரத்தில் போட்டி, பொறாமைகள்
- ★ சொந்த நிலம் இல்லாமை
- ★ பண்டிகை நாட்களில் வரும் தடைகள்
- ★ கடன் பிரச்சனை / கடனைத் திருப்பி தராமை
- ★ தொழிலாளர் பற்றாக்குறை, இன்னும் பல சவால்களை சந்திக்கும் நமது சிறு குறு தொழில் முனைவோரை நமது ஜெபத்தில் தாங்குவோம்.

**அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்**
- ஸ்கேன் பிரிவு


**சோழிங்கநல்லூர் பணி மாவட்டம் நடத்தும்**

**பெண்கள் தரிசனக் கூடுகை**

நாள்:
2025 ஆகஸ்டு 23 சனிக்கிழமை
நேரம்: காலை 9 - 4 மணி வரை
இடம்:
சேக்ரட் ஹார்ட் மெட்ரிக் பள்ளி,
சோழிங்கநல்லூர்




# தபான் பணித்தளம்

தபான் என்ற கிராமம், இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்திலுள்ள தக்ஷின் தினாஜ்பூர் மாவட்டத்தில் உள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி தபானில் 2796 பேர் வசிக்கின்றனர். இவர்கள் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளுக்கும் 14 கி.மீ. தொலைவிலுள்ள கங்காராம்பூர் என்ற நகரத்தைச் சார்ந்து வாழ்கின்றனர். இந்திய அரசியலமைப்பு மற்றும் பஞ்சாயத்துராஜ் சட்டத்தின்படி, தபான் கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரான சர்பஞ்சால் நிர்வகிக்கப்படுகிறது. கல்வியறிவு 75.29% ஆகும். இங்குள்ள தபான் திஹி எனப்படும் பெரிய ஏரி வரலாற்று புகழ்ப் பெற்றது. இது புலம்பெயர்ந்து வரும் பறவைகளுக்கு சரணாலயமாக உள்ளது.

## கலாச்சாரம்

சந்தால் மற்றும் வங்காளர்கள் என்ற இரண்டு பெரிய இன மக்களும், ஒராவன், முண்டா, பேடியா, மஹாலி, மால் பஹாடி, ராஜ்பாங்சி மற்றும் லோஹாரா போன்ற பிற மக்கள் இனங்களும் இங்கு வாழ்கின்றனர். இங்குள்ள மக்கள் விவசாயம், கூலித் தொழில், கட்டிடத் தொழில் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். கடுகு, கோதுமை, பஞ்சு, காய்கறிகள் பயிரிடுவதோடு வருடத்திற்கு இருமுறை நெல் சாகுபடி செய்கின்றனர். இளைஞர் சமுதாயம் வேலை தேடி பிற மாநிலங்களுக்கு புலம்பெயர்ந்து செல்கின்றனர். திருமணம் பெரியோர்களால் ஒழுங்கு செய்யப்படுகிறது. ஆனால் பெரும்பாலும் வாலிபர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப துணையைத் தேர்ந்தெடுத்து திருமணமின்றி வாழவும் சுதந்திரம் உள்ளது. கிராமத் தலைவர் திருமணத்தை நடத்தி வைக்கிறார். திருமணத்தன்று மணமகளும், மணமகனும் மூங்கில் கூடைகளில் சுமந்து செல்லப்படுகின்றார்கள். மணமகன் மணமகளுக்கு வரதட்சணையாக 51 ரூபாயும், ஒரு மாடும் கொடுக்கவேண்டும்.

## மத வழிபாடு

இவர்களது முக்கிய தெய்வம் மராங்புரு. ஆவி வணக்கத்தாராகிய இவர்கள் ஆதிவாசியல்லாத மக்களுடைய தாக்கத்தினிமித்தம் சிலை வழிபாட்டிலும் ஈடுபடுகின்றனர். பஹா பொரோப், நவே பொரோப், ஸொஹராய் பொரோப் மற்றும்

துர்கா பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். இங்கு போர்லா காளி என்ற பண்டிகை ஒருவாரமளவும் கொண்டாடப்படுகிறது. இந்தியா வின் பல பகுதிகளிலிருந்தும் திரளான மக்கள் இப்பண்டிகையில் கலந்துகொள்கின்றனர். இம்மக்கள் கிராமத் தலைவர் மற்றும் ஓஜா குருக்களின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்கின்றனர். இவர்கள் மந்திரவாதங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மந்திரவாதிகள் சொல்வதை அப்படியே நம்புகின்றனர். ஆண்கள் தங்கள் வலது கையின் மணிக்கட்டிலும், பெண்கள் தங்கள் நெஞ்சின் மேற்பகுதியிலும் பச்சைக் குத்திக்கொள்கின்றனர். அவ்வாறு செய்தால் மட்டுமே மோட்சம் செல்ல முடியும் என்று நம்புகின்றனர். இறந்தவர்களின் ஆவிகளையும் வணங்கி வருகின்றனர்.





## தபானில் நமது ஊழியம்

தபான் பணித்தளம், சந்தால் மேற்கு வங்காள பிராந்தியத்திற்குட்பட்டது. நமது இலக்கு சந்தால் மக்களைக் குறித்தானது. இவர்கள் சந்தாலி மற்றும் வங்காள மொழியைப் பேசுகின்றனர். 07.02.2015 அன்று திரு. கிங்ஸ்லி மற்றும் திரு. பொன் அகஸ்டின் அவர்களால் தபான் பணித்தளம் ஆய்வு செய்யப்பட்டது. ஜூன் 2015இல் பணித்தளம் திறக்கப்பட்டு முதல் மிஷனெரியாகச் சென்ற திரு. கிங்ஸ்லி 2023 வரை ஊழியம் செய்து வந்தார். இவருடன் திரு. சார்லஸ் மராண்டி மற்றும் திரு. சீமோன் கிஸ்கு சுதேச ஊழியர்களாக பணி செய்தனர். மேலும் திரு. ரஞ்சன் கொஸ்லா மற்றும் திரு. சத்தீஸ் குமார் இரண்டு வருடங்கள் மிஷனெரிகளாக இப்பணித்தளத்தில் ஊழியம் செய்தனர். நவம்பர் 2023 முதல் மிஷனெரி அருள்திரு. ஹரமோஹன் பிரபுதாஸ் நாயக் குடும்பமும், சுதேச ஊழியர்களாக திரு. ராஜு முர்மு மற்றும் திரு. சீமோன் மார்டி குடும்பங்களும் இங்கு பணி செய்து வருகின்றனர். தற்போது நக்தாஹர், பஸ்பாடா, நெஹெம்பா, நுரோல், டெளசி, போனாஹர், போடாகும், மஹேந்திரா, டிகுல் ஆகிய இடங்களில் ஆராதனைக் குழுக்கள் இயங்கி வருகின்றன.



## முதல் விசுவாசி

இரவு கூட்டங்கள், திரைப்பட ஊழியம், கைப்பிரதி ஊழியம் மற்றும் பின்தொடர்ப் பணி மூலம் அநேக கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகின்றது. தோகோல்பூர்

கிராமத்தில் சிலர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டினர். அங்கு அல்பினா மராண்டி என்ற 17 வயது இளம் பெண் இனம்புரியா வியாதியினால் அவதிப்பட்டு வந்தாள். சுவிசேஷம் அறிவித்து அவளுக்காக ஜெபித்தபோது தேவன் அவளுக்கு அற்புத சுகமருளினார். இதை கண்ட 10 பேர் தேவனை விசுவாசித்து புல்தோலா கிராமத்தில் 11.04.2016 அன்று தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். அன்று முதல் ஆராதனைக் குழு ஆரம்பமானது.

## சுவிசேஷத்திற்கான சவால்கள்

- அநேக கிராமங்களில் இரவுக் கூட்டங்கள், திரைப்பட மற்றும் நாடகக் குழு ஊழியங்கள் நடத்திட கிராமத் தலைவர்கள் அனுமதிப்பதில்லை.
- குடிப்பழக்கம், சாராயம் தயாரிப்பது. ✦ விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட உறவினர்கள் தடை செய்கின்றனர்.
- தவறான உபதேசங்கள் விசுவாசிகளிடையே பரவி வருதல்.
- வேலைத் தேடி வெளி மாநிலங்களுக்கு புலம் பெயர்ந்து செல்தல்.
- வங்காள மக்களின் மத நம்பிக்கையை பின்பற்றுதல்.
- தீய ஆவிகளைக் குறித்ததான பயம். ✦ சமுதாயத்தைக் குறித்ததான பயம்.

## ஜெபிக்க

- சபை மூப்பர்கள் வேத அறிவில் வளர, விசுவாசிகளை ஆவிக்குரிய வாழ்வில் வழிநடத்தக் கூடிய வல்லமைகளை தேவன் அவர்களுக்கு அருள...
- தபான் பணித்தளத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் சுவிசேஷத்திற்கான திறந்த வாசலை தேவன் கட்டளையிட...
- இவர்கள் மத்தியில் காணப்படும் மூடநம்பிக்கைகள் மற்றும் ஆன்மீகக் குருட்டுத்தன்மைகள் அகன்றுபோக...
- அனைத்து சவால்களையும் ஊழியத்திற்கான படிக்கட்டுகளாக தேவன் மாற்றித் தர...
- விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து, சமூகத்தில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்த...
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட...
- நற்செய்தி கூட்டங்களில் பங்குபெறுவோர் தங்கள் விசுவாசத்தை தைரியத்துடன் அறிக்கையிட...
- விசுவாசிகளுக்கு தங்கள் சொந்த இடங்களில் நல்ல வேலை வாய்ப்புகளை தேவன் தந்திட...
- ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காகவும், தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

**அருள்திரு. ஹரமோஹன் பிரபுதாஸ் நாயக்** – தபான் பணித்தளம்




**விருதுநகர் முன்னேற்றப் பணி மாவட்டம்**

## வருடாந்திர மிஷனெரி தரிசன குடும்பக் கூடுகை

நாள்: 2025 ஆகஸ்டு 10, ஞாயிற்றுக் கிழமை நேரம்: காலை 11 – 4 மணி வரை
இடம்: CSI தூய யோவான் ஆலயம், பாரீஸ் ஹால், விருதுநகர்
தலைமை: **Rev. J. ஜோ டேனியல்,** குருசேகர தலைவர், CSI தூய யோவான் ஆலயம்
செய்தியாளர்: **Rev. R. டேனியல் டேவிட்,** FMPB
பணித்தள பகிர்வு: **திருமதி. மேக்தலின் ஐசக்,** குஜராத்

**மதுரை, விருதுநகர் பிராந்தியங்கள் இணைந்து நடத்தும்**

## 3 நாள் தேசிய உபவாச ஜெபம்

நாள்: 2025 ஆகஸ்டு 15 வெள்ளி,16 சனி,17 ஞாயிறு
நேரம்: வெள்ளி காலை 9.00 – ஞாயிறு மதியம் 2 மணி வரை
இடம்: நம்பிக்கை தோட்டம், இராயபாளையம், திருமங்கலம், மதுரை
செய்தி: **Rev. G. கிங்ஸ்லி,** FMPB, **Rev. R. டேனியல் டேவிட்,** FMPB
**Mr. R. தர்மராஜ்,** Advocate, Chennai மற்றும் பணித்தள மிஷனெரிகள்
தொடர்பு: 9444663401 / 7708111419



# பெரியமலையில் ஒரு பெருஞ்சுவர்

இரண்டு வருடங்களுக்கு முன்பாக கோயம்பத்தூரைச் சேர்ந்த ஜெபக்குழுத் தலைவர்கள் நமது பெரியமலை வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு முயற்சி எடுத்தார்கள். **பெரியமலையில் ஒரு பெருஞ்சுவர்** என்ற திட்டத்திற்கு 40 இலட்சம் இலக்கை நியமித்து தேவனுடைய கிருபையாலும், தலைவர்களின் அயராத உழைப்பினாலும் ரூ.39,92,359/-ஐ சேகரித்து நமது தலைமை செயலகத்திற்கு அனுப்பியிருந்தோம். எங்கள் கனவு நினைவாகும்படி பெருஞ்சுவர் கட்டி முடிக்க தேவன் கிருபை செய்தார்.

2025 ஜூன் 15ஆம் தேதி ஞாயிறு அன்று கோவையிலிருந்து சுமார் 160 தலைவர்களாக பெரியமலைக்குச் சென்று கட்டப்பட்ட வளாகத்தின் சுற்றுச்சுவரை தேவ நாம மகிமைக்கென்று திரு. லிவிங்ஸ்டன் பாஸ்கர் தலைமையில் பிரதிஷ்டை செய்தோம். அதன்பின் நடைபெற்ற நற்கருணை ஆராதனையில் அனைவரும் கலந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தினோம். இந்நிகழ்ச்சியில் கோவைத் தலைவர்களுடன் சொத்து பராமரிப்புத் துறை செயலர் திரு. தாமஸ் அவர்களும், ஓய்வு பெற்ற மூத்த மிஷனெரி அருள்திரு. ராஜன் ஆர்தர் மற்றும் மண்டல செயலர் அருள்திரு. பால் தயாசிங் அவர்களும் கலந்துகொண்டனர். அல்லேலூயா

**அருள்திரு. பி. டேவிட்,** விரிவுப்பணி பிராந்திய செயலர் – கோவை

# மிஷனெரி பிரதிஷ்டை



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெரிதான கிருபையால் எர்ணாவூர் சென்னை, 'பரிசுத்தர் இயேசுவின் சபை ஊழியங்கள்' திருச்சபை சார்பாக நமது பஞ்சாப் மிஷனெரியின் பிரதிஷ்டை ஆராதனை 2025 ஜூன் 15ஆம் தேதி

அன்று சிறப்பாக நடைபெற்றது. இவ்வாராதனையை திருச்சபை போதகர் சகோதரி விமலா சுகந்தி அவர்கள் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். இந்த கூடுகையில் அருள்திரு. ஜெயசேகர் அவர்கள் தேவ செய்தி அளித்தார்கள். அருள்திரு. ஜாண் பெனின் அவர்கள் பணித்தள செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். மிஷனெரியை ஜெபத்தாலும், காணிக்கையாலும் தாங்குவோம் என்று தீர்மானித்த அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நன்றியை தெரிவித்துகொள்கிறோம்.

**கௌரவ முன்னேற்றப் பணி செயலர்** – எண்ணூர், சென்னை.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திருமதி. ஜெ. கனகரெத்தினம் ஜெயராஜ் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் பகுதியிலுள்ள சீயோன் நகரில் ஜெபக்குழுத் தலைவியாக சுமார் 42 ஆண்டுகள் மிகவும் தீவிரமாக செயல்பட்டு வந்தவர்கள். இவர்கள் வாராந்திர ஜெபக் கூடுகை நடத்துவதிலும், ஊழிய ஆதரவாளர்களிடமிருந்து காணிக்கைகளை சேகரித்து அனுப்புவதிலும் திறம்பட செயல்பட்டு வந்தார். படுக்கையில் நான்கு ஆண்டுகள் இருந்த நிலையிலும் ஜெபக்குழு அங்கத்தினர்களை வரவழைத்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வந்தவர். இவர் கடந்த 18.11.2024 அன்று தேவ இராஜ்ய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவரது பிரிவால் வருந்தும் மகள்கள், மகன், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.



திரு. ஜெபதுரை அவர்கள் கோயம்பத்தூரின் மூத்த ஜெபக்குழு தலைவர்களில் ஒருவர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 40 ஆண்டுகளுக்கு மேலாக கோவையிலும், மூணாரிலும் ஜெபக்குழுக்களை நடத்துவதிலும், காணிக்கை சேகரித்து ஆனுப்புவதிலும் உற்சாகமாக செயல்பட்டு வந்தார். மேலும் ஜீவநகரில் கட்டப்பட்டுள்ள நமது இயக்கத்தின் அலுவலக கட்டுமானப் பணியிலும் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது. அவருடைய முயற்சியினால் 10 மிஷனெரி ஆதரவாளர் குடும்பங்களை உருவாக்கினவர். உடல்நலக் குறைவினால் தனது 83வது வயதில் 22.06.2025 அன்று காலை தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்தார். அவர்களது இரண்டு மகன்களின் குடும்பங்களை நம் ஜெபத்தில் நினைவுகூறுவோம்.

**அருள்திரு. பி. டேவிட்,** விரிவுப்பணி பிராந்திய செயலர் – கோவை



# ஆலய பிரதிஷ்டை

ஜார்கண்ட் மாநிலம், சுந்தர்பஹாடி பணித்தளத்திலுள்ள குக்கிராமமான பண்டரியாவில் மழைக்காலத்தில் மிகவும் சிரமத்துடன் கட்டப்பட்ட ஆலயத்தை மங்களப்படைப்பு செய்ய ஜூன் 12-ம் தேதி சென்னை திருமுல்லை வாயல் பகுதியைச் சேர்ந்த 7 பேரும், சென்னை வாலிபர் பிரிவைச் சேர்ந்த 6 பேரும் சென்றிருந்தனர். ஜூன் 15ஆம் தேதி தேவ நாமம் மகிமைக்கென்று இவ்வாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வாலயத்தை கட்டி கொடுத்த நமது மிஷனெரி ஆதரவாளர் குடும்பத்திற்காக தேவனைத் துதிப்போம். அதன்பின் நமது சாந்தனா சிறுவர் விடுதிப் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய மன்னாவை அளித்து உற்சாகப்படுத்தினர். பணித்தளங்களில் கடினமாய் உழைக்கும் நமது மிஷனெரிகளுக்காக இன்னும் அதிகமாக ஜெபிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் ஜூன் 16ஆம் தேதி சென்னை வந்து சேர தேவன் கிருபை செய்தார்.

**விரிவுப்பணி** – திருமுல்லைவாயல்

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI - A/c No. 602701216912** - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb@icici**

**SBI - A/c No. 10402752621** - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank - A/c No. 406157474** - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

**காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# வாலிபர் கூடுகை மார்த்தாண்டம்

நாள்: 2025 ஆகஸ்டு 16, சனிக்கிழமை
நேரம்: காலை 9.30 – 4 மணி வரை
இடம்: L.M.S. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம்
செய்தியாளர்: **அருள்திரு. ரவிக்குமார்,** FMPB, சேலம்
தொடர்பு: 9486755833

# வாலிபர் கூடுகை (செங்குன்றம், காரனோடை, காவாங்கரை & புழல்

நாள்: 2025 ஆகஸ்டு 27 புதன் கிழமை (அரசு விடுமுறை)
நேரம்: காலை 9.30 – 4 மணி வரை
இடம்: ECI தூய பவுல் ஆலயம், 1/1128, கலைஞர் கருணாநிதி தெரு, (கணேஷ் எடை மேடை அருகில்) காந்தி நகர், செங்குன்றம்.
செய்தி: **திரு. Y நவநீதர்,** FMPB
**சகோ. ஆக்னல்,** பட்டுக்கோட்டை (JOY Awareness Ministries)
தொடர்பு: 9003204202 / 9952005188

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



மதுரை வடக்கு கௌரவ முன்னேற்றப்பணி செயலர் திரு. சாமுவேல் பால் எட்வின், திருமதி, சித்ரா எட்வின் அவர்களின் அன்புத்தாயாரும், வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் ஜெபக்குழு தலைவியாக செயல்பட்டவருமான திருமதி. சரோஜா ஜெயசீலன் அவர்கள் 01.06.2025 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார்கள். இவர்கள் ஜெபக்குழு நடத்துவது மட்டுமல்லாமல், 6 மணி நேர உபவாச ஜெபக் கூடுகைகளுக்கு தனது இல்லத்தை திறந்து தந்தவர். தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை குழந்தை, மற்றும் மிஷனெரி ஆதரவாளர்களாக இருப்பதற்கு ஊக்குவித்தவர். தன்னுடைய ஆசிரியை பணிக்காலத்தின் போது பண்டிகைக்கால அட்வான்ஸ் ஒவ்வொரு வருடமும் வாங்கி மிஷனெரி ஊழியத்திற்கு கொடுத்தவர். அநேகரை FMPB ஊழியத்திற்கு அறிமுகம் செய்து. மாநில முகாம்களுக்கு அழைத்து வந்து ஊக்குவித்தவர். திருச்சபையிலும், FMPB கிறிஸ்மஸ் கீதபவனியிலும் குடும்பமாக பங்கெடுப்பார். கணவருடன் இணைந்து காணிக்கை சேகரித்து கிரமமாக அனுப்பி வைப்பார். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்காக ஜெபிப்போம்.

**பிராந்திய செயலர்,** விரிவுப்பணி – வேலூர்

# மிஷனெரி பயிற்சி முடித்து பணித்தளம் சென்றுள்ள மிஷனெரிகள்

## பிப்பரவரி 2024 – மே 2025

**திரு. சுஷில் ஹெம்ப்ரோம் | திருமதி. சுனிதா மராண்டி சுஷில்**

**செல்வி . ஷிலா ஹன்ஸ்தா | செல்வி. ரந்தோன் முர்மு @ எலிசபெத்**

**திருமதி. காஜல் K M | திருமதி. விஜிதா | செல்வி. இபலாலே பமே**

**திரு. லெட்கோஜின் மேட் | செல்வி. எஸ்தர் நிஷான் J | திருமதி. ரிஸ்மா ராணி**

## இவர்களுக்காக ஜெபிப்போம்:

- புதிய மாநிலம், புது மக்களினம், புரியாத பாஷை, வேற்று கலாச்சாரம், பண்பாடு, காலநிலை வேறுபாடுகள் ஆகிய யாவும் அவர்களை சோர்வுறச் செய்யாமலிருக்கவும், தேவன் அவர்களை உற்சாகப்படுத்தவும்...
- மாநில மொழி, உள்ளூர் மக்கள் பேசும் மொழி ஆகியவற்றை புரிந்துகொள்ளவும், விரைவில் கற்றுக்கொள்ளவும் ஞானம் மற்றும் ஞாபக சக்தியை தேவன் அருளவும்...
- தனிமை உணர்வுகள், சரீர பெலவீனங்கள் தாக்காதபடியும், ஆபத்துக்களிலிருந்து தேவன் பாதுகாக்கவும்...
- சுவிசேஷத்திற்கான திறந்த வாசலை தேவன் தந்தருள...
- அனுதின ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், தேவன் தந்திருக்கும் ஆத்தும பாரம் மற்றும் தாலந்துகளை தேவனுக்காய் முற்றிலும் பயன்படுத்தவும்...
- புதிய கிராமங்களில் மக்கள் இவர்களை வாஞ்சையோடு ஏற்றுக்கொள்ளவும், சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்கவும்...
- ஊழியத்தில் பிரயாணப் பாதுகாப்பு, உடன் ஊழியருடன் ஒருமனம் ஆகியவற்றை தேவன் தந்தருள...
- ஊழியத்தில் வரும் எதிர்ப்புகள் மற்றும் தடைகளைக் கண்டு மனதளவில் துவண்டுவிடாமல் தேவனுக்காக வைராக்கியமாய் ஊழியம் செய்ய தேவன் அவர்களைப் பெலப்படுத்த...
- திருமணமாகாத சகோதர சகோதரிகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருளி, குடும்பமாய் தேவனுடைய ஊழியத்தை செய்யும் கிருபையை தேவன் தந்தருள...

# "உண்மை விடுதலை"



எழுந்து வா!!!
விரைந்து வா!!!
விடுதலை வேண்டிடும்
விண்மகன் சொத்தே
உன்னதர் அருகில்
ஒடி வா..
'உண்மை'
அடையாளம் தொலைத்த
உன்னதர் இயேசுவின்
அகச்சாயலே!!
"உள்ளபடி வா.."

உண்மை விடுதலை-அது
உன்னதர் தரும் விடுதலை
கொல்லும் பாவத்துக்கும்
கொடிய சாபத்துக்கும் – இனி நீ
கடனாளி அல்ல..
அடிமை கட்டுகள் தெறிபட
இதயம் வெட்கும்
உள்ளக்கழிவுகள் விடுபட
மரண இருளும்
பாவ இருளும் வழிவிட
சுதந்திர வானில்
பரிசுத்த சிறகடிக்க
பறந்து வா..

உன் உருவும்
உயிர் கருவும்
சிலுவைக்குருதியில்
கசடற கழுவட்டும்,
பார் வேந்தன் நல்கும்
பரிசுத்த வாழ்வை – உன்
அகமும் அங்கமும்
முற்றும் தழுவட்டும்

விரும்பியதை செய்திட
விடுதலை ஓர் மாற்று அல்ல!!
மனதை அடக்கி
மாம்சத்தை ஒடுக்கி
உன்னைப்போல்
பிறனையும் நேசிக்கும் உன்னதமே
"உண்மை விடுதலை"

'துன்பங்கள்' – அவர் துதிபாடும்
அர்ச்சனை பூக்களாகட்டும்
'நமது துணை' என்றும் – அவர்
ஜீவ வார்த்தைகளாகட்டும்,
விண்ணவர் கொடுத்த
விலையில்லா விடுதலை
வாழ்வில் என்றும்
வீழாதிருக்கட்டும்,
மீண்டும் விலை போகாதிருக்கட்டும்.

இனி – நீ.. நான் பாவியல்ல..
பாவப்பிடியின் அடிமையல்ல,
உலகப்போலியின்
போர்சேவகர் அல்ல!!
"நாம்"
மீட்கப்பட்ட மாட்சிமை ஜனம்,
உன்னதர் உரு கொண்ட தேவ ஜனம்,
ஒப்பற்றவரின் உடல் அங்கம்,
உன்னத(ர்) இராஜ்ஜியத்தின்
உடன் சொந்தம்.

விழித்திடு – உண்மை
விடுதலை தரித்திடு,
உன்னதரில் என்றும்
அங்கம் வகித்திடு.

**– பிரபாகரன்**

# சௌராதி ஆலய வரலாறு

## ஜஷிப்பூர் பணித்தளம்
ஒடிசா

*எழுதியவர்:* **திருமதி. ஆக்னஸ் எட்வர்ட்**



### அறிமுகம்

ஒடிசாவின் மயூர்பஞ்ச் மாவட்டத்தின் பதம்பஹார் தொகுதியில் அமைந்துள்ள ஒரு நடுத்தர அளவிலான கிராமம் சௌராதி ஆகும். இதில் மொத்தம் 110 குடும்பங்கள் வசிக்கின்றனர். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்த கிராமத்தில் 467 பேர் வாழ்கின்றனர். இக்கிராமத்தின் கல்வியறிவு விகிதம் 39.29%ஆக உள்ளது. சௌராதி கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி யான சர்ப்பஞ்சால் நிர்வகிக்கப்படுகிறது. இக்கிராமத்தின் மொத்த மக்கள் தொகையில் 75.55% பேர் பட்டியல் பழங்குடியினர் (ST) ஆவார். இவர்களின் முக்கியத் தொழில் விவசாயம். மேலும் 69.42% பேர் விவசாயத் தொழிலாளர்களாக பணிசெய்து வருகின்றனர். 30.58% பேர் குறைவான வாழ்வாதாரத்தை வழங்கும் சிறியத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

### ஆரம்பம்

ஜஷிப்பூர் பணித்தளம் 30.05.1989 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இங்கு திரு. கிதியோன் அசோக் குமார் குடும்பம், திரு. ஹரமோகன் பிரபுதாஸ் நாயக் மற்றும் திரு. பிமல் குமார் ஜெனா ஆகியோர் முன்னோடி மிஷனெரிகளாகப் பணிசெய்தனர். திரு. சமரேந்திர சிங்கின் காலத்தில் சௌராதி கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டில் சௌராதி கிராமத்தில் வசிக்கும் திரு. பாண்டு தைசோம் நாயக், தனது நோய்வாய்ப்பட்ட தந்தையை குணப்படுத்த பல்வேறு முறைகளில் முயற்சித்தார். இவர் தன் தந்தையை வெகுதொலைவிலுள்ள ஒரு ஆசிரமத் திற்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள பாபா கூறியபடி தியானம் செய்தும் பலன் கிடைக்கவில்லை. மேலும் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. துல்கிபேடா கிராமத்தைச் சேர்ந்த திரு. பாண்டு நாயக்கின் மாமா திரு. மோண்டே ஹெம்ரோம் ஒரு கிறிஸ்தவ

விசுவாசியாவார். இவர் சில்டியா சபையைச் சேர்ந்தர். கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கும்படி பாண்டுவிற்கு அறிவுரை கூறினார். தனது மாமாவின் வார்த்தைகளை கேட்டு தேவனிடத்தில் விசுவாசத்துடன் ஜெபித்தபோது அவரது தந்தைக்கு தேவன் பூரண சுகமருளினார். பின்னர் திரு. பாண்டு நாயக் மற்றும் அவரது குடும்பத்தினர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்தனர்.



திரு. பாண்டு நாயக்

05.08.2009 அன்று நடைபெற்ற முதல் திருமுழுக்கு வைபவத்தில் 10 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகர் என்று அறிக்கையிட்டனர். அதன்பின் திரு. பாண்டுநாயக்கின் வீட்டில் சபை ஆராதனை துவங்கப்பட்டது. இவ்வாராதனையை திரு. சுபாஷ் குந்தியா & திரு. பிருந்தாவன் ஹெம்ரோம் பொறுப்பேற்று நடத்தி வந்தனர். மூன்று வாரங்களுக்குப் பிறகு பாண்டு நாயக்கின் வீட்டில் இடம் போதாததால் திரு. சுனாராம் ககாராயின் வீட்டிற்கு சபை ஆராதனை மாற்றப்பட்டது.

## ஆலய வளர்ச்சி

திரு. பாண்டு நாயக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களும் தங்கள் உறவினர்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினர். அதன் மூலமாக 09.09.2005 அன்று திரு. மாலிகா ககார் மற்றும் அவரது குடும்பத்தினர் ஏழு பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்தனர். ஜெபத்தின் மூலம் தேவன் குழந்தை பாக்கியம் அருளியதால் திரு. மச்சுவா ஜமோதர் மற்றும் அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதோடு ஆலயம் கட்ட தங்கள் நிலத்தையும் நன்கொடையாக வழங்கினார்கள். 2006ஆம் ஆண்டில் சௌராதி சபையில் 23 பேர் இணைந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் திரு. பாண்டு நாயக்கின் உறவினர்கள். விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால் ஆராதனை நடத்த பெரிய இடம் தேவைப்பட்டதால் திரு. பைகோ ககாராயின் வீட்டிலும், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 2009 முதல் 2012 வரை திரு. மச்சுவா ஜமோதரின் வீட்டிலும் ஆராதனை நடத்தப்பட்டு வந்தது.

## ஆலய நிலம் மற்றும் கட்டுமானப் பணி

திரு. மச்சுவா ஜமோதரின் குடும்பத்தில் குழந்தைகள் பிறந்த உடனே இறந்தனர். இறுதியாக ஜெபத்தின் மூலம் பிறந்த குழந்தை உயிர்பிழைத்தது. எனவே அவரும், அவரது குடும்பத்தினரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டனர். கர்த்தருக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்பியதால் தேவாலயம் கட்டுவதற்காக தனது நிலத்தை நன்கொடையாக வாழங்கினார்.

சௌராதி ஆலயம் 22.09.2012 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அடித்தளம்

அமைக்கப்பட்டபோது சௌராதி கிராம மக்கள் தேவாலயக் கட்டுமானத்தை எதிர்த்தனர். பணித்தள மிஷனெரி திரு. வினோத் குமாரை வெளியாள் என்று கருதி தங்கள் கிராமத் திற்குள் நுழைய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். பின்னர் எதிர்ப்பை கைவிட்டனர். கட்டுமானப் பணியில் 50% கூலியை மட்டுமே பெற்றுக்கொண்டு விசுவாசிகள் உதவிசெய்தனர். **ஆஷா மசிஹா மண்டலி** என்று இவ்வாலயம் பெயரிடப்பட்டது. 10.11.2013 அன்று தேவ நாம மகிமைக்கென உத்கல் பிராந்திய செயலர் அருள்திரு. ஆல்பின் கிஷான்சிங் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மிஷனெரிகள் அருள்திரு. ஹரமோகன் மற்றும் திரு. வினோத் குமார் ஆகியோரும், சுதேச ஊழியர்கள் திரு. பாகு, திரு. மதன், திரு. ஜெபன், திரு. ரசிகா மற்றும் பல விசுவாசிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முதல் விசுவாசியான திரு. பாண்டு நாயக், சௌராதி கிராமத்தில் எவ்வாறு நற்செய்தி அறிவிக்கப்பட்டது என்பதற்கான சாட்சியை பகிர்ந்துகொண்டார்.

## அற்புதங்கள்

1. சௌராதியில் திரு. மச்சுவா ஜமோதா வின் மகள் திருமதி. ரைமணி ஜமோதா மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது குடும்பத்தினர் அவரை ராவ்டியா என்ற மந்திரவாதியிடம் அழைத்துச் சென்று, அதிக பணம் செலவழித்தும் சுகம்பெறவில்லை. பின்னர் அவரது வீட்டில் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. தேவனின் கிருபையால் அவர் பூரணமாக குணமடைந்தார். கைத்தட்டி பாடவும், தேவனை புகழ்ந்து ஜெபிக்கவும் ஆரம்பித்தார். இதன் மூலம் அவர்கள் குடும்பமாக 25.01.2006 அன்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

2. திரு. மோடயா தைசம் என்பர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டார். அவர் மிகவும் பெலவீனப்பட்டு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டார். அவரது குடும்பத்தினர் ராய்ரங்பூர் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தும் குணமடையவில்லை. சிலர் மந்திரவதிகளிடம் சென்று பூஜை செய்ய வற்புறுத்தினர். ஆனால் விசுவாசிகள் யாவரும் கூடி ஒருமனதோடு அவருக்காக ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அவருக்கு பூரண சுகமருளினார்.

## ஆலய செயல்பாடுகள் & தகவல்கள்


திரு. சபான் ககாராய்

திரு. சமரேந்திர சிங், திரு. அசோக் நாயக், திரு. வினோத் குமார், திரு. கணேஷ், திரு. பவன் மற்றும் திரு. ஹரமோகன் பிரபுதாஸ் ஆகிய மிஷனெரிகள் இத்திருச்சபையில் பல ஆண்டுகளாக பணியாற்றினார்கள். ஞாயிறு பள்ளியை திரு. தைசம் நாயக் மற்றும் திரு. நவு தைசம் நடத்தி வருகிறார்கள். திருச்சபையில் முதல் பலன் காணிக்கை, நன்றிக் காணிக்கை, சந்தா, தசமபாகம் மற்றும் பிடியரிசி காணிக்கைகளை திருச்சபை

வளர்ச்சிக்காக விசுவாசிகள் கொடுத்து வருகின்றனர். திருச்சபை மூப்பர் திரு. சபான் ககாராய் மற்றும் விசுவாசிகள் வெளிப்புற சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். சில விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கும் கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி வருகிறார்கள். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பரிசுத்த நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது. மேலும் இரவு கூட்டங்கள், திரைப்பட ஊழியங்கள், விடுமுறை வேதாகமப் பள்ளி, தேடுவோர் முகாம், விசுவாசிகளுக்கான ஆவிக்குரிய பயிற்சி, முதியோர் கல்வி போன்ற ஊழியங்களை திருச்சபை நடத்தி வருகிறது.

## ஜெபிக்க

- ஆராதனையில் கலந்துகொள்ளும் அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துவில் வேரூன்றி வளர...
- போதைப்பழக்கத்தால் பின்வாங்கிய சில விசுவாசிகள் அதிலிருந்து விடுதலைப்பெற்று மீண்டும் விசுவாசத்திற்குள் வர...
- கிராமத்தினர் அனைவரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சராக ஏற்றுக்கொள்ள...
- முதியோர் கல்வியின் மூலம் எழுத்தறிவுப் பெற்று, அனைவரும் வேதத்தை ஆர்வத்துடன் வாசித்து பயனடைய...
- திருச்சபையில் நடைபெற்று வரும் ஊழியங்கள் தடையின்றி நடைபெறவும், அதில் விசுவாசிகள் உற்சாகத்தோடு பங்குபெறவும் ஜெபிப்போம்.


## செயல்வீரர் கீதங்கள்

### சிறிய பாடல் புத்தகம்




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் காலத்தால் அழியாத ஆதி மிஷனெரி தரிசனப் பாடல்களை உங்கள் இல்லங்களிலும் ஜெபக்குழுக்களிலும் பாடிட, மிஷனெரி தரிசனத்தை அனல் மூட்டி எழுப்பிட தொகுத்து வடிவமைக்கப்பட்டுள்ள சிறிய பாடல் புத்தகம் வெளிவந்துவிட்டது.

**நன்கொடை ரூபாய் 30/– மட்டுமே**




## அதீத ஸ்நேகம்

### பென் டிரைவ்

செயல்வீரர் கீதங்களின் வரிசையில் **56** ஆம் பாகம் அதீத ஸ்நேகம் என்ற கருப்பொருளில் பென் டிரைவ் வெளிவந்துவிட்டது.

**நன்கொடை ரூபாய் 150/– மட்டுமே**

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

## தேவனின் இதயத்துடிப்பு
## யாரை நான் அனுப்புவேன்?

தேவனின் இதயத்துடிப்பே ஆத்தும அறுவடை...!
இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளைக்கு
அடிபணிய விரும்புகிறீர்களா?
மக்களுக்குப் பணிசெய்து,
தேவ பணியை நிறைவேற்றிட,
உங்களுக்கு ஒரு வாய்ப்பு!

MISSIONARY WANTED MISSIONARY

**FMPB**
குடும்பத்தில்
இணைந்திட வாரீர்



# ஊழியர்கள் தேவை!

அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக
நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?



**கல்வி / வயது வரம்பு**

குறைந்தபட்சம் +2 / அதற்கு மேல்
திருமணமாகாதவர்கள் - 30 வயது
திருமணமானவர்கள் - 35 வயது

- முன்னோடி ஊழியனாக
- சபைநாட்டும் ஊழியம் செய்ய
- வேதாகம மொழி பெயர்ப்பாளராக
- மிஷனெரி ஆசிரியராக
- மிஷனெரி மருத்துவராக
- சிறுவர் ஊழியம் செய்திட
- வாலிபர் மத்தியில் ஊழியம் நிறைவேற்றிட
- தொலைத் தொடர்பு ஊழியம் செய்திட

கலாச்சாரம் கடந்து சென்று ஊழியம் செய்திட
உங்களை அன்புடன் அழைக்கிறோம்

**மனிதவளத் துறை**
29, உயர்நிலை பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை 53.
email: hrd@fmpb.org / www.fmpb.co.in
044 2657 0404 / 26573353

**1**
**ஆகஸ்ட்**
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மதுரா சாந்தி ரம்யா ராஜு
திரு. மஞ்ஜ்யா நாயக் G., திரு. ராஜா B.
திருமதி. ஃப்ளாரன்ஸ் தௌஜபாவ்
திருமதி. ஜெபராணி எபநேசர் சாம்
திரு. க்ருபா ரக்ஷ்னா பரே

# ஜம்மு

## ஆர். எஸ். புரா:

**லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்**

**துதிக்க:** பனோட்டி மற்றும் சௌக்கி கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் வேதாகம வகுப்பில் அநேக பிள்ளைகள் கலந்துகொண்டதோடு 10 பிள்ளைகள் ஆண்டவருக்கும், பெற்றோருக்கும் கீழ்ப்படிவோம் என்று தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். இரண்டு இடங்களில் நடைபெற்ற தேடுவோர் முகாமில் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். தீபக் தனது உறவினர்களுக்கு உற்சாகத்துடன் சுவிசேஷம் அறிவித்து வருகிறார். சிறுநீரகம் செயலிழந்த பூஜா ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள ஜகதீஸ், ராஜிகா, புராசந்த் மற்றும் கிரிஷன்லால் மனந்திரும்பி மீண்டும் கிறிஸ்துவண்டை வர; குலியன் கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடத்தை தேவன் தந்தருள; விசுவாசிகள் ஆலயக் கட்டுமானப்பணியில் உற்சாகமாய் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள; மிஷனெரி மேரிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; புதிதாக தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ள பூஜா, பிங்கி, பூல்பாய் ஆகியோர் தேவனுக்கு சாட்சியாய் வாழவும், விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

## நரோட்:

**சியான்லுன்தாங் ஸௌ டி. & லிங்நெய்ஹோய்;**

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஜில்லு மற்றும் ஜோனி குடும்பத்தினர் இயேசுவின் சீஷர்களாக மாற ஆர்வம் காட்டி வருகின்றனர். சுதேச ஊழியர் பீம்லா தேவி அருகிலுள்ள கிராமத்திற்கு சுவிசேஷம் அறிவிக்க சென்றபோது காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிய அவரை அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசி ஜில்லுவின் சுகவீனம் மறைய; வேலை மற்றும் திருமணத்திற்காக ஜெபித்து வரும் சனம், குஜால், ரஞ்சு, சகில், தன்னு ஆகியோருக்கு தேவன் கிருபை பாராட்ட, காலிலுள்ள புண் ஆறாமல் அநேக நாட்களாக நடக்க சிரமப்படும் சஹில் விரைவில் சுகம்பெற; கத்துடா மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் மஹேசா இன மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், அநேகர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

**2**
**ஆகஸ்ட்**
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. தவ்ங் கான் கப் P.
திருமதி. குமாரி பாரதி பாருடேடே பிரதாப்

### ராம்கார்:

**ஜாண் எஸூங் &**
**லிபெனி ஜமி**

**துதிக்க:** அப்டல் மற்றும் ராஜ்புரா கிராமங்களில் பெரிய அளவில் நற்செய்தியினைப் பகிரவும், அதில் நல்ல வரவேற்பு கிடைத்திடவும் தேவன் கிருபை செய்தார். ஆத்தும ஆதாயம் மற்றும் ஜெபக் குழுக்கள் நடத்தும் பயிற்சியில் அநேக பெண்கள் கலந்துகொண்டதோடு, ராம்காரியில் சிறு ஜெபக்குழு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் தாக்கிய சஞ்சய் கர்த்தரால் அற்புதமாக காப்பாற்றப்பட்டார். இரவு கூடுகைகள் மூலம் அநேகர் சுவிசேஷம் கேட்க வாய்ப்பருளிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரண்டவா காலனியைச் சேர்ந்த நான்சி விசுவாசத்திலிருந்து பின்வாங்கி சென்றதுமல்லாமல் பிற விசுவாசிகளையும் விக்கிரக ஆராதனைக்கு நேராக நடத்துகிறார். நான்சி மனந்திரும்ப; ராம்கார் மற்றும் சிவாஜி நகரில் நடத்த திட்டமிட்டிருக்கும் சிறுவர் முகாம் தடையின்றி நடக்க; எதிர்ப்பாளர்கள் தேவனால் சந்திக்கப்பட; கோத்தி கிராமத்தில் எதிர்ப்பினால் நிறுத்தப்பட்டுள்ள ஆராதனை மீண்டும் துவங்கப்பட ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்:

**தௌஜபாவ் குயிட்டே &**
**ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** கங்காராம் வீட்டில் துணிகளை வைத்திருந்த பெட்டிக்குள் பாம்பு நுழைந்துவிட்டது. இதை அறியாத கங்காராம் துணிகளை எடுக்க பெட்டியைத் திறந்தபோது பாம்பு தீண்டாதபடி தேவன் அவரை பாதுகாத்தார். சிறு ஜெபக்குழுத் தலைவர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. வயிற்று புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சாக்ஷி ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். 12 புதிய தொடர்பாளர்கள் ஆராதனையில் பங்குப் பெற்று வருகின்றனர். ஏழு கிராமங்களில் நற்செய்தி கூட்டங்கள் நடத்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி ரீனாவிற்கு நீதிமன்ற வழக்கில் வெற்றி கிடைக்க; தோல் ஒவ்வாமை, மூளை நரம்பு பாதிப்பு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள வித்யாசாகர் விரைவில் குணமடைய; சுகவீனப்பட்டுள்ள சுதேச ஊழியர் கும்பா தாஸின் மகள் மஞ்சு குணமடைய; அனைத்து விசுவாசிகளும் ஞாயிறு ஆராதனை மற்றும் ஜெபக் கூடுகைகளில் தவறாமல் பங்குப்பெற்று ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

**3**
**ஆகஸ்ட்**
ஞாயிறு

### கர்சோக்:

**பவன் குமார் & பிரபாஷினி தேவி**

**துதிக்க:** கண் பிரச்சனையினால் ஐந்து ஆண்டுகளாக கஷ்டப்பட்டு வந்த சுனிதா ஜெபத்தினால் பூரண சுகம் பெற்றார். வாகனம் விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையிலிருந்த பாப்புவை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். குடும்பப் பிரச்சனையினால் வீட்டைவிட்டு சென்றுவிட்ட குஷும்பாவின் கணவர் மனந்திரும்பி மீண்டும் வீட்டிற்கு வர தேவன் கிருபை செய்தார். தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்கு அர்ப்பணம் செய்து ஊழியம் செய்து வரும் சஞ்சய் & சுனிதா தம்பதியினருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாப்பு & சம்பாதேவி தம்பதியினர் தங்கள் கடன் பிரச்சனை நீங்கி சமாதானத்துடன் வாழ; ஊழியர் பயிற்சி முகாம், சிறு ஜெபக்குழுத் தலைவர்கள் பயிற்சி, சபை மூப்பர் பயிற்சி ஆகியவை திட்டமிட்டபடி நடக்க; சந்திக்கப்படாத கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கவும், அதற்கு நிலவும் தடைகள் நீங்கவும் ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### பட்டிண்டா:

**சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா**

**துதிக்க:** நடைபெற்ற சிறுவர் கூடுகையில் 45 பேர் கலந்துகொண்டனர். சீமா கௌர், பாலிஜிட் கௌர் ஆகியோர் ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணித்துள்ளனர். ஜஸ்பிரீத் கௌர் வயிற்று கட்டியிலிருந்தும், மஞ்ஜீத் கௌர் கல்லீரல் பிரச்சனையிலிருந்தும் தேவனால் சுகம் பெற்றனர். ஜெபத்தின் மூலம் டி.பி. சிங் அவர்களின் குடும்பப் பிரச்சனையை நீக்கி சமாதானம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோனியானா, சப்கே மற்றும் தேல்வானி பகுதிகளில் ஊழியம் விருத்தியடைய; அர்ப்பணமுள்ள ஊழியர்களை இப்பணித்தளத்திற்கு தேவன் தந்தருள; தன்னார்வமாக ஊழியங்களில் உதவி செய்து வரும் ஆர்த்தி, சுஸ்மிதா மற்றும் சத்கார் தேவனால் ஆசீர்வதிக்கப்பட; பிசாசின் பிடியில் சிக்கித்தவிக்கும் பூஜா மற்றும் குடியின் அடிமைத்தனத்திலிருந்து மௌனி, குல்தீர், ரத்தி ஆகியோரை தேவன் விடுதலை செய்ய; குடிவால் மற்றும் கந்தாபான் கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்களை துவங்க ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### தேவனுக்காக வைராக்கியம்

*பஞ்சாப் மாநிலம், அஹ்மத்கர்மண்டி பணித்தளத்தைச் சேர்ந்த விசுவாசி விமலா கோடை விடுமுறைக்காக உத்தரப்பிரதேசம், ஜான்பூர் மாவட்டத்திலுள்ள தன் சொந்த கிராமத்திற்கு தனது பிள்ளைகளுடன் சென்றிருந்தார். ஞாயிறு அன்று ஆராதனைக்கு செல்ல ஆயத்தப்பட்டபோது எங்கும் ஆலயங்கள் மூடப்பட்டிருந்ததை அறிந்து மிகவும் வேதனையுற்றார். அதிக ஜெபத்துடன் அவருக்கு அறிமுகமான ஐந்து குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவித்து அங்கு ஜெபக்குழு ஒன்றினை உருவாக்கி, ஒவ்வொரு இரவும் அவர்கள் கூடி ஜெபிக்கும்படி செய்தார். தேவன் அவருக்கு தந்த ஆத்தும பாரத்திற்காக தேவனைத் துதிப்போம்.*

**4**
**ஆகஸ்ட்**
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மங்கையர்க்கரசி பெஞ்சமின்
திருமதி. சுவிலா ஞானப்பூ டேனியல்

### அஹ்மதக்கட் மண்டி:

**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். முதன்முறையாக ரோஹிரா கிராமத்தில் சிறுவர் வகுப்புகள் நடத்த தேவன் கிருபை செய்தார். கிரானா, சர்ப்ஜித் கௌர் ஆகியோர் அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றனர். 20 நாட்களாக வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் அவதிப்பட்டு மிகவும் பெலவீனமாயிருந்த சர்ப்ஜித் என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜ்கோட், மேதாப்கார், தாலேர், மினிசாப்பர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் முகாமில் கலந்துகொண்ட பிள்ளைகள் தேவனை அறிகிற அறிவிலும், விசுவாசத்திலும் வளர; புதிய தொடர்பாளரான சீமாவை மார்பு புற்றுநோயிலிருந்து தேவன் குணப்படுத்த; குடும்பத்தில் பிரச்சனைகளை சந்தித்து வரும் சிம்ரனின் குடும்பத்தில் ஒற்றுமை மற்றும் சமாதானத்தை தேவன் அருள; பீனாவும், அவளது மூன்று பிள்ளைகளும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## ஹரியானா

### ஜீவன் நகர்:

**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** சிர்சாவை சேர்ந்த சுக்தேவ் கல்லீரல் தொற்றினால் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அவரது கல்லீரல் 72% பாதிக்கப்பட்டதினால் மருத்துவர்கள் நம்பிக்கை இழந்தனர். எனினும் விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினாலும், மருத்துவ சிகிச்சையினாலும் தற்போது பூரண சுகம் பெற்று வீடுதிரும்ப தேவன் கிருபை செய்துள்ளார். தப்வாலியிலுள்ள ஆராதனைக் குழுவில் மம்ராஜ் மற்றும் ரமேஷ் குமார் குடும்பங்கள் உற்சாகத்துடன் பங்குபெற்று வருகின்றனர். இரண்டு இடங்களில் சத்சங் கூடுகைகள், ஐந்து இடங்களில் பின்தொடர் பணி, சிறுவர் வகுப்புகள் யாவும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரிகளின் சரீர சுகத்திற்காக; நடைபெறவுள்ள இரவுக் கூட்டங்கள், ஜெபக் கூடுகைகள், திரைப்பட ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்க; ஆலய ஆராதனையில் உற்சாகத்தோடு கலந்துகொள்வோர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; பெண்கள் மற்றும் சபை மூப்பர் கூடுகை, ஆத்தும ஆதாயப் பயிற்சியின் மூலம் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், ஊழியத்தில் தங்களை உற்சாகமாய் ஈடுபடுத்திக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## 5 ஆகஸ்ட்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோத்ஸ்னா தேவி பிரசாந்த்

திருமதி. மேஷ்ராம் கல்பனா வால்வி நேதாஜி

### கலான்வாலி:

**விஜயகுமார் & ஜெபலா**

**துதிக்க:** ஓதான், கலான்வாலி, டாடுரோடு ஆகிய பகுதிகளில் நடைபெற்ற சிறுவர் வேதாகம வகுப்பில் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் கலந்துகொண்டு வேத வசனங்களை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டனர். பிப்ளி கிராமத்தைச் சேர்ந்த சந்தீப்பின் இரண்டு வயது மகனின் தொண்டையில் சோயா விதை சிக்கியபோது ஜெபத்தின் மூலம் தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். ஒன்பது கிராமங்களில் இரவு கூடுகைகள் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆசீர், சக்கேரியான், ஜலாலானா ஆகிய கிராமங்களில் சிறுவர் வகுப்புகள் துவங்கப்படவும், சிறுவர் வகுப்பில் கலந்துகொண்டோர் கிறிஸ்துவில் வளரவும், போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஜஷ்வீர் அதிலிருந்து விடுதலைப்பெறவும், பரிபூரண சுகம் பெறவும் ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### கங்காநகர்: பினோத் சம்பிரமரி & மிரிலா, போடார் அம்ருத்பாய் & சுவேரா மார்த்தா

**துதிக்க:** இரண்டு புதிய குடும்பங்கள் ஆலய ஆராதனையில் உற்சாகத்துடன் கலந்துகொள்கின்றனர். இப்பணித்தளத்தில் புதிய ஆராதனைக் குழு ஒன்று துவங்க தேவன் உதவி செய்துள்ளார். அசுத்தாவியின் பிடியிலிருந்த சந்தீப் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். முழுங்கால் எலும்பு முறிவிலிருந்து விசுவாசி மீராபாய் சுகம் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவங்கள் அதிகம் காணப்படும் இப்பணித்தளத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள நமது ஆராதனைக் குழுக்கள் பாதுகாக்கப்பட; புதிதாக துவங்கப்பட்டுள்ள ஆராதனைக் குழுக்கள் தொடர்ந்து நடைபெறவும், அதில் பங்குபெறுவோர் விசுவாசத்தில், ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளரவும் ஜெபிப்போம்.

### உமக்கு ஒப்பானவர் யார்?

*உத்தர்காண்ட் மாநிலம், பஸ்பூர் பணித்தளத்திலுள்ள சுல்தான்பூர்பட்டி கிராமத்தில் வசித்துவருபவர் அனிதா (30 வயது). இவர் தனது வீட்டில் தேவதைகளுக்கு கோவில் கட்டி பூஜை செய்து வந்தார். இவருக்கு 10 முறை கருச்சிதைவு ஏற்பட்டு, கர்ப்பப்பை மிகவும் பெலவீனமானதால் இனி குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என்று மருத்துவர்கள் உறுதியாக கூறிவிட்டனர். மனம் உடைந்து சோர்ந்து போயிருந்த அவரை நமது மிஷனெரி குடும்பம் சந்தித்து, இயேசு கிறிஸ்துவின் வல்லமையைப் பற்றி அறிவித்து ஜெபித்த போது அனிதா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். கடந்த இரண்டு வருடங்களாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் அனிதாவுக்கு தேவன் தற்போது அழகான பெண் குழந்தையைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். அக்குழந்தையை தேவனுடைய ஊழியத்திற்கென்று அனிதா அர்ப்பணித்துள்ளார். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!*

**6 ஆகஸ்ட்**

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுதாராணிபாய் ரவி

## கேர்வாடா:

### கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ் & சாந்தினி, தேபாஷிஸ் ஹெம்ரோம் & ஷிஃபாலி ஹன்ஸ்தா

**துதிக்க:** மம்தா பென் மற்றும் ரீனா பெனுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். விஷமருந்திய கரினா பலேஜாவை தேவன் கிருபையாய் காப்பாற்றினார். அசோக் தோதியாவை அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் விடுவித்தார். அதிக எதிர்ப்பின் மத்தியிலும் சுதேச ஊழியரின் மகன் கணேஷ் பாயின் திருமணம் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். மோதி பெனின் கையில் தேள் கடித்தபோதிலும் தேவன் கிருபையாய் பாதுகாத்தார். ஜெபத்தின் மூலம் ரீனா பாயின் கர்ப்பப்பை கட்டியை சுகமாக்கிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து சுதேச ஊழியரின் மகள் சில்பாவை அறுவை சிகிச்சையின்றி தேவன் குணப்படுத்த; ஐந்து வருடங்களாக மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் சுதேச ஊழியரின் மனைவி சுரத்தா பென் மற்றும் மன அழுத்தத்திலிருக்கும் மம்ஷா பென், வயிற்று கட்டியினால் துன்புறும் சௌனி பென் ஆகியோரை தேவன் குணப்படுத்த; மாயா அகாரி, லக்ஷ்மண் அகாரி ஆகியோரின் கடன் பிரச்சனை நீங்க; அசுத்தாவியின் பிடியிலிருந்து நானி பென், ரமிளா பென். காளி பென் மற்றும் ஜித்தேந்திரா பாய் விடுதலைபெற ஜெபிப்போம்.

## உதய்பூர்:

### ஆஷிஷ் குமார் & சவிதா தேவி, பிஜுலால் & ஸ்டெஃபி

**துதிக்க:** ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட 26 பேர் பரிசுத்தமாய் வாழ தீர்மானித்துள்ளனர். மூன்று இடங்களில் நடைபெற்ற ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்களில் 200 பேருக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். ரமேஷ், லீலா, ராஜ்மோல் ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். ஆர்த்தி சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், அர்ப்பித்தா வலிப்பு நோயிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெக்ராம் மற்றும் காகிகோம்டி கிராமங்களிலுள்ள தலைவர்களின் மிரட்டுதலுக்கு பயந்து ஜெபக் கூட்டங்களுக்கு வர தயங்கும் பெஜ்லி மற்றும் சங்கீதா குடும்பங்களுக்காக; கோரன் கிராமத்தின் விசுவாசி சுகுணா காச நோயினால் மரித்துபோனதால் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யவிடாமல் தடை செய்த கிராமத்தினர் தேவனின் அன்பினால் தொடப்பட; ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; விபத்தில் கால் முறிந்து நடக்க முடியாமல் கஷ்டப்படும் தேவிலால் விரைவில் சுகம்பெற; பலாசியா தாலுகாவில் ஊழியம் வளர்ந்து பெருக ஜெபிப்போம்.

7 ஆகஸ்ட்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மோசஸ் முரளிதரன் S.
திருமதி. ஜோஸ்னா எபிநேசர்
செல்வி. ஆர்த்தி

# உத்தரப்பிரதேசம்

## ரணியா: அனில் குமார் & கவிதா

**துதிக்க:** பாராஜோர் ஆலயத்தை புதுப்பிக்கும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. விசுவாசி அமித் வேலை செய்யும் இடத்தில் தவறுதலாக அவரது கை இயந்திரத்திற்குள் சிக்கிய போதிலும் ஆபத்தின்றி சிறிய காயங்களுடன் தேவன் பாதுகாத்தார். அநேக இடங்களில் சிறுவர் வகுப்புகள் நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சூரார் மற்றும் கட்ரா கிராமங்களைச் சேர்ந்த புதிய விசுவாசிகள் தேவ பக்தியிலும், விசுவாசத்திலும் வளர; அரவிந்த் மற்றும் பாபுவின் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை முழு இருதயத்தோடு விசுவாசித்து ஏற்றுக்கொள்ள; சுதேச போதகர்களின் தவறான உபதேசங்களுக்கு நமது விசுவாசிகள் விலகி இருக்கவும், வேத வசனத்தில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

## காட்டாம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** எதிர்ப்பினிமித்தம் ஆராதனைக்கு வர தயங்கிய மக்கள் தற்போது ஆராதனையில் பங்குபெற்று வருகிறார்கள். பெரிய அளவில் கூட்டம் நடத்த இயலாவிட்டாலும் வீடுகள் தோறும் சென்று ஜெபித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். நீண்ட நாட்களாக நிலப் பிரச்சனையை சந்தித்து வந்த ராஜீவ் குமாரின் குடும்பத்திற்கு தேவன் நீதி வழங்கினார். பால்மீகி சமுதாய மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கூடி ஜெபிக்க விசுவாசிகள் மத்தியில் காணப்படும் பயங்கள் நீங்க; எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க; சோனு, ரேகா, சுமித் ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; அரவிந்த், ரவிகுமார், ராம் சக்தி, ஆர்த்தி, சுனிதா ஆகியோரின் குடும்பங்களில் உள்ள பிரச்சனைகள் நீங்கி சமாதானமாய் வாழ தேவன் கிருபை செய்ய; அரசாங்க வேலை கிடைத்துள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகள் வேலை செய்யுமிடத்தில் கர்த்தருக்கு சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.

## *விசுவாசத்திற்கான பலன்*

*ராஜஸ்தான் மாநிலம், அஜித்கார் பணித்தளத்தைச் சேர்ந்த மது அவரது கிராமத்தில் ஒரே விசுவாசி ஆவார். இவருக்கு பிரசவ வலி ஏற்பட்டபோது மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பிரசவத்தின்போது ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்க அங்கிருந்த மூன்று மருத்துவர்களாலும் முடியாமல் போகவே, ஜெய்பூரிலுள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மது விசுவாசத்துடன் ஜெபித்துக் கொண்டிருந்தார். அவரின் திடமான விசுவாசத்தை கனப்படுத்திய தேவன் குழந்தையை சுகத்துடன் பெற்றெடுக்க உதவி செய்தார். ஆபத்தில் தேவன் தன்னோடிருந்து தன்னையும், குழந்தையையும் பாதுகாத்தார் என்று மது சாட்சி பகிர்ந்து வருகிறார்.*

**8**
**ஆகஸ்ட்**
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆண்ட்ரூஸ் ஜவஹர்
திருமதி. ஹெப்சிபா ஆண்ட்ரூஸ்
திருமதி. மஹாலா ஷீலாபேன் பத்வி சோமாலியா

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர், அஜித் பாண்டியன்

**துதிக்க:** நான்கு இடங்களில் இரவுக் கூடுகைகளும், 32 கிராமங்களில் பின்தொடர் பணியும் செய்யப்பட்டது. கர்ணாஹர்பூர், டிலாபார்புர் ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மம்மன் ஆராதனைக் குழு இரண்டு மாதங்களுக்கு முன்பதாக எதிர்ப்பாளர்களால் நிறுத்தி வைக்கப்பட்டது. ஜெபத்தைக் கேட்ட தேவன் மீண்டும் ஆராதனை துவங்கப்பட்டு, தற்போது வாரத் திற்கு இரண்டு முறை ஆராதனை நடத்த உதவி செய்து வருகிறார். மிலாக் ஆலயத்தின் 11வது ஆண்டு விழா தடையின்றி சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். ஒவ்வொரு ஞாயிறும் நமது ஊழியர்களுடன் ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வந்த நமது சபை மூப்பர் அவினீஷுக்கு அரசாங்கத்தின் மூலம் வீடு கிடைக்க தேவன் கிருபை செய்தார். மேலும் தடைப்பட்டிருந்த அவரது பணம் அநேக ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்கு கிடைக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேக்னா ஆலய வழக்கு விரைவில் முடிவடைய; ஒரே மாதத்தில் தன் தகப்பனாரையும், தன் தாத்தாவையும் இழந்து துக்கத்துடன் இருக்கும் சச்சின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அளிக்க; சுதேச ஊழியர் ஷியாம் சுந்தரின் நீதி மன்ற வழக்கு விரைவில் முடிக்கப்பட; சுமன், சவிதா, கம்பூட் ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; மனிஷா, மது, மம்தா, பிரியங்கா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; தொடையில் கட்டி வந்து இரண்டு ஆண்டுகளாக குணமாகாமல் வேதனை அனுபவித்து வரும் சோனிக்கு தேவன் இரக்கம் பாராட்ட; சிறுநீரகக் கல் மற்றும் கர்ப்பப்பை வீக்கத்தினால் அவதியுறும் லக்ஷ்மி, பித்தப்பை கல்லிலிருந்து சர்தா, கர்ப்பப்பை வீக்கத்திலிருந்து லாலி ஆகியோரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### தேசிய மிஷனெரிப்பயிற்சி மையம்: என். ராஜதுரை & பிரேமா

**துதிக்க:** 10 புதிய மிஷனெரிகள் தங்கள் மிஷனெரிப் பயிற்சியை நல்லமுறையில் முடித்து பணித்தளங்களுக்குச் செல்ல கர்த்தர் கிருபை செய்தார். பயிற்சி முடித்த மிஷனெரி சகோதரிகள் காஜல் மற்றும் விஜிதா திருமணமாகி கர்நாடகாவில் தங்கள் கணவருடன் ஊழியம் செய்து வருகின்றனர். மோஹித் மற்றும் பங்கஜ் தன்னார்வலராக இணைந்து பயிற்சி மையத்தில் உதவி செய்து வருகின்றனர். சிறையிலிருக்கும் விசுவாசிகளை சந்தித்து உற்சாகப்படுத்தி வர கர்த்தர் உதவி செய்தார். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மிஷனெரி சகோதர சகோதரிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறையிலிருக்கும் நமது விசுவாசிகளுக்கு உறவினர்களின் மூலம் வரும் பிரச்சனைகள் நீங்க; விடுதியில் படிக்கும் நமது மாணவர்களை எதிர்கால திருச்சபையின் தூண்களாய் தேவன் உருவாக்க; தற்போது மிஷனெரிப் பயிற்சி பெற்று வரும் ஆறு மிஷனெரிகளுக்காகவும், கடும் வெப்பத்தினால் பாதிக்கப்படாதபடி தேவன் அவர்களைப் பாதுகாக்கவும்; நமது பணித்தளங்களிலிருந்து அநேக வாலிபர்கள் மிஷனெரி ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணிக்கவும் ஜெபிப்போம்.

**9**
**ஆகஸ்ட்**
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜோஷ்ஃபின் ஷீபா ஜீவானந்தன்

# மத்தியப் பிரதேசம்

## நிவாலி:

### ஹேபல் ஹெம்ரோம் & பசந்தி மராண்டி

**துதிக்க:** ஜெபக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐந்து பேர் புது வாழ்வு வாழ தங்களை ஒப்புக்கொடுத்தனர். மூன்று இடங்களில் நடைபெற்ற சிறுவர் வகுப்புகள் மூலம் அநேகர் பயன்பெற்றனர். தன்கடா கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். அநேக இடங்களில் பெண்கள் ஜெபக் கூடுகைகள் உற்சாகத்தோடு செயல்பட்டு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு இடங்களில் துணை மையங்கள் திறக்கப்பட தேவன் கிருபை செய்ய; இங்கு பணிசெய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்கள் முன்வர; சபை மூப்பர்கள் அர்ப்பணிப்போடும், உற்சாகத்தோடும் சபையை வழி நடத்திச் செல்ல; விசுவாசிகளின் சாட்சியுள்ள வாழ்க்கையின் மூலம் அநேகர் கிறிஸ்துவை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.

## மொரேனா:

### ஹோசியல் நாயக் & கீதாஞ்சலி

**துதிக்க:** இரண்டு பேர் மலர்ச்சிப்பெற்ற புது வாழ்விற்குள் வந்துள்ளனர். நன்றாக படிக்கக்கூடிய நமது விசுவாசி கோலு, தன்னுடைய தேர்வின் சமயத்தில் கை, கால்களில் தசைப் பிடிப்பு ஏற்பட்டு மிகவும் பெலவீனப்பட்ட சூழ்நிலையில், தேவன் அவரது ஜெபத்தைக் கேட்டு மீண்டும் அவரது கைகளில் பெலன் தந்து நன்றாக தேர்வு எழுதும்படி கிருபை செய்தார். கவிதாவும், சீமாவும் தங்களை தேவனுக்கு அர்ப்பணித்து கிராமத்தினருக்கு தன்னார்வமாக சுவிசேஷம் அறிவித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உதய்வீரின் மனைவி சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, படுக்கையில் இருப்பதாலும், அவரது தந்தை சமீபத்தில் இறந்துவிட்டதாலும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இவருக்கு தேவன் கிருபை பாராட்ட; கைரீன்டா கிராமத்தைச் சேர்ந்த சைலேந்த்ராவின் குடும்பத்தினர் அசுத்தாவிகளின் தொந்தரவினால் அடிக்கடி சுகவீனப்பட்டு வருகின்றனர். தேவன் அவரது குடும்பத்தினருக்கு விடுதலையும், சுகமும் அருள; மோகர்சிங் மற்றும் சகுந்தலா குடும்பத்தினர் ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

## 10 ஆகஸ்ட்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சன்மதா மனோகர் தானே
திரு. ஓம்பிரகாஷ்

### குணா: சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** இடது காலில் தேள் கடித்து மிகவும் கஷ்டப்பட்டு வந்த தீவான் பரேலாவுக்காக விசுவாசிகள் இணைந்து ஜெபித்தபோது தேவன் பூரண சுக மருளினார். மனநிலை பாதிக்கப்பட்டு ஊர் சுற்றிக்கொண்டிருந்த சீதாராம் பரேலாவின் குடும்பத்திற்கு சுவிசேஷம் அறிவித்து ஊழியர்கள் ஜெபித்த போது சீதாராம் சுகம் பெற்று பெற்றோருடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிறார். பெலேவாடா என்ற புதிய கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். பிசாசின் பிடியிலிருந்து அஞ்சனா பாய், ராதுபாய் ஆகியோர் ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றார்கள். நடு இரவில் உடல் வலி மற்றும் வீக்கத்தினால் அவதிப்பட்ட தீபக்கிற்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; விசுவாசிகளுக்கு இடையூறு விளைவிக்கும் கிராமத்து மந்திரவாதிகள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ரஞ்சனாபாய், ராதா பாய் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைபெற; பஸ்கேடி கிராமத்தில் ஆராதனைக் குழு அமைக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; திருமணமாகி 12 வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாததால் தன் கணவரால் கைவிடப்பட்டுள்ள குடிபாயின் கணவர் மனந்திரும்பவும், தேவன் அக்குடும்பத்தில் அற்புதம் செய்யவும்; முதுகுத்தண்டுவட வலியினால் அவதிப்படும் மிஷனெரி சதீஷ் மற்றும் வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அவரது மனைவி சர்மிளாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

### டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா பிரதான்**

**துதிக்க:** மூன்று இடங்களில் நடைபெற்ற சிறுவர் முகாமில் ஐந்து இளம் வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்துள்ளனர். விசுவாசிகளும், சபை மூப்பர்களும் ஆத்தும பாரத்துடன் ஊழியத்தில் உதவி செய்து வருகின்றனர். சபை மூப்பர் பயிற்சி மற்றும் பெண்கள் கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு ஆவிக்குரிய சத்தியங்களை ஆழமாய் கற்றுக்கொள்ள தேவன் உதவி செய்துள்ளார். குடும்பப் பிரச்சனையினால் சமாதானமின்றி வாழ்ந்த மதன் & ரீனா தம்பதியினரை நமது ஊழியர் சந்தித்து ஆலோசனை கூறி ஜெபித்தபோது, அவர்களுக்கு சமாதானம் அருளி, தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பித்தர்வார் துணை மையத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட, இங்கு பணி செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் எழுப்பித்தர; பிரேம்நகர் ஆலயத்தில் பயிற்சி மைய கட்டிடத்திற்கு நகராட்சியின் ஒப்புதல் கிடைக்க; சுல்தான்பூர் ஆலயத்தின் நிலம் பதிவு செய்யப்பட நகராட்சி மற்றும் தாசில்தார் அலுவலகத்தின் ஒப்புதல் கிடைக்க; படக்காட்சி ஊழியத்திற்கு தேவையான உபகரணங்கள் கிடைக்க; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள விசுவாசிகள் மீண்டும் தேவனண்டை திரும்ப ஜெபிப்போம்.

**11**
**ஆகஸ்ட்**
**திங்கள்**

**தார்: சாந்து மராண்டி & ராக்கி**

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் எட்டு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மூன்று நாள் ஆவிக்குரிய கூடுகையில் விசுவாசிகள் அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். கந்த்வானி என்ற பகுதியில் வாழும் பிலேலா இன மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது அநேகர் வாஞ்சையோடு நற்செய்தியைக் கேட்டனர். சபை மூப்பர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி மூலம் அவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், சபையை சீரான பாதையில் நடத்திச் செல்லவும் பிரயோஜனமாக அமைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பில்குண்டா கிராமத்தில் சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்ட ராஹுல் மாவி என்ற 30 வயது வாலிபர் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். தேவன் அவருக்கு அற்புத சுகமருள; விசுவாசத்தை அறிக்கையிட தயங்கும் மக்களின் இருதயங்களில் தேவன் கிரியை செய்ய; சௌஹான், பர்மந்த், பர்மந்த் கத்தாரே, ராஹுல் கத்தாரே ஆகியோர் குடியிலிருந்து விடுதலை பெற்று, தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; திட்டமிட்டுள்ள அனைத்து கூடுகைகளும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

**பால்: மகேந்திரன் & புஷ்பம்**

**துதிக்க:** இரண்டு வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்டு காடுகளில் சுற்றித் திரிந்த அமித்ஷாவின் குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபித்தபோது அமித்ஷாவிற்கு தேவன் விடுதலை அருளியதால் குடும்பம் முழுவதும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டனர். ராய்ஷா மற்றும் ரதியை தேள் கடியிலிருந்தும், ராமசிங்கை விஷப் பாம்பின் கடியிலிருந்தும் தேவன் பாதுகாத்தார். ரூப்சிங்கின் மஞ்சள் காமாலை நோயை குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடுமையான இடுப்பு வலியிலிருந்து காளிமாய், பக்கவாதத்திலிருந்து போங்டி, கால் வீக்கத்திலிருந்து ரங்காரிபாய், காச நோயிலிருந்து முஜிலால் பாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த; அசுத்தாவியின் கட்டிலிருந்து புத்லிமாயை தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## வெள்ளம் உன்மேல் புரளுவதில்லை

*மஹாராஷ்டிரா மாநிலம், பெயிண்ட் பணித்தளத்திலுள்ள போர்பாடா கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி அனுசுயா தன் கணவருடன் பக்கத்திலுள்ள ஆற்றிற்கு துணி துவைக்கச் சென்றிருந்தார். மழைக் காலங்களில் திடீரென காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதுண்டு. இவர் துணி துவைத்துக்கொண்டிருக்கும் போது கரைபுரண்டு வந்த வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு ஆற்றில் அடித்துச்செல்லப் பட்டார். இதனை கண்ணுற்ற அவரது கணவர் அவரைக் காப்பாற்ற முடியாமல் கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டார். ஊராரும் அவரது மனைவியை தேடத் துவங்கினார்கள். பல அடிகள் தூரம் இழுத்துச் செல்லப்பட்ட அனுசுயா எவ்வித பாதிப்புமின்றி கரை ஒதுங்கினார். சிறிது நேரத்தில் அனுசுயா தானாகவே எழுந்து நடந்து வர தேவன் கிருபை செய்தார். அற்புதமாய் தன்னை பாதுகாத்த தேவனை குடும்பமாய் போற்றி துதித்தனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.*

**12**
**ஆகஸ்ட்**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜோதி மேரி ஜாண் ஸ்டீபன்

## அஸோம்

### கோகாமுக் & தகுவாகனா:
**டென்சிங் & கவிதா**

**துதிக்க:** ஆறு பேர் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். டினிகோரியா கிராமத்தில் புதிதாக ஆராதனைக் குழு ஒன்றை துவங்க தேவன் கிருபை செய்தார். புற்று நோயிலிருந்து புல்லேஷ்வர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். நீண்ட நாட்களாக சுகவீனமாயிருந்த கீதாஞ்சலி மற்றும் லோக்கிபதாங் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருகின்றனர். ஊழியரின் மகள் லிசா மிராக்ளினுக்கு தேவன் தந்து வரும் சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காச நோயினால் பாதிக்கப் பட்டிருக்கும் ஜெயபதியை தேவன் குணப்படுத்த; நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டு, வேலை செய்ய இயலாம லிருக்கும் புய்வதிபெகு குணமடைய; விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து, கள்ள போதகத்திற்கு செவி கொடுக்காமலிருக்க; முதுகுத்தண்டுவட வலியினால் அவதியுறும் பாலி கிராமத்தின் ருனோமணி கம்மன் சுகமடையவும், அக்கிராமத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருளவும் ஜெபிப்போம்.

### கோஹ்பூர்:
**நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா**

**துதிக்க:** லோக்பைசுக் கிராமத்தில் புதிய ஜெபக்குழு ஒன்று ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். ஐந்து இடங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்கள் மூலம் அநேகர் சுவிசேஷம் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர். மூன்று இடங்களில் சிறுவர் முகாம் நடத்த தேவன் கிருபை செய்தார். இதன் மூலம் அநேக சிறுவர்கள் வேத வசனங்களை கற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அநேக புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைத் தந்தருள; புதிய ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட; சுதேச ஊழியர்களுக்கு கிராம மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைக்க; சபை மூப்பர்கள் அர்ப்பணத்துடன் தங்கள் பணியை நிறைவேற்ற; ஜமாகுமாரி கிராம ஆலயக் கட்டுமானப் பணி தொடங்கியுள்ள நிலையில், எதிர்ப் பாளர்கள் ஆலயத்தை இடிப்போம் என்று மிரட்டி வருகின்றனர். எதிர்ப்போர் மனந் திரும்பவும், கட்டுமானப்பணியை தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

**13 ஆகஸ்ட்**
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஞானசேகரி ஜாண் டேவிட்
திரு. அசோக் நாயக்

# பீஹார்

## கிழக்கு கங்கை பிராந்தியம்:

### பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்

**துதிக்க:** முரளிகஞ்ச் பணித்தளத்திலுள்ள மஜ்ரட்டி மற்றும் போக்ராஹா கிராமத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். குடியின் அடிமைத்தனத்திலிருந்து உப்பன்தேர், ரிஷிதேவுக்கு தேவன் விடுதலை அருளினார். அறுவை சிகிச்சை செய்யப்பட்ட இடத்தில் காயம் ஆறாமல் கஷ்டப்பட்டு வந்த மிஷெனரி ஷீலா பவருக்கு தேவன் பூரண சுகமருளினார். கஜோல் பணித்தளத்திலுள்ள மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கையிலுள்ள கட்டி உடைந்து வேதனையை அனுபவித்து வரும் பட்டன் ரிஷிதேவுக்கு தேவன் பூரண சுகமருள; குடிப்பழக்கத்திலிருந்து நாகு ரிஷிதேவ் மற்றும் ராஹுல் ரிஷிதேவ் விடுதலைபெற; பார்ஷா, ஹெர்ஹா, சீக்கிஹா ஆகிய கிராமத்திலுள்ள விசுவாசிகள் திட்டமிட்டிருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள; விசுவாசிகளை குறித்து தவறான செய்தியைப் பரப்பிவரும் வித்யானந்த் பஸ்வான் மனந்திரும்ப; மந்திரவாதியான நவீன் குமாரின் தந்தை இரட்சிக்கப்பட; நிற்கவும், நடக்கவும் முடியாமலிருக்கும் பிரதிமா சர்க்காரின் மூன்றரை வயது மகளின் நரம்புப் பிரச்சனையை தேவன் குணப்படுத்த; போதைப் பழக்கத்திலிருந்தும், மூல வியாதியிலிருந்தும் பிலேசன் ரிஷிதேவ் விடுதலைபெற ஜெபிப்போம்.

# ஜார்க்கண்ட்

## லால்மட்டியா:

### அமரேந்திரன் & சுவேதா

**துதிக்க:** மூன்று பேர் தங்கள் தீயப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு பெற்றுள்ளனர். லோகந்தா, சிக்கூர்பனா மற்றும் தசிகட்டா கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். தலை முழுவதும் புண்களால் நிரம்பியிருந்த கஜோல் ஜெபத்திற்கு பிறகு பூரண குணமடைந்தார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நமது விசுவாசிகள் இரண்டு பேருக்கு இரத்தம் தேவைப்பட்டபோது அது கிடைக்கும்படியாகவும், சுகம்பெற்று வீடு திரும்பவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகாபூட்டன், பியாராம் மற்றும் கட்கரே கிராம சபைகளுக்கு அர்ப்பணமுள்ள மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட; கண்பார்வை இழந்துள்ள சுரேந்தர் டுடு மீண்டும் பார்வையைப் பெற; நீண்ட நாட்களாக கால் புண்ணினால் வேலை செய்ய முடியாமலிருக்கும் ஹன்னா முர்மு சுகம்பெற; வயிறு வீங்கி சாப்பிட முடியாமலிருக்கும் மீரா ஹெம்ரோமை தேவன் சுகப்படுத்த; கை விரல் அழுகிக் கொண்டிருக்கும் மருங்கமாய் முர்முவுக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## 14 ஆகஸ்ட்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சார்லஸ் செல்லகுமார்
திரு. துருபராஜ் பெபர்த்தா
திருமதி. சோஃபியா டேனியல் ராஜாமணி

### நோனிஹாட்:
### பென்ஹர் எம். & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** தனா கிராமத்தில் விசுவாசிகள் கூடி கிராமத்தின் எழுப்புதலுக்காக இரண்டு நாட்கள் உபவாசித்து ஜெபித்தனர். தால்மினா முர்மு அசுத்தாவியின் தொந்தரவிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். சோமி முர்மு பிசாசின் பிடியிலிருந்தும், பாபுஜி முர்மு காசநோயின் வீரியத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்பு நோயினால் அவதியுற்று வரும் நீக்கி கிஸ்கு, சல்மா பெஸ்ரா ஆகியோரை தேவன் குணமாக்க; ரசிக்லால் ஹன்ஸ்தா, புத்லால் சோரன் ஆகியோரை மனநோயிலிருந்து தேவன் குணப்படுத்த; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் துமா மராண்டி மற்றும் ஜகதீஸ்வர் ஹன்ஸ்தா மனந் திரும்ப; தனது வீட்டில் திருடு போனதால் துயரத்தில் இருக்கும் பஹாதூர்பூர் சபை மூப்பர் பெல்டாவுக்கு இழந்ததை திரும்பப் பெறும்படி தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

### மண்ட்ரோ & பகையா மாணவர் விடுதி:
### கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி, சுதாகரன் (ஓய்வு) & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** நடைபெற்ற ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாமில் சபை மூப்பர்களும், விசுவாசிகளும் உற்சாகத்தோடு கலந்துகொண்டு பயன்பெற்றனர். டேவிட் மராண்டியின் காணாமல் போன எருமை மாடு ஜெபத்திற்குப் பிறகு பத்திரமாக வீடு வந்து சேர்ந்தது. பீஹார் மாநிலத்தில் பானிபூர் மற்றும் இட்சோலா ஆகிய கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்கிட கர்த்தர் கிருபை செய்தார். ஐந்து பேர் மறுமலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்று நோயினால் மரித்துப் போன சஞ்களியின் குடும்பத்தினரை தேவன் ஆறுதல்படுத்த; பக்கவாதத் தினால் பாதிக்கப்பட்டுள்ள மராங்மரி முர்மு மற்றும் தெரேசா ஹன்ஸ்தக் பூரண சுகம்பெற; ரும்பானி, சிம்மோரா, போர்டாலா, தியாரா ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்கவும், பஞ்சாயத்திலிருந்து தடையில்லா சான்றிதழ் கிடைக்கவும், இக்கிராமத்தி லுள்ள விசுவாசிகள் ஆவிக்குரிய மற்றும் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும் ஜெபிப்போம்.

**15 ஆகஸ்ட்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹெப்சிபா ஆல்பர்ட்
திருமதி. ஜான்சி ராபின்சன்
திருமதி. மேக்தலின் கிரேஸ் ஐசக்
திருமதி. துலந்தி ரியாங் நாபா சிங்

## சுந்தர்பஹாடி:
## சிவசங்கர் & காந்திதேவி

**துதிக்க:** பண்டரியா கிராம ஆலயம் தேவ நாம மகிமைக்கென்று மங்கள படைப்பு செய்யப்பட்டது. எட்டு இடங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். குஷும்பா கிராமத்தில் இடி தாக்கி மயக்கம் அடைந்த சுரேஷ் மடையாவின் தாயார் ஜெபத்தினால் மீண்டும் எழ கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஹாதார் கிராமத்தில் புதிய விசுவாசியின் மகன் பர்கனா டுடு மரணமடைந்ததால் துயரத்தோடிருக்கும் அக்குடும்பத்திற்கு தேவன் ஆறுதலைத் தந்தருள; டம்ரு பகுதியில் சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்பை தேவன் தந்தருள; மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருக்கும் சாம் ஹெம்ரோம் விரைவில் குணமடைய; இப்பகுதியில் அநேகர் சிறுநீரகம் சம்பந்தபட்ட நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இதற்காக பாரத்தோடு ஜெபிப்போம்.

## தெலோ: அருளானந்தம் & லைசா

**துதிக்க:** நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் 33 பேர் கர்த்தருக்கென்று புதிய வாழ்வு வாழ தீர்மானித்துள்ளனர். பீஹார் மாநிலத்தில் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஆறு கிராம விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு உற்சாகத்துடன் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்து வருகிறார். டிட்டிரியா கிராம ஆலயம் தேவ நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் டிக்ரோட்டாலா, பாராபொங்கமா, சோட்டபொங்கமா, பெர்டோர், கிதைஜோர், தாராபூர் ஆகிய கிராமங்களில் விரைவில் ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட; விசுவாசிகளை குழப்புகிற மற்றும் ஊழியத்திற்கு இடையூறாக இருக்கும் கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கங்கள் செயலற்றுப்போக; சபை மூப்பர்கள் மற்று சுதேச ஊழியர்களின் குடும்பங்களுக்காகவும், அவர்கள் செய்யும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

## *ஊக்கமான ஜெபம் வேண்டி...*

*ஜார்கண்ட் மாநிலம், ஜிங்பானி பணித் தளத்தில் கக்ரிடொண்டா கிராமத்தில் மந்திரவாதியாக செயல்பட்டு தன் குடும்பத் திற்கு நல்ல வருமானத்தைத் ஈட்டி தந்தவர் நம்சிபன்ரா (40 வயது) என்ற சகோதரி. ஒரு நாள் இவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தன் மந்திரத் தொழிலை முற்றிலுமாக விட்டுவிட்டார். இதனால் கோபமடைந்த அவரது குடும்பத்தினர் அவரை வீட்டைவிட்டு விரட்டிவிட்டனர். கிராமத்தினரும் அவரை பகைத்து வருகின்றனர். இவர் தற்போது ஜெய்பூர் சபை மூப்பரின் வீட்டில் தங்கியிருந்து அவரது ஆடு மாடுகளை மேய்த்து, விவசாய வேலைகளை செய்து வருகிறார். இவரது குடும்பத்தினர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.*

**16**
**ஆகஸ்ட்**
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. மேரி செபாஸ்டின்

## தல்பும்கட்:

**வகேரா பிரமோத் குமார் & ஜஷோதாபேன்**

**துதிக்க:** லர்காபாஷா கிராமத்து விசுவாசிகளான பலாய் சோரன் மற்றும் சுராய் ஹெம்ரோம் அதிகாலை 6 மணிக்கு வேலையினிமித்தம் வெளியே சென்றபோது திடீரென அவர்களுக்கு முன்னால் வந்த யானையிடமிருந்து தேவன் அவர்களைப் பாதுகாத்தார். கால் வீக்கத்திலிருந்து விஜய் முர்மு, மனநிலை பாதிக்கப்பட்டிருந்த நாரேன் முர்மு மற்றும் மங்கள் ஹன்ஸ்தா ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளினார். நீண்ட நாள் ஜெபத்திற்குப்பின் விடுதிக்கு அர்ப்பணமுள்ள வார்டன் கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்பு வியாதியிலிருந்து சாம் மார்டி, சிகிச்சை பலனின்றி கடுமை யான வயிற்று வலியினால் கஷ்டப்படும் ஜித்தேன் ஹன்ஸ்தா, சுவாசப் பிரச்சனையிலிருந்து சோஹாஹி மார்டி ஆகியோரை தேவன் பூரணமாய் குணப்படுத்த; கடுமையான மழைக் காலங்களில் தேவன் விசுவாசிகளைப் பாதுகாக்க; தொடர் மழையினால் ஏற்படும் தொற்று நோய்களுக்கு விடுதிப் பிள்ளைகள் பாதுகாக்கப்பட; விடுதிக்கு அர்ப்பணமுள்ள சமையல்காரர் கிடைக்க; பிள்ளைகள் படிப்பிலும், ஆவிக்குரிய வாழ்விலும் வளர ஜெபிப்போம்.

# மேற்கு வங்காளம்

## இட்டாஹார்:

**அஸ்தபான் ஆதித்திய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா**

**துதிக்க:** தொடர் ஜெபத்தில் கலந்து கொண்ட ஏழு பேர் தங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து விடுபட்டனர். பிரபுகாட் கிராமத்தில் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சி முகாமில் 10 பேர் கலந்து கொண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெற்றனர். ஏழு இடங்களில் இயேசு திரைப்படம் திரையிட தேவன் உதவி செய்தார். திருமணமாகி ஏழு வருடங்கள் கழித்து சோனாலி பாஸ்கி குடும்பத்திற்கு குழந்தை பாக்கியத்தை தேவன் தந்தருளினார். சிமோலி மார்டி, சின்மை ஆகியோரை விஷப்பாம்பின் கடியிலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தற்போது ஆராதனை நடந்துகொண்டிருக்கும் 18 கிராமங்களில் ஊழியம் விருத்தியடைய; உடல் முழுவதும் வீக்கத்தினால் அவதியுறும் கோன்கோன் கிஸ்கு பூரண சுகம்பெற; காச நோயினால் துன்புறும் கபிராஜ் சோரன் குணமடைய; உடல் முழுவதும் சொறி, சிரங்கினால் பாதிக்கப்பட்டுள்ள சின்ஜி சோரன் மற்றும் கௌரவ் ஹெம்ரோம் சுகம்பெற ஜெபிப்போம்.

**17**
**ஆகஸ்ட்**
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிகய் தியான்சிங் ஜங்கோலுன்

## மல்லர்பூர்:

### உபேஷ் குமார் & சுவேதா வர்மா

**துதிக்க:** இப்புதிய பணித்தளத்தில் ஊழியர்களுக்கு நல்ல வீடு கிடைக்க தேவன் உதவி செய்தார். மனநோயினால் பாதிக்கப்பட்டு, பிறருக்கு தொந்தரவு கொடுத்து வந்த ஜோசப் மற்றும் ஷைலேஷ் இருவரும் ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றனர். அநேக கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியர் உபேஷ் குமார் உடல் முழுவதும் தடிப்புகள் மற்றும் ஒவ்வாமை ஏற்பட்டு மிகவும் சிரமப்படுகிறார். தேவன் அற்புத சுகமருள; சாந்தினி பகுதியில் ஆராதனைக் குழு துவங்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; மல்லர்பூர் பகுதிகளில் புதிதாக அநேக இடங்களில் கூட்டங்கள் நடத்தவும், ஊழியம் விருத்தியடையவும் ஜெபிப்போம்.

## ஜாம்போனி:

### இப்ராயிம் மாலி & புரோசன்சிதா

**துதிக்க:** 12 கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். சிங்கா மக்கள் இனத்தில் முதன்முறையாக மூன்று குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தர்மேந்திர சோரன் என்ற அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியரை தேவன் தந்துள்ளார். தொடர் மழையிலும் தடையின்றி ஊழியம் செய்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரத்தன் சந்த்ரா இயேசு கிறிஸ்துவின் அன்பினை அறிந்துகொள்ள; மாலதி முர்மு, பாபி முர்மு, சோனா ஹன்ஸ்தா குடும்பம், காளிபாத் சோரன், தாசா சோரன், பவேல்பட்டி சோரன், பிஜோய் கிருஷ்ணா குடும்பம், கௌரிமோனி சோரன், புல்மோனி முர்மு, பொன்மோனி சோரன், ஜோக்மசி, காலிபாடா பாஸ்கி, ராபின் பாஸ்கி, அஞ்சலியின் கணவர் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; துளிபாத் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு அதிக வாஞ்சைக் காட்டி வரும் லிலிமா சிங்கா என்ற இளம்பெண் பிறவியிலேயே கண்பார்வை இழந்தவர். தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

## பேய்கள் நடுங்கும்

*ஜார்கண்ட் மாநிலம், தும்கா மாவட்டத்திலுள்ள நோனிகாட் பணித்தளத்திலுள்ள ஆர்தோடா கிராமத்தைச் சேர்ந்தவர் தாலாமியா முர்மு. இவருடைய வீட்டில் அசுத்தாவியின் தொந்தரவு இருந்து வந்ததினால் இரவில் நிம்மதியாக உறங்கமுடியாமல் தவித்து வந்தனர். இரவில் பயங்கர சத்தங்கள் எழுப்பி பயமுறுத்துவதும், வீட்டிற்கு வருகின்றவர்களை இரவிலே தங்கவிடாமல் விரட்டி அடிப்பதுமாக பிசாசின் தொந்தரவுகள் தொடர்ந்தன. தீய ஆவிகளை விரட்ட எல்லாவிதங்களிலும் முயற்சித்து தோல்வி யடைந்த தாலாமியா முர்மு இறுதியில் நமது ஊழியர்களிடம் தனது வீட்டிற்கு வந்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். நமது ஊழியர்கள் அவரது வீட்டிற்கு சென்று சுவிசேஷம் அறிவித்து ஜெபித்து வந்தனர். அன்றிரவு முதல் பிசாசின் தொந்தரவுகள் நீங்கினதோடு மட்டுமல்லாமல் தலாமியா குடும்பத்தினர் அனைவரும் கிறிஸ்துவின் அடியவர்களாயினர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## 18 ஆகஸ்ட் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கீதா கென்னத்
திருமதி. மெல்பின் ரெஜினி சுந்தர்
திரு. அகிலேஷ் குமார்
திருமதி. மேரி நெங்நெய்கிம் கோங்சய்

### ஹல்திபாரி (கஜோல்):

**அனில் குமார் பிசோயி & ஆலிஸ்**

**துதிக்க:** மழை நாட்களில் ஊழியம் தடைபடாதபடி தேவன் தந்த பாதுகாப்பு மற்றும் வழிநடத்துதலுக்காக; பக்டுமா, பக்பாரி, பஹதோல் ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். ஐந்து கிராமங்களில் பின்தொடர் பணி செய்யவும், அநேகருக்கு சுவிசேஷப் பிரதிகள் விநியோகிக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோனாபூர், கன்டாபாரி, பத்தேபூர், பெங்கால்பாடி, ஹரிராம்பாரா, பமுஹா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; ராஜ்பான்சி மக்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் தந்தருள; விசுவாசிகள் ஆலய ஆராதனையில் கலந்துகொள்வதையும், ஜெபிப்பதையும் தடைசெய்யும் மதவாதிகள் தேவனின் அன்பினால் தொடப்பட; அறுவை சிகிச்சைக்குப் பின் நிற்கவும், நடக்கவும் கஷ்டப்படும் பிரதிமாவின் மூன்றரை வயது குழந்தைக்கு தேவன் அற்புத சுகமருள; கல்லீரல் வீக்கத்தினால் அவதியுறும் பிரதீப் தேப்ஷர்மா, பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள முகுல் சர்கார், இடுப்பு வலியினால் பாதிக்கப்பட்டுள்ள பனோராய் ஆகியோருக்கு தேவன் சுகமருள; படுக்கையிலிருக்கும் மிஷனெரியின் மூத்த சகோதரனை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## சத்தீஸ்கார்

### வாட்ராஃப் நகர்:

**பூபதி & பாலின் மேரி**

**துதிக்க:** குடி மற்றும் தீயப் பழக்கங்களிலிருந்து ஏழு பேருக்கு தேவன் விடுதலை அருளினார். மிஷனெரி பாலின் மேரி ஊழியம் முடித்து ஆட்டோவில் திரும்பிக் கொண்டிருந்த போது ஆட்டோ கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. தேவன் அவரை அற்புதமாய் பாதுகாத்தார். 15 இடங்களில் சுவிசேஷம் அறிவித்திடவும், 13 இடங்களில் சிறுவர் வேதாகம வகுப்புகள் நடத்திடவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழும் நிகிதா என்ற சகோதரிக்கு வருகின்ற எதிர்ப்புகள் மறைய; பிசாசின் கட்டுகளினால் துன்புறும் ரோன்னி, பழங்கான் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; வரும் நாட்களில் திட்டமிட்டுள்ள ஊழியங்கள் தடையின்றி நடைபெறவும், தேவன் நல்ல பலனைக் கட்டளையிடவும் ஜெபிப்போம்.

**19**
**ஆகஸ்ட்**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. குமாரி சூசம்மா ஹரமோகன்
திருமதி. சுஷ்மிதா சமரேந்திர சிங்

### கர்கோடா:
### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** இப்பணித்தளத்தில் நடைபெற்ற மூன்றுநாள் உபவாச ஜெபம் மற்றும் ஒருநாள் உபவாச ஜெபத்தில் அநேகர் உற்சாகத்துடன் கலந்துகொண்டு தேசத் திற்காக ஜெபித்தனர். இனம்புரியா வியாதி யினால் பாதிக்கப்பட்டிருந்த சுகுணா ரத்தியாவுக்கு தேவன் அற்புத சுக மருளினதால் அவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். வயிற்றுப்போக்கினால் அவதியுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று வயது ஜாபேஸ் சிகிச்சை மற்றும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றான். 15 கிராமங்களில் அநேகர் நற்செய்தியை அறிந்து கொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரத்தியா இன மக்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கவும், விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும்; கும்னார் தாலுகாவில் சுவிசேஷத்திற்கு காணப்படும் தடைகளை நீக்கி திறந்த வாசலை தேவன் கட்டளையிட; ருக்மணி, பாபுலால் மற்றும் அவரது மகனுக்கு தேவன் அற்புத சுகமருள; காலாபானி கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலத்தை தேவன் தந்திட; நடக்க முடியாமல் சிரமப்படும் கெடமா கிராமத்தைச் சேர்ந்த சத்குவீர் சித்தரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### சம்பா:
### வினோத்குமார் சிங் & பிரவதிமணி

**துதிக்க:** தானௌட், நேவாரி, ஜெப்ரா, டொங்கா கொஹோரோட், வெஸ்தாரா, மேவார் காலனி ஆகிய இடங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். பெண்கள் முகாம் மற்றும் குடும்பக் கூடுகையில் அநேக விசுவாசிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அக்லாதாரா கிராமத்தைச் சேர்ந்த அம்ரனை இரத்தப் புற்றுநோயிலிருந்து குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆறு வருடங்களாக வாத நோயினால் அவதியுறும் மடல்ஷாவை தேவன் குணப்படுத்த; கடுமையான உடல் வலியிலிருந்து கஞ்சனுக்கும் மற்றும் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து ஜாக்ரித்திக்கும் தேவன் சுகமருள; ஊழியத்தின் வளர்ச்சிக்காக சிவ்ரி நாராயண் என்ற இடத்தில் துணை மையம் அமைக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## 20 ஆகஸ்ட்

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. இஸ்ரேல் டேனியல் P.
திரு. இம்மானுவேல் முர்மு
திருமதி. நீருபேன் சோமாபாய்

### ஹட்டி: தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** ஜியாரியாரி கிராமத்தில் நடைபெறும் ஆராதனையில் புதிய குடும்பங்கள் உற்சாகத்தோடு கலந்துகொள்கின்றனர். கர்டாலா கிராமத்தில் மூன்று நாள் உபவாச ஜெபம் நடத்த தேவன் கிருபை செய்தார். தேவன் இப்பகுதியில் ஆசீர்வாதமான மழையை பொழிந்தருளி, விசுவாசிகளின் நிலத்தில் நல்ல விளைச்சலைத் தந்தருளினார். அரசாங்கத்தின் மூலம் நமது விசுவாசிகள் மூன்று பேருக்கு இலவச வீட்டுமனை கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சர்த்தி கிராமத்தில் புதிய தொடர்பாளரான ஜம்பாளியின் கணவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; தர்ஷன்சிங், பராஸ்ரட்டி, ஜாகிஸ் மற்றும் அவரது சகோதரர் பிரதீப் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; இப்பகுதியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; புதிதாக சமீர்கனா ஆலயத்திற்கு வரும் இரண்டு புதிய குடும்பங்கள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

### பத்தல்காவ்: பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட ஒருநாள் கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு தங்கள் வாழ்க்கையைப் புதுப்பித்தனர். பாட்டியா கிராமத்தில் ஆராதனை நடத்த நர்வீன் கஜுர் தன் வீட்டை திறந்து கொடுத்துள்ளார். சாமரகரா மற்றும் திண்டுபாவ்ரா கிராமங்களில் பஜன் கூட்டங்கள் மூலம் அநேகருக்கு நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹர்ஜித் சிங்கின் புற்றுநோய் குணமடைய; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சக்கசாய் ராட்டியா மற்றும் ஜெய்பிரகாஷ் பூரண சுகம்பெற; பிசாசின் பிடியில் சிக்கியுள்ள சுக்கராம் மற்றும் துர்கா விடுதலை பெற; கை, கால் வீங்கி அதிக இரத்தக் கொதிப்பினால் சுகவீனமாக இருக்கும் ராய்ப்ரோல் குணமடைய; விசுவாசிகள் கிரமமாக ஞாயிறு ஆராதனையில் பங்குபெற ஜெபிப்போம்.

## ஒடிசா

### அங்குல்: சங்கர் பி. & ஜெலின்

**துதிக்க:** நமது விசுவாசி அனந்தோ டுடுவின் இரண்டு மகன்கள் மோசே டுடு மற்றும் சூசந்தோ டுடு தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து வேதாகம கல்லூரிக்கு சென்றுள்ளனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து டுனுசாயனுக்கு தேவன் விடுதலை அருளினார். விசுவாசிகளின் பிள்ளைகளுடைய திருமணம் தேவ நாமம் மகிமைப்படும்படி நடைபெற்றது. புதிய கிராமங்களில் மக்கள் சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெய்தாமாதர்பூர் ஆலய பிரதிஷ்டை ஆராதனை சிறப்பாக நடைபெற; ஹோ பழங்குடி மக்கள் மத்தியில் குழந்தை திருமணம் முற்றிலும் ஒழிக்கப்பட; சுவிசேஷ ஊழியத்திற்கு அர்ப்பணமுள்ள தலைவர்களை தேவன் எழுப்பித்தர; வேதாகம வகுப்புகள் தடையின்றி நடைபெற; சுவிசேஷம் அறிவிக்கப்படாத அனைத்து கிராமங்களிலும் விரைவில் நற்செய்தி அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

**21 ஆகஸ்ட்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. எமி ஆனந்தி எலியா

## தேன்கனல்:

### அசோக் நாயக் & சுரபி நாயக்

**துதிக்க:** பந்தாமியா கிராமத்தில் மூன்று மாதமாக படுக்கையிலிருந்த சீமாதெரய்யா என்பவர் ஜெபத்தின் மூலம் சுகமானார். அசுத்தாவியின் தாக்குதலினால் நடக்கமுடியாமல் கஷ்டப்பட்ட தாதர் கிராமத்தில் பீர்சிங் புர்த்தி ஜெபத்தினாலும், தேவனுடைய வல்லமையினாலும் நடக்கும்படி தேவன் கிருபை செய்தார். அசுத்தாவியின் தாக்குதலினால் மனநிலை பாதிக்கப்பட்டிருந்த டுனுசாய்மியாவுக்கு தேவன் பூரண விடுதலை அருளினார். சபை மூப்பர் பயிற்சி சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி நிலைத்திருக்க; ராஹ்மா, செரம்காசஹி, ரங்கியாபால் ஆகிய கிராம மக்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; விசுவாசிகளை மிரட்டிவரும் கோண்டியா கிராமத்து மக்கள் மனந்திரும்பவும், விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கவும்; மனநிலை பாதிக்கப்பட்டுள்ள சந்தூரி புர்த்திக்கு தேவன் சுகமருளவும் ஜெபிப்போம்.

# குஜராத்

## செலம்பா:

### யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** குக்கர்முண்டா கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க சென்றிருந்தபோது நமது ஊழியர்களை தாக்க முற்பட்ட எதிர்ப்பாளர்களிடமிருந்து தேவன் பாதுகாத்தார். குழந்தை செல்வத்திற்காக ஜெபித்து வந்த சர்மிளாவுக்கு தேவன் அழகான பெண் குழந்தையை ஈந்தருளினார். ஈஸ்வர் பாயின் சிறுநீரகக் கல் கரையும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு வாஞ்சைக் காட்டும் சோன்வால் கிராம மக்கள் மத்தியில் விரைவில் ஆராதனை துவங்கப்பட; வரும் நாட்களில் போதுமான மழையை தேவன் கட்டளையிட; திட்டமிட்டிருக்கிற பயிற்சி முகாம்கள் சிறப்பாக நடைபெற; குக்கர் முண்டா, ராய்கட் மற்றும் புல்வாடி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## கொர்காம் விடுதி:

### ஜி. குமரன் & ஜெலின் ஜெயா

**துதிக்க:** கோடை விடுமுறையின்போது விடுதியின் பராமரிப்புப் பணிகளை முடிக்க தேவன் உதவி செய்தார். புதிதாக 30 சிறுவர்களுக்கு விடுதியில் இணைந்து படிக்கும் வாய்ப்பை தேவன் அருளினார். மும்பையிலிருந்து வந்திருந்த வாலிபர் குழு நம் விடுதி மாணவர்களுக்கு ஆவிக்குரிய வளர்ச்சியிலும், பொது அறிவிலும் மேம்பட பயிற்சி கொடுத்தனர். 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள் கல்லூரியில் சேர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக இணைந்துள்ள சிறுவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கவும், படிப்பில் வாஞ்சைக் காட்டவும்; விடுதிக்கு அர்ப்பணமுள்ள சமையல்காரர், காப்பாளர் கிடைக்கவும்; மழைக்காலத்தில் வரும் சொறி சிரங்கு, சேற்றுப்புண், காய்ச்சல் போன்ற தொற்று வியாதிகளிலிருந்து பிள்ளைகளை தேவன் பாதுகாக்கவும்; விடுதியிலுள்ள அனைத்து மாணவர்களும் படிப்பிலும், வேத அறிவிலும் சிறந்து விளங்கவும் ஜெபிப்போம்.

## 22 ஆகஸ்ட்
வெள்ளி

### கப்ராடா:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** பட்லி, சவர்பாடா ஆகிய கிராமங்களில் நாடக நிகழ்ச்சியின் மூலம் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். அசுத்தாவியின் பிடியினால் தன்னையே தாக்கிக்கொண்டிருந்த ரதுபாய் ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றார். விசுவாசி பிரவீனை பாம்பு கடியிலிருந்தும், விபத்திலிருந்தும் தேவன் பாதுகாத்தார். மேற்கூரை அமைக்கும்போது ஏற்பட்ட விபத்தி லிருந்து மோத்திராமை தேவன் பாதுகாத்தார். மாரடைப்பு ஏற்பட்ட ரித்தேஷ் தேவனுடைய கிருபையால் சுகம் பெற்றார். தலையில் அறுவை சிகிச்சை செய்துள்ள ராதுபாய்க்கு சுக மருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இக்தார் ஆலயத்தைச் சேர்ந்த எலிசா பென் சுவாசப் பிரச்சனையிலிருந்தும், கோயா பென் நரம்பு பிரச்சனையிலிருந்தும், சீதாராம் மற்றும் கங்காபாய் பக்கவாதத்தி லிருந்தும் பூரண சுகம்பெற; மாற்றுத் திறனாளியான மோத்திராமுக்கு தேவன் நல்ல எதிர்காலத்தைக் கட்டளையிட; திருமணமாகி ஏழு வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் பிங்கி பெனுக்கு தேவன் அற்புதம் செய்ய; தங்கள் ஒரே மகனை விபத்தில் இழக்கக் கொடுத்த லக்ஷ்ம்பாய் குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலை கட்டளையிட ஜெபிப்போம்.

### கடோட்:

**சிப்போரா பீரோ &**
**ஜீவ ரத்தின பீரோ (ஓய்வு)**

**துதிக்க:** கரேலி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது அநேகர் வாஞ்சையோடு கேட்டனர். சோனா பென் சுவிசேஷத்திற்கு அதிக வாஞ்சைக் காட்டுகிறார். பல்சாட் கிராமத்தில் தங்கியிருக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் பர்சாடி ஆலய கிராமத்தில் நடைபெறும் ஆலய ஆராதனையில் தவறாமல் பங்கு பெற்று வருகின்றனர். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த 10ஆம் வகுப்பு படிக்கும் ஹர்மன் என்ற மாணவன் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று மீண்டும் பள்ளிக்குச் செல்லும்படி தேவன் உதவி செய்துள்ளார். உம்ராக், பார்டோலி ஆகிய கிராமங்களில் இரவு கூட்டங்கள் நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்ட லால்மோஹார், பூல்குமாரி, சுதீர் குமார், பிரதீப் குமார் ஆகியோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர; 9ஆம் வகுப்பு படிக்கும் சுஸ்மிதா குமாரி மற்றும் கேசவ் அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற; கழுத்தில் அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ள கிஜார் பென் பூரண சுகம்பெற; குடியின் அடிமைத்தனத்திலிருந்து மேகுல்பாய் விடுதலைபெறவும், அதன்மூலம் அவரது வீட்டில் நடைபெறும் ஆராதனையில் அயலகத்தார் வாஞ்சையோடு கலந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

**23**
**ஆகஸ்ட்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரமாமுனி J.B.V. பிரசாத்
திரு. வெங்கடேஷ் வடார்
திரு. ஆஷிஷ் குமார்
திருமதி. சுபாசினி முர்மு ஸ்டீபன்

## அஹ்வா:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

**துதிக்க:** அநேக வருட ஜெபத்திற்குப் பின் சோம்லெ & ரோஸிக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். விசுவாசி சந்தோஷின் குடல்வால் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. புயல் காற்றில் சிக்கிக்கொண்ட விசுவாசி ரமிளா பேன் பத்திரமாக வீடுவந்து சேர தேவன் உதவி செய்தார். ஆறு மாதங்களாக நடக்க இயலாமலிருந்த வட்போடா கிராமத்தைச் சேர்ந்த ராமு ஜெபத்திற்குப் பின் நன்றாக நடக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் அடிமைத்தனத்தினால் மன சமாதானமின்றி தவித்துவரும் புதிய விசுவாசிகளான காலு மற்றும் லதாவுக்கு தேவன் விடுதலை அருள; பிறவியிலிருந்தே நடக்க இயலாமலிருக்கும் நான்கு வயதான ஜோஸ்னாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; குறைமாத பிரசவத்தில் பிறந்த தீபிகாவின் குழந்தை ஆரோக்கியத்துடன் வளர்ச்சியடைய; இப்பகுதியில் காணப்படும் எதிர்ப்புகள் மறையவும், சுதந்திரமாக சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்புகளை வரும் நாட்களில் தேவன் தந்திடவும் ஜெபிப்போம்.

## கவாண்ட்:

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** சிறுவர் பராமரிப்பு மையத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு நடத்தப்பட்ட மூன்று நாள் ஆவிக்குரிய முகாம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. சுதேச ஊழியர் பயிற்சி, வாலிபர் பயிற்சி, ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி யாவும் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுனிதா பெனுக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மருத்துவத்தினால் சுகம்பெறாத ஜிக்கிபேனின் வயிற்று வலியை தேவன் குணப்படுத்த; வாய் புற்றுநோயினால் அவதியுறும் மகுடம்பா கிராமத்தைச் சேர்ந்த மஞ்சுபாய்க்கு தேவன் அற்புத சுகமருள; பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டி மூன்று வருடங்களாக பல மந்திரங்கள் செய்தும், பலி செலுத்தியும் பலன் கிடைக்காத நிலையில் ஆலயத்திற்கு வரும் அஷ்வின் பாய்க்கு தேவன் அற்புத விடுதலை அருள ஜெபிப்போம்.

## *சர்ப்பம் தீண்டுவதில்லை*

*ஒடிசா மாநிலம், ரிமுலி பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி கார்த்திக்கின் மனைவி காட்டில் விறகுகளை சேகரித்து வீட்டிற்கு கொண்டு வந்தார். கொண்டு வந்த விறகுகளை அவரது மகன் சமையல் அறையில் அடுக்கிவைத்தார். அந்த விறகு கட்டுக்குள் பாம்பு ஒன்று இருந்ததை அவர் இருவருமே கவனிக்கவில்லை. கார்த்திக் சமையலுக்கு விறகு எடுக்க அருகில் சென்றபோது கட்டுக்குள் இருக்கும் பாம்பினைக் கண்டார். அவர்கள் மூவரையும் பாம்பினிமிடருந்து காப்பாற்றின தேவனை சாட்சியாகக் கூறி அவரை மகிமைப்படுத்தி வருகின்றனர். அல்லேலூயா!*

**24**
**ஆகஸ்ட்**
ஞாயிறு

## மோஸ்தா:

**பால்ராஜ் & கோயில்புஷ்பம்**

**துதிக்க:** மூன்று இடங்களில் நடைபெற்ற சிறுவர் வேதாகம வகுப்பில் அநேக சிறுவர்கள் கலந்துகொண்டு வேத வசனங்களைக் கற்றுக்கொண்டனர். சிறுநீரகத் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெலவீனமடைந்திருந்த ஜெய்தீப் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். இருசக்கர வாகன விபத்திலிருந்து மஹன்பாயை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். அநேக நாட்கள் காய்ச்சலினால் அவதிப்பட்டு வந்த யோஹான் மற்றும் திலீப் ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் கல்பனாவின் கழுத்தி லுள்ள கட்டி மறைய; விபத்தினால் செயலிழந்துள்ள ஜெயந்தி பாயின் கையை தேவன் குணப்படுத்த; தினேஷ் பாயின் குடும்பப் பிரச்சனை நீங்கி சமாதானம் பெற; புதிய கிராம மான சோலியாவில் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ரமேஷ்பாய் குண மடைய; விசுவாசி ஜெட்டியா பாயின் குடும்பத்திற்கு விரோதமாக செய்யப்பட்டு வரும் பிசாசின் கிரியைகள் தேவனால் முறியடிக்கப்பட ஜெபிப்போம்.

## போடோலி & தபோய்:

**ஏசுபாபு & உஷா**

**துதிக்க:** குந்தன்பூர் கிராமத்தில் பெண்கள் ஜெபக்குழு ஒன்று உருவாக தேவன் கிருபை செய்தார். வாலிபர் முகாமில் கலந்துகொண்ட அநேகர் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் தங்களை அர்ப்பணித்தனர். உடல் பெலவீனத்தோடு பெண்கள் கூடுகைக்கு வந்திருந்த ஹன்ஸ்தா, பெலவீனம் நீங்கி சுகத்துடன் வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். வேறாகி மற்றும் குந்தன் கிராம ஆலயத்தில் சபை மூப்பர்களுக்கான பயிற்சி மற்றும் ஜெபக்கூடுகை சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடல் சோர்வு மற்றும் பெலவீனத்தினால் கஷ்டப்படும் விசுவாசி வனிதாவுக்கு தேவன் பூரண ஆரோக்கியத்தை தந்திட; கார்வான் கிராமத்தில் நடத்தப்பட்ட இரவு ஜெபக்கூட்டத்தில் பார்வையாளராக வந்திருந்து சுவிசேஷம் கேட்ட மக்கள் இருதயங்களில் வேத வசனங்கள் கிரியை செய்ய; தீய ஆவியின் தாக்குதலுக்குட்பட்டு அநேக பூஜைகள் செய்தும் விடுதலை கிடைக்காத நிலையில் நமது ஜெபத்தில் கலந்துகொள்ளும் நூட்புரி கிராமத்தின் முக்கி பெனுக்கு தேவன் விடுதலை கட்டளையிட; விசுவாசிகளின் வயல்களில் நல்ல மகசூலை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

**25**
**ஆகஸ்ட்**
**திங்கள்**

### உம்மர்காம்:
### ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் அநேகர் நற்செய்தியை வாஞ்சையோடு கேட்கவும், புதிய ஏற்பாடுகளை பெற்றுச் செல்லவும் தேவன் கிருபை செய்தார். தைராய்டு சுரப்பியில் வீக்கம் ஏற்பட்டு அவதியுற்று வந்த லலிதா பென் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். கிறிஸ்துவை பின்பற்றி வாழ தீர்மானித்துள்ள 13 பேருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரந்தா மாணவர் விடுதியில் 6ஆம் வகுப்பு படிக்கும் எலேஷ் வினோத் மனநோயிலிருந்து சுகம் பெற; விபத்தில் சிக்கி காயமடைந்துள்ள தீபக்பாய் விரைவில் சுகமடைய; கௌதம் & வந்தனா தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; விடுதியில் படிக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் படிப்பிலும், ஆவிக்குரிய வாழ்விலும் சிறந்து விளங்க; விடுதியின் காப்பாளர் மற்றும் சமையல்காரர் அர்ப்பணிப்போடு பணிசெய்ய ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஷைலேஷ் ஜெபத்தினால் எழுந்து நடக்க ஆரம்பித்துள்ளார். தொடர் ஜெபத்தின் மூலம் எலிசா காசநோயிலிருந்து சுகம் பெற்று வருகிறார். போன்டா கிராம சபையில் நடத்தப்பட்ட சபை மூப்பர்களுக்கான பயிற்சி முகாமில் அநேகர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கல்பேஷ், விஷால், ஹர்ஜி மற்றும் விஜய் ஆகியோரை பாம்புக் கடியிலிருந்து காப்பாற்றின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பவானி, மீரா, குல்கி ஆகியோரை தேவன் குணப்படுத்த; கால் வீங்கி நடக்கயியலாமல் அவதியுறும் ஹன்ஸ்தா சுகமடைய; விலாஷ் & காக்டியா தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள; சிறுநீரகங்கள் பாதிப்படைந்துள்ள கல்பேஷை தேவன் பூரணமாய் குணப்படுத்த ஜெபிப்போம்.

### கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** வேலை செய்யுமிடத்தில் விஷப் பாம்பின் தீண்டுதலிலிருந்து வனிதா பெனை தேவன் பாதுகாத்தார். கர்ப்பப்பையில் தண்ணீர் குறைந்த நிலையில், சிக்கலான பிரசவத்தின்போது, ஜெபத்தைக் கேட்ட தேவன் ரவினா பெனின் குழந்தையை அற்புதமாய் பாதுகாத்தார். வசோனா கிராமத்தில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் திரளானோர் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12 வருடங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாக கர்ப்பம் தரித்துள்ள சரிதா பெனின் சுகப்பிரசவத்திற்காக; ஐந்து வருடங்களாக மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த சிக்காடா கிராமத்தைச் சேர்ந்த சிவ்பாய்க்கு தேவன் விடுதலை அருள; 12 ஆண்டுகளாக குழந்தையின்றி மன அழுத்தத்தில் அவதியுறும் ரஷிலா பெனை தேவன் குணப்படுத்தி குழந்தை பாக்கியம் அருள; சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து நீலேஷ், தோல் தொற்றிலிருந்து நீலேஷின் மகன் மற்றும் மன அழுத்தத்திலிருந்து ஜமுனி பென் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

**26**
**ஆகஸ்ட்**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சிந்து கோரா எட்வின்

## மகாராஷ்டிரா

### சுர்கானா:

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** சுவாசப் பிரச்சனையினால் அவதிப்பட்டு வந்த பப்லுன் கிராமத்தைச் சேர்ந்த துக்காராம் சௌத்ரி ஜெபக் கூட்டத்தில் பங்குபெற்று ஜெபித்தபோது தேவன் அவரை குணமாக்கினார். போர்பாடாவில் கட்டப்பட்டிருந்த ஆலயம் தேவ நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஜாய் விகிர் கிராமத்தில் பெண்கள் முயற்சியினால் புதிய ஜெபக்குழு துவங்க தேவன் கிருபை செய்தார். ரானரிபாடா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் தந்து வரும் திறந்த வாசலுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பில்லூர்பாடா, ரோகிட்பாடா, கும்ரிபாடா ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் துவங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெற; ரோகிட்விகிரியில் ஊழியம் வளர தடையாயிருக்கும் எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கோக்ரி, கோட்டுலா ஆகிய கிராமங்களில் புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி வளர; மழைக்காலத்தில் நடத்தப்படவுள்ள பயிற்சி முகாம்கள் நல்ல பலனைத் தர ஜெபிப்போம்.

### சோப்டா: வசாவா பாங்சிங்

**மௌலியா & ஏமன்பேன்**

**துதிக்க:** ஒருவருடமாக கர்ப்பப்பைக் கட்டியினால் அவதியுற்று வந்த துலாபென் ஜெபக் கூட்டத்தில் கலந்துகொண்டு விசுவாசத்தோடு ஜெபித்தபோது கட்டி மறைந்து போனது. விஷத் தேள் கடியினால் பாதிக்கப்பட்ட யுவராஜுக்கு தேவன் பூரண சுகமருளினார். எதிர்ப்புகளின் மத்தியிலும் சோப்டா கிராமத்தில் ஆராதனைக்குழு ஒன்று ஆரம்பிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதியில் பணி செய்ய அர்ப்பணமுள்ள வார்டன் கிடைக்க; புதிதாக சேர்ந்துள்ள 15 சிறுவர்கள் படிப்பிலும், தேவ அறிவிலும் சிறந்து விளங்க; மழைக்கால வியாதிகளிலிருந்து தேவன் பிள்ளைகளைப் பாதுகாக்க; விடுதி சமையல் காரரின் மனைவியான சர்மிளாவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; நற்செய்தியைக் கேட்கும் அனைவரும் ஜீவனுள்ள தேவனை விசுவாசிக்க ஜெபிப்போம்.

## *விஷம் முறிக்கப்பட்டது*

*மஹாராஷ்டிரா மாநிலம், பெயிண்ட் பணித்தளத்திலுள்ள காமத்பாடா என்ற கிராமத்தில் வசிப்பவர் நமது விசுவாசி பண்டுபாய். ஒருநாள் ஊருக்கு வெளியே இருக்கும் தன்னுடைய வயல் நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்த போது திடீரென காலில் வலி எடுக்கவே குனிந்து பார்த்த அவர், விஷப்பாம்பு தன்னை கடித்துவிட்டு செல்வதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். தேவனை நோக்கி ஜெபித்த அவர் இரத்தம் வழியும் காலை தன் துண்டால் கட்டிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார். அங்கு அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, எண்ணெய் பூசி ஜெபித்தனர். விஷம் அவரது உடலை பாதிக்காதவண்ணம் தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். தேவன் தனக்கு செய்த இந்த அற்புதத்தை அநேகருக்கு சாட்சியாகக் கூறி தேவ நாமத்தை மகிமைப்படுத்தி வருகிறார் பண்டுபாய். அல்லேலூயா!*

**27**
**ஆகஸ்ட்**
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஷீலா விக்டர்

## பெயிண்ட்:

### அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** இரண்டு பேர் புது வாழ்விற்குள் வந்துள்ளனர். இரவில் பிசாசின் தொந்தரவினால் தூங்க முடியாமல் தவித்து வந்த நிங்குரியின் வீட்டில் விசுவாசிகள் கூடி அவருக்காக பாரத்தோடு ஜெபித்த போது பிசாசின் தொந்தரவிலிருந்து தேவன் விடுதலை அருளினார். சிறுநீரகம் வீங்கி, சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்பட்டு வந்த பிரகாஷ்க்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். வலிப்பு நோயிலிருந்து கல்பேஷ்க்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவ்டொங்ரா மற்றும் போர்பாடா கிராம சபைகளின் நீதிமன்ற வழக்குகள் விரைவில் முடிவடைய; விசுவாசத்தி னிமித்தம் எதிர்ப்பாளர்களால் தாக்கப்பட்ட சாந்தாராமின் சரீர சுகத்திற்காக; 10 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வரும் அல்கா & விகாஷ் தம்பதி யினரை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க; திடீரென கேட்கும் திறனை இழந்துள்ள 7வது படிக்கும் சரிதாவுக்கு தேவன் மீண்டும் கேட்கும் திறனைத் தந்தருள ஜெபிப்போம்.

## போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** எட்டு பேர் பாவ இருளிலிருந்து தேவனுடைய மெய்யான ஒளியில் பிரவேசித்துள்ளனர். பகாபல்லா கிராமத்தில் புதிதாக ஜெபக்குழு ஒன்று துவங்க கர்த்தர் கிருபை செய்தார். கர்ப்பப்பையில் குழந்தை இறந்தது தெரியாமல் நீண்ட நாட்களுக்குப் பிறகு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த ஜலாபி பெனுக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது குழந்தை சுகமாக பிறக்க தேவன் கிருபை பாராட்டினார். இயேசு திரைப்படம் தடையின்றி திரையிட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சக்கு மற்றும் புடக்விஹார் கிராமங்களைச் சேர்ந்த முகேஷ் மற்றும் தீபக் மனநலப் பிரச்சனையிலிருந்து விடுதலைபெற; குட்டி மற்றும் ஜகன்பாய் சுவாசப் பிரச்சனை நீங்கி சுகம்பெற; பிக்கா மற்றும் ரத்தன் பாயின் கண் பிரச்சனை குணமாக; துஷா மற்றும் வாசி ஆகியோரின் தீராத ஒற்றைத் தலைவலி நீங்க; வரும் நாட்களில் நடக்கவிருக்கும் மூப்பர் மற்றும் சுதேச ஊழியர்கள் பயிற்சிகள் பயனுள்ளதாய் அமைய ஜெபிப்போம்.

## *மீண்டும் கிடைத்த பசு*

*ஒடிசா மாநிலம், ரிமுலி பணித்தளத்தின் கொங்கோனா கிராமத்தைச் சேர்ந்த சுகுர்மணி முண்டா பகல் முழுவதும் வேலை செய்து இரவில் தன் வீட்டிற்கு வந்தபோது வீட்டில் கட்டப்பட்டிருந்த அவரது பசுமாடு காணாமல் போயிருந்தது. இரவு முழுவதும் பசுவைத் தேடியும் கண்டுபிடிக்க முடிய வில்லை. படுக்கைக்கு செல்வதற்கு முன் தன் பசு மீண்டும் கிடைக்கும்படி தேவனிடம் ஊக்கத்தோடு ஜெபித்தார். இரவில் அவரது கனவில் அவரது பசு கிராமத்தின் கடைசியில் ஒரு பலா மரத்தின் அடியில் நிற்பதாகக் கண்டார். காலையில் அங்கு சென்று பார்த்தபோது பசு அங்கு நிற்பதைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தினார். அல்லேலூயா!*

## 28 ஆகஸ்ட்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எட்வர்ட் ஜெபசிங் J.
திருமதி. வசாவே சுனிதா வெச்யா

### தலாசரி:
### கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** பெண்களுக்கான சிறப்புக் கூடுகையில் 125 விசுவாசிகள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். பாம்பு தீண்டி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அனிதா என்ற சிறுமி விசுவாசிகளின் ஜெபத்தினால் காப்பாற்றப்பட்டாள். நக்சோரி, கோஷ்பாத் ஆகிய கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்க தேவன் கிருபை செய்தார். சபை மூப்பர் மற்றும் சுதேச ஊழியர்களின் ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிராந்திய அளவில் நடைபெறவுள்ள மேளா தடையின்றி சிறப்பாக நடைபெற; கிராம சபைகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; பாராட் மற்றும் தெக்கானே கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; குண்டாதிலிப், குக்குடு திலீப் ஆகியோரின் குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; வரும் நாட்களில் திட்டமிட்டிருக்கிற பயிற்சி முகாம்கள் தடையின்றி நடைபெற; இப்பகுதியில் தேவன் நல்ல மழையைத் தந்தருள ஜெபிப்போம்.

### தடுகோன்:
### எபிநேசர் சாமுவேல் & ஜோஸ்னா ஜெயராணி

**துதிக்க:** எட்டு பேர் மலர்ச்சிபெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். திரிஸ்மால் பகுதியில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். 15 வயது சிறுமி திக்குபாய் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது தெரியாமல் கீழே இருந்த பாம்பை கையில் எடுத்தபோதிலும் பாம்பு தீண்டாதபடி தேவன் பாதுகாத்தார். சுனிதாவின் கர்ப்பப்பை அறுவை சிகிச்சை நல்லபடியாக முடிய கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பேசும் திறனை இழந்துள்ள கன்ஜுபாய்க்கு தேவன் அற்புதம் செய்ய; அதீத உதிரப்போக்கினால் பெலவீனப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கோசடியா பென் சுகம்பெற; திரிஸ்மால், செல்பாரா, கட்டாரா, உம்டி, பான்பரி ஆகிய கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தாலும், சமுதாயத்திற்கு பயப்படுவதால் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். தேவன் இவர்கள் பயத்தை நீக்கவும், கிராமத் தலைவர்கள் தேவனால் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

**29**
**ஆகஸ்ட்**
**வெள்ளி**

### மந்தனா & பன்சேமால்:
**கொடிசெலா பிரவீன் & மௌனிகா**

**துதிக்க:** 12 வயதான கரினாவின் கை, கால்கள் திடீரென செயலிழந்துவிட்டன. மந்திரவாதங்களின் மூலம் சரியாகாத நிலையில் நமது விசுவாசிகள் மற்றும் ஊழியர்களை அழைத்து ஜெபித்தபோது கை, கால் செயல்பட ஆரம்பித்துள்ளது. கௌஸல் பாயின் சுவாசப் பிரச்சனை ஜெபத்தின் மூலம் சுகமானது. முதல் குழந்தை வயிற்றில் இறந்த நிலையில் தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட தனசிங்கின் குடும்பத்திற்கு ஆண் குழந்தையைத் தந்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலம்பா ஆலயக் கட்டுமானப் பணி விரைவில் முடிவடைய; பூஜை மற்றும் சிகிச்சைக்கு 7 இலட்சத்திற்கு மேலாக செலவழித்தும் சுகம் கிடைக்காத பானு பாய்க்கு தேவன் பூரண சுகமருள; ரூனா பாய் வாய் புற்றுநோயிலிருந்து சுகம்பெற; தன் மனைவியை இழக்கக் கொடுத்துள்ள சுக்லாலுக்கு தேவன் ஆறுதலளிக்க; இரத்தமாக மலம் கழிக்கும் ருஷியை தேவன் பூரணமாய் குணப்படுத்த ஜெபிப்போம்

## கர்நாடகா

### ஹலியால் & கானாப்பூர்:
**தாங்லால் ஸௌ & நெம்ஸாவா**

**துதிக்க:** சின்னப்பா, தங்கவ்வா, சுவர்ணா, ஹனுமந்தப்பா, நாகேஷ் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். இவாஞ்சலினுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். லஞ்சம் கொடுப்பதில்லை என்று தீர்மானித்திருந்த நமது விசுவாசி சௌபாக்கியாவுக்கு அங்கன்வாடி பணியாளராக வேலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். தேவனுக்கு நன்றி செலுத்தும்விதமாக இவர் தனது முதல் மாத சம்பளத்தை காணிக்கையாக தந்துள்ளார். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மத்னல்லி ஆராதனைக் குழுவில் 10 பேர் உற்சாகத்தோடு பங்குப்பெற்று வருகின்றனர். பிரசாந்தின் நீதிமன்ற வழக்கில் வெற்றி கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தடைப்பட்டிருக்கிற சோபாவின் நான்கு மாத சம்பளம் விரைவில் அவருக்கு கிடைக்க; லக்ஷ்மி, பிரேமா, மஞ்சுளா, ரீமா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்து ஆசீர்வதிக்க; தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய ஆயத்தமாயிருப்போரின் பயங்களை தேவன் நீக்க; நந்துகோட் கிராமத்தில் ஆலயம் கட்ட வாங்கிய நிலத்தில் விரைவில் கட்டிடப்பணி ஆரம்பிக்கப்பட; நிற்கவும், நடக்கவும் இயலாமல் அவதியுறும் ஐந்து வயது ரூத் என்ற சிறுமிக்கு தேவன் அற்புத சுகம் தந்தருள ஜெபிப்போம்.

**30**
**ஆகஸ்ட்**
சனி

### மாலூர்:

**கிஷாந்தா லிமா & பிரமிளா சிங்**

**துதிக்க:** 23வது ஆலய ஆண்டு விழாவை விசுவாசிகள் உற்சாகத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர். ஜீப் குழுவின் மூலம் எவ்வித தடையுமின்றி சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். பிரியாவுக்கு தேவன் ஏற்ற கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையைத் தந்தருளினார். அநேகர் வாஞ்சையோடு புதிய ஏற்பாடு மற்றும் வேதாகமத்தைப் பெற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதன்முறையாக இயேசு கிறிஸ்துவை குறித்து கேள்விப்பட்ட அனைவரும் இரட்சிக்கப்பட; மிஷனெரியின் சகோதரன் நாகேஷ்க்கு தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையை தந்தருள; கடன் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசிகள் அதிலிருந்து மீண்டுவர; ஆலம்பாடி ஆலயத்தின் நிலப்பிரச்சனை விரைவில் முடிக்கப்பட; விசுவாசத்தை அறிக்கையிட வாஞ்சிப்போருக்கு குடும்பத்தினரின் மூலம் தடைகள் வராமலிருக்க ஜெபிப்போம்.

### ஷிக்காவ்:

**நரேந்திரா குமார் & காஜல்**

**துதிக்க:** இரண்டு பேர் மலர்ச்சிபெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். இப் பணித்தளத்திலிருந்து ஆகாஷ் என்ற வாலிபர் முழுநேர மிஷனெரியாக நமது இயக்கத்தில் இணைந்துள்ளார். மிஷனெரியின் திருமணம் தேவ நாமம் மகிமைப்படும்படி ஆசீர்வாதமாய் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்திலிருந்து சுரேஷையும், சரீரத்தில் கட்டியினால் அவதியுறும் அர்ப்பித்தாவையும் தேவன் குணப்படுத்த; புதிய விசுவாசியான யஷ்வந்த் வலிப்பு வியாதியிலிருந்து சுகம்பெற; நவஜீவன் சேவா மண்டல் மூலம் கல்வி உதவி பெறும் பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்திற்கான இடம் விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

## போஷிக்கும் தேவன்

*மத்தியப்பிரதேச மாநிலம் பர்வானி மாவட்டத்திலுள்ள நிவானி பணித்தளத்தில் வசித்து வருபவர் நமது விசுவாசி பிரகாஷ். இவர் தன்னுடைய மூத்த சகோதரனை சிகிச்சைக்காக அருகிலுள்ள குஜராத் மாநில பரோடா நகரிலுள்ள மருத்துவ மனையில் சேர்த்திருந்தார். 15 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் கொண்டு வந்த பணம் அனைத்தும் செலவழிந்து போனது. மருத்துவரின் ஆலோசனைப்படி இன்னும் மூன்று நாட்கள் தங்கி சிகிச்சை எடுக்கவேண்டிய நிலையில், அவரது கையில் ரூ.10/- மட்டுமே இருந்தது. தெரிந்தவர்கள் யாரும் உடனில்லை, ஊரும் தூரத்திலிருந்தது. எனவே படுக்கை அருகில் மண்டியிட்டு அழுது ஜெபித்தார். அதிகாலை எழுந்து வெளியே வந்தபோது ஒருநபர் அவரிடம் ரூ.1,600/- கொடுத்து “இது உங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று நான் உள்ளத்தில் உணர்த்தப்பட்டேன்” என்று கூறி, அவர் யார் என்று கேட்பதற்குள் சென்றுவிட்டார். தேவன் அற்புதமாய் தன்னை போஷித்ததை எண்ணி தேவனை மகிமைப்படுத்தினார் விசுவாசி பிரகாஷ். அல்லேலூயா!*

**31**
**ஆகஸ்ட்**
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிறிஸ்டோபர் P.G.
திரு. பாலாஜி ஏசுதாஸன் G.
திரு. ரஞ்சன் காசலே

## ஆந்திரப் பிரதேசம்

### பலமநேர்:

**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** கொலமாசனபள்ளி ஆலயத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் அநேகர் கலந்துகொண்டு தேசத்திற்காக ஊக்கமாக ஜெபித்தனர். மூன்றுபேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். தொண்டை புற்றுநோய் அறுவை சிகிச்சைக்குப்பின் வெங்கட லக்ஷ்மம்மா நன்றாக பேச தேவன் கிருபை புரிந்தார். அதிகாலை 5 மணிக்கு நடைபெறும் ஆன்லைன் ஜெபத்தில் அநேகர் கலந்து கொண்டு ஜெபித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** அரசாங்கத் தேர்வு எழுதி முடிவுக்காக காத்திருக்கும் காஞ்சனா, சிறுவாணி, லதா, மாலவிகா, சரஸ்வதி ஆகியோருக்கு வேலை கிடைக்க; புற்று நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ரூத் நாராயணம்மா பூரண சுகம்பெற; சரீர சுகவீனம், பொருளாதார தேவை மற்றும் குடும்பப் பிரச்சனைகளினால் துன்புறும் விசுவாசி விதவை தீபம்மாவுக்கு தேவன் உதவி செய்ய; மனைவியை இழக்கக் கொடுத்துள்ள புதிய விசுவாசியான சுப்பிரமணிக்கு தேவன் ஆறுதலைத் தந்தருள; தாலாப்பள்ளி ஆலயத்தின் சுற்றுச்சுவர் பராமரிப்புப் பணி விரைவில் துவங்கப்பட ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### மேச்சேரி:

**தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி**

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் துரைசாமி என்பவர் உற்சாகத்துடன் உதவி செய்து வருகிறார். அழகர்கொண்டனூர் மற்றும் செவ்காட்டனூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து ஊழியங்களிலும் கர்த்தரின் பாதுகாப்பின் கரம் ஊழியர்களுடன் இருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நல்லகௌண்டனூர் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேஷனுக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்த இடத்தில் நீர் வடிகிறது. தேவன் அவரை குணப்படுத்த; கணவனை இழந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழும் மகேஸ்வரிக்கு படிப்பிற்கேற்ற நல்ல வேலை கிடைக்க; ஸ்ரீரஞ்சனி மன அழுத்தத்திலிருந்து விடுதலைபெற; கீழே விழுந்து நடக்க முடியாமலிருக்கும் கணேஷனை தேவன் குணப்படுத்த; தாமரை செல்வனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; செல்வ நாயகம், செல்வராஜ், தம்பிதுரை, நல்லதம்பி ஆகியோரை குடியின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

408
மிஷனரி
ஆல்பம்



# அருள்திரு. ஏ. ராமகிருஷ்ணா எலியா & திருமதி. அஞ்சலி பந்துமில்லி

ஆந்திரப்பிரதேசத்தின் ஏலூரைச் சேர்ந்த திரு. வெங்கடேஸ்வர் ராவ் & திருமதி. ரங்கம்மா ஆகியோருக்கு 05.04.1982 அன்று திரு. ஏ. ராமகிருஷ்ணா மகனாகப் பிறந்தார். இவரது தந்தையின் மரணத்திற்குப் பின் தனது தாத்தா பாட்டியால் வளர்க்கப்பட்டார். 1995ஆம் ஆண்டு போதகர் ஐ. ஜெயராஜ் அவர்களது கூட்டத்தில் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு 24.01.1996 அன்று எலியா என்ற பெயருடன் ஞானஸ்நானம் பெற்றார். கர்த்தரின் கிருபையால் அவர் தனது முதுகலைப் படிப்பையும், B.Ed. படிப்பையும் முடித்தார். ஆசிரியராக வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் இரத்த சாட்சிகளின் வாழ்க்கை மூலம் பெரிதும் ஈர்க்கப்பட்டு தேவனுடைய பணியைச் செய்ய விரும்பினார். 2010ஆம் ஆண்டு ஏலூரில் நடத்தப்பட்ட IEM மாநில மிஷன் மாநாட்டில் கலந்துகொண்டபோது ஏசாயா 41:9-10 வசனங்களின் மூலம் **“நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்”** என்ற கடவுளின் அழைப்பைக் கேட்டு தனது வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தார். மறைந்த திருமதி. சமாதானம்மா மற்றும் மறைந்த FMPB மிஷனெரி அருள்திரு. கே. இஸ்ரேல் அவர்களால் வழிநடத்தப்பட்டு 17.06.2010 அன்று FMPBயில் முழுநேர ஊழியராக இணைந்தார். சில மாதங்கள் தணிக்கை அலுவலகத்தில் பணியாற்றிய பின்னர் ஒரு வருடம் தேசிய மிஷனெரி பயிற்சி மையத்தில் பயிற்சிப்பெற்றார். அதன்பின் ஜார்கண்டிலுள்ள ஹன்ஸ்டிகா பணித்தளத்தில் சந்தால் இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார்.

ஆந்திரப்பிரசேதம், மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள குடிபாடு கிராமத்தில் ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் திரு. ரங்காராவ் & திருமதி. கமலா ஆகியோருக்கு 30.05.1985 சகோதரி அஞ்சலி பந்துமில்லி மகளாகப் பிறந்தார். இவருக்கு ஒரு சகோதரி, ஒரு சகோதரன் உள்ளனர். பெயரளவில் கிறிஸ்தவராக இருந்த இவர் MCA படிப்பின்போது ஹைத்ராபாத்தில் ப்ராஜெக்ட் வேலையைச் செய்து வந்தார். அப்போது புராட்டஸ்டன்ட் தேவாலய ஆராதனையில் கலந்துகொண்டபோது இவரது வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. யோவான் 3:16 வசனத்தின் மூலம் தொடப்பட்ட இவர் தனது வாழ்க்கையை முழுநேர ஊழியத்திற்கென அர்ப்பணித்தார். தனது சிநேகிதியின் வீட்டில் கிடைத்த FMPB பத்திரிக்கைகளால் ஈர்க்கப்பட்டதோடு, பழங்குடியின மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய தேவனின் அழைப்பையும் உணர்ந்தார்.

சகோதரி அஞ்சலி 02.08.2012 அன்று திரு. ராமகிருஷ்ணா எலியாவை திருமணம் செய்தார். பின் FMPBயில் இணைந்து ஒரு வருடம் மிஷனெரி பயிற்சிப் பெற்றார். அச்சமயம் திரு. ராமகிருஷ்ணா ஒரு வருடம் தேசிய மிஷனெரி பயிற்சி மையத்தில் ஊழியராக பணியாற்றினார். 2013ஆம் ஆண்டு குடும்பமாக மேற்கு வங்காளத்திலுள்ள சாம்சி பணித்தளத்தில் ஆறு மாதங்கள் பணியாற்றினர். 2014 முதல் 2020 வரை இட்டாஹர் பணித்தளத்தில் முன்னோடி மிஷனெரிகளாக ஊழியம் செய்தனர். 2020 முதல் பஹுவாஹட் பணித்தளத்தில் ஊழியம் செய்து வருகிறார்கள். இவர் 11.12.2024 அன்று N.E.L.C. தும்கா திருமண்டலத்தின் மூலம் குருத்துவ அபிஷேகம் பெற்றார்.

தேவன் இவர்களுக்கு இரண்டு பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகன் ஜீவன் பிரின்ஸ் (10.08.2013) 7ஆம் வகுப்பும், மகள் ஜீவனா ஆரத்யா (22.01.2016) 5ஆம் வகுப்பும் டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இந்த மிஷனெரி குடும்பத்தையும், அவர்கள் ஊழியத்தையும் நம் ஜெபத்தில் தாங்குவோம்.

**409**
**மிஷனரி ஆல்பம்**



# திரு. முத்துகுமார் & திருமதி. நேத்ராவதி

திரு. முத்துகுமார், தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் தாலுகாவிலுள்ள அழகநேரி கிராமத்தில் காலஞ்சென்ற திரு. மாசானம் & திருமதி. இசக்கியம்மாள் தம்பதியினருக்கு ஒரே மகனாக 18.05.1985 அன்று பிறந்தார். தந்தையின் குடிப்பழக்கத்தினால் சாமாதானத்தை இழந்து தவித்த வேளையில், சக மாணவர்கள் மூலம் இவர் தேவனின் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றார். உள்ளூர் திருச்சபையில் 2003இல் திருமுழுக்குப்பெற்று சிறுவர் மற்றும் சுவிசேஷ ஊழியத்தை செய்து வந்தார். திருச்சபையில் வாலிபர் கூடுகை மூலம் ஊழிய பாரத்தைப் பெற்றார். மேலும் ஆர். ஸ்டான்லி அவர்கள் எழுதிய 'அழகான பாதங்கள்' என்ற மிஷனெரி தரிசனப் புத்தகத்தின் மூலம் ஒரு ஆலயம் கூட இல்லாத மாவட்டங்கள், தாலுகாக்கள், கிராமங்கள் வட இந்தியாவில் உண்டு என்பதை அறிந்து கொண்ட இவர், வட இந்தியாவில் ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, 01.09.2006 ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுநேர ஊழியராக இணைந்தார். ஊழிய பயிற்சிக்குப் பின் ஜம்மு காஷ்மீரில் உள்ள நெளசேரா பணித்தளத்தில் தன் மிஷனெரி ஊழியத்தை ஆரம்பித்தார்.

சகோதரி நேத்ராவதி, கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி தாலுகா, காளிங்கவரம் கிராமத்தில் காலஞ்சென்ற திரு. நரசிம்மன் & திருமதி. பங்கஜா ஆகியோருக்கு மூத்த மகளாக 10.06.87 அன்று பிறந்தார். குடும்பத்தில் உள்ள சாபத்தினிமித்தம் தனது இரண்டாவது வயதில் தகப்பனை இழந்தார். சாபம் மாறும்படி பல கோவில்களுக்குச் சென்று பரிகாரம் தேடியும் கிடைக்காத நிலையில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மிஷனெரி அருள்திரு. எட்வின் அவர்களின் மூலம் மெய்யான பரிகாரியாகிய இயேசுவை அறிந்து, விசுவாசித்து குடும்பமாக 1995ஆம் ஆண்டு திருமுழுக்குப் பெற்று, சூளகிரி FMPB திருச்சபையில் அங்கத்தினர் ஆனார்கள். சகோதரி நேத்ராவதி இடையன்குடியிலுள்ள FMPB விடுதியில் தங்கிப் படித்து வரும்போது, சுவிசேஷ இரதம் நிகழ்ச்சியின் மூலம் வடஇந்திய ஊழியத்தின் பாரத்தைப் பெற்றார். அதன்பின் 2007இல் நமது இயக்கத்தில் முழுநேர மிஷனெரியாக இணைந்து ஊழியப் பயிற்சி பெற்று மஹாராஷ்டிராவில் உள்ள எட்டப்பள்ளி சிறுவர் விடுதியில் தனது ஊழியத்தை ஆரம்பித்தார்.

தேவனுடைய சித்தத்தின்படி 24.05.2010 அன்று திரு. முத்துகுமார் & சகோதரி நேத்ராவதியின் திருமணம் நடைபெற்றது. பின்னர் குடும்பமாக உத்தரப்பிரதேசம், பொக்ராயன் பணித்தளத்தில் மூன்று வருடமும், மேங்கு வங்காளம் சுந்தர்பான்சி பணித்தளத்தில் இரண்டு வருடமும் பணிசெய்த இவர்கள் 2015 முதல் சத்தீஸ்கர் மாநிலத்தில் அம்பிகாபூர், பையாதான் மற்றும் சீதாப்பூர் பணித்தளத்தில் கோண்ட், ஒராவன், கோர்வா ஆகிய இன மக்கள் மத்தியில் ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

இத்தம்பதியினருக்கு தேவன் இரண்டு பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மகள் எஸ்தர் பிரிஸ்கில்லா (17.03.2011) 10ஆம் வகுப்பும், மகன் அகபஸ் மேஷாக் (06.08.2013) 8ஆம் வகுப்பும் டோனாவூர் சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இவர்களது ஊழியம் மற்றும் பிள்ளைகளின் படிப்பிற்காக ஜெபிப்போம்.

Regd. Newspaper for India No.17759/69

# மாநில அளவிலான 3 நாள்

# தேசிய உபவாச ஜெப முகாம்



நாள்: 2025 ஆகஸ்டு 8 வெள்ளி காலை
10 மணி முதல் 10 ஞாயிறு மதியம் 2 மணி வரை

இடம்: அன்றன்றுள்ள அப்பம் ஜெபமண்டபம்,
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர்

செய்தியாளர்கள்: Rev. M. ராஜ், சென்னை
பாஸ்டர். ராஜா, நாகர்கோவில்
Rev. விஜய் P. ஐசக், பொது செயலர், FMPB.

தரிசனமிகு பாடல்கள் · துதி, மன்றாட்டு ஜெப நேரங்கள்
அனலூட்டும் செய்திகள் · பணித்தளப் பகிர்வுகள்

**பாரத தேசம் இயேசுவின் அன்பினைக் கண்டிட, தேவனின் பாதத்தில் அமர்ந்து உபவாசித்து ஜெபிப்போம் வாருங்கள்!**

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தங்குவதற்குத் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு, பேனா, போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள். 10ஆம் தேதி உபவாச ஜெபம் முடிந்தபின் உணவு வழங்கப்படும்.

**முகாம் வளாகம் வந்தடைய:**

- ஜோலார்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து (திருப்பத்தூர் வழியாக) 13 கி.மீ. தூரத்திலும், திருப்பத்தூர் இரயில் / பஸ் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலும் கிறிஸ்துகுல ஆசிரமம் அமைந்துள்ளது.
- பஸ்ஸில் பயணித்து வருவோர் திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் இறங்கலாம்.
- இரயிலில் பயணித்து வருவோர் ஜோலார்பேட்டை அல்லது திருப்பதூர் இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- ஆகஸ்டு 8ஆம் தேதி வெள்ளி அதிகாலை முதல் காலை 10 மணி வரை ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூர் இரயில் நிலையத்திலிருந்து கிறிஸ்துகுல ஆசிரமம் வந்து சேர வாகன வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வாகன வசதிக்கு தொடர்புகொள்ள:
**சகோ. தேவசுந்தரம் 9444347400 / 8667615516 சகோ. தியோடர் – 9751331155**

*முகாம் குறித்த விபரங்களுக்கு:* **நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை – 600 053.
தொலைபேசி: 044-26574343, 9488805454, 9444396208

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***